விரைவில் வருகிறது

பவளக்கொடி

இசை நாடகம்

வேதாள உலகத்தில் சிறந்த அம்சங்களில் இது ஒன்று....

பாடுபவர்கள்	நடிகர்கள்
பி.ஏ.பெரியநாயகி	குமாரி கமலா
டி.எஸ்.பகவதி	லலிதா
எம். எஸ்.ராஜேஸ்வரி	பத்மினி
டி.வி.ரத்னம்	காந்திமதி

டி. ஆர்.மஹாலிங்கம் நடிக்கும்

AVM புரொடக்ஷன்ஸ்

வேதாள உலகம்

தமிழ்

(ராவ் பகதூர் ப.சம்பந்த முதலியார் எழுதிய கதையைத் தழுவியது)

நடிகர்கள்:-

K.சாரங்கபாணி....... யோக மங்களம்

R.பாலசுப்ரமணியம் ....K.R.செல்லம்

G.M.பஷீர்............. C.T.ராஜகாந்தம்

கொளத்து மணி...... ....B.சந்திரா

கண்டுகளியுங்கள்

நாட்டிய கலாமணிகள் முதல் முறையாக
ஒருங்கு சேர்ந்து நடன விருந்தளிக்கிறார்கள்

குமாரி கமலா · லலிதா · பத்மினி · தாரா சௌத்ரி · யோக மங்களம்

இன்னும்

கான ஸரஸ்வதி D.K.பட்டம்மாள் பாரதி பாடல்களைப் பாடுகிறார்
அதற்கு குமாரி கமலா நாட்டிய மாடுகிறார்..

டைரக்ஷன்:
AV.மெய்யப்பன்

அஸோசியேட் டைரக்ஷன்:
M.V.ராமன் & P.நீலகண்டன்

AVM PRODUCTIONS

விரைவில் தமிழ்நாட்டின் முக்கிய இடங்களில் வெளியாகிறது...

G.H.RAO

விரைவில் வருகிறது !...
1948ம் ஆண்டின் மகோன்னத
..இசைச்சித்திரம்..
இசைவாணி
U.R.ஜீவரத்னம்
P.S.கோவிந்தன்
நடித்த
ஸ்ரீ
சூர்யா பிலிம்ஸாரின்
ஆண்டாள்
தமிழ்
வித்வான் சீனிவாசன் • S.D.சுப்பையா
சௌதாமினி • மாதவன் • காளி N.ரத்னம்
P.S.ஞானம் மற்றும் பலர் நடித்தது..
டைரக்ஷன் வேல்சாமி கவி • உதவி S.K.ராமராஜ் • ஸ்டூடியோ மாடர்ன்
G.H.RAO
விவரங்களுக்கு: சேலம் சூர்யா பிலிம்ஸ்
எக்ஸ்டென்ஷன். சேலம்.

குண்டூசி

பிரதி மாதம் வெளிவரும்

தமிழ் நாட்டின் அதிக விநியோகமுள்ள கலைப் பத்திரிகை

சந்தா விவரம்

உள் நாடு

வருஷ சந்தா ...	ரூ.	6
ஆறுமாத சந்தா...	ரூ.	3
தனிப் பிரதி	அணா	8

இலங்கை

வருஷ சந்தா	...ரூ.	6
தனிப் பிரதி	சதம்	50

வெளி நாடு

வருஷ சந்தா ...	ரூ.	9
தனிப் பிரதி	அணா	12

★

விளம்பர விகிதங்கள்

(ஒரு தடவைக்கு)

அட்டை

முன் பக்கம் ...	ரூ,	450
கடைசி பக்கம்	ரூ.	250
2,3-ம் பக்கம்	ரூ,	150

சாதாரணப் பக்கம்

ஒரு பக்கம்	...ரூ.	75
அரைப் பக்கம்	...ரூ.	40
1/3 பக்கம்	...ரூ.	30
கால் பக்கம்	...ரூ.	25

வர்ண விளம்பரங்களுக்கு
25% அதிகம்

இந்த ஊசியில்

தணிக்கை முறை ... தலையங்கம் 5
பரஸ்பரம் 6
உள்ளது உள்ளபடி ... "ஜடாயு" 7
இரவல் குரல் ... கேலிச் சித்திரம் 9
தகுந்த தண்டனை ... சர்மராஜ் 10
பத்மினி ... ஆர்ட் படம் 13
கண்ணாம்பா ... மூவர்ணப் படம் 14
கண்ணாம்பா ... வாழ்க்கை வர்ணனை 15
குண்டூசியைக் கேளுங்கள் 23
செய்திப் படங்கள் 31
பொதுஜனம் பேசுகிறார் 39
துனிப் புல் ... "வெட்டுக்கிளி" 43
இது செய்தி 47
சேம்பரில் கல்வி மந்திரி பிரசங்கம்... 54
யூ. ஆர். ஜீவரத்தினம் ... ஆர்ட் படம் 55
டி. வி. குமுதினி ... ஆர்ட் படம் 56
ஜோஸியம் பலித்தது தமாஷ் சித்திரம் 60
பட தணிக்கை போர்டு கொள்கை
புதிய விதிகள்... 62
பிரம்மலோகம் ... படச் செய்திகள் 65
சம்ஸார நௌகா ... பட விமர்சனம் 66
குண்டூசி டைரி 68

கட்டுரையாளர்களுக்கு :

"குண்டூசி"க்கு கேள்விகள், நேயர்களின் அபிப்பிராயங்கள், வெளியூர் சினிமா நிகழ்ச்சிகள், சினிமா சம்பந்தமான விகடத் துணுக்குகள், சித்திரங்கள், கட்டுரைகள், கதைகள் இவையெல்லாம் வரவேற்கப்படுகின்றன. எழுதி அனுப்புபவைகளை காகிதத்தின் ஒரே பக்கத்தில் மையினால் சுத்தமாக எழுதி அனுப்ப வேண்டும். அங்கீகரிக்கப்படாதவைகளை திரும்பப் பெற விரும்புகிறவர்கள் ஸ்டாம்பு வைத்தனுப்ப வேண்டும். கட்டுரையாளர்களுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளுவது சாத்தியமில்லை.

"குண்டூசி", 246, தம்பு செட்டி தெரு, சென்னை 1

WATCHES · CLOCKS
TIME PIECES · FOUNTAIN PENS
ROLLED GOLD JEWELLERY
GIFT ARTICLES, ETC.

E. A. WATCH COMPANY

EST^D 1915
RATTAN BAZAR
— MADRAS —

நீல மாளிகை

மதுரையில், மனதிற்குத் திருப்தி அளிக்கும்

பட்டு, ஜரிகை, நூல் ஜவுளிகள்

கண்ணைக் கவரும் ரகங்களில் கிடைக்கும்.

இன்றே விஜயம் செய்யுங்கள்.

கே. எஸ். பெருமாள் முதலியார் & சன்ஸ்

3/4 தெற்கு சித்திரை வீதி, மதுரை.

பட்டை 1
ஊசி 10

குண்டூசி

ஜூலை
1948

ஆசிரியர்
பி.ஆர்.எஸ்.கோபால்

தணிக்கை முறை

சென்ற ஒரு வருஷ காலமாக சென்னை சினிமாப் பட தணிக்கை போர்டார் ஒரு புதுக் கொள்கையுடன் படங்களைப் பரிசீலனை செய்து வருகின்றனர். இதன் விளைவாக சில படங்களில் சில காக்ஷிகள் வெட்டப் பட்டபோது கூக்குரல் கிளம்பியது. தணிக்கை போர்டார் தங்கள் புதுக் கொள்கை இன்னது; எந்தக் காக்ஷிகளை, விஷயங்களை அனுமதிக்க மாட்டார்கள் என்பதை விளக்காமலிருந்ததால் குழப்பமும், வாக்கு வாதங்களும் ஏற்பட்டன.

இனி அதெற்கெல்லாம் இடமில்லை. சென்னை சினிமா தணிக்கை போர்டுத் தலைவர் தம் போர்டின் கொள்கை என்னவென்பதையும் பட தணிக்கை விஷயத்தில் என்னென்ன விதிகள் அநுஷ்டிக்கப்படுமென்பதையும் ஒரு அறிக்கை மூலம் சமீபத்தில் வெளிப்படுத்தி விட்டார். அதை இவ்வூசியில் வேறொரு பக்கத்தில் வெளியிட்டிருக்கிறோம்.

தலைவர் வெளியிட்டிருக்கும் அறிக்கை (தணிக்கை விதிகள்) யாவராலும் ஒப்புக் கொள்ளக் கூடியதாகவே இருக்கிறது. படங்களிலிருந்து ஆபாசத்தை ஒழிப்பது அத்தியாவசியமாகும். அதற்கு யாரும் ஆக்ஷேபனை சொல்ல முடியாது.

இது சம்பந்தமாக கடுமையான விதிகள் செய்யப்பட்டுள்ளன. புராணங்களை எடுத்துக் கொண்டு தாறுமாறாய் சித்திரிப்பதை ஒழிக்கவும் புதிய விதிகள் இடம் அளிக்கின்றன.

இந்தப் புதிய விதிகளை சினிமா உலகம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இனியாவது இத் தொழில் ஒரு கட்டுப்பாட்டிற்கு உட்பட்டுப் படங்களைத் தயாரித்தால்தான் எதிர் காலத்திலாவது இத் தொழிலுக்கு விமோசனம் ஏற்படும். இதை நம் பட முதலாளிகள் உணர வேண்டும்.

தணிக்கை போர்டாருக்கு ஒரு வேண்டுகோள். சமீபகாலமாக தணிக்கை முறைகளில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. சில படங்களில் வெட்டப்படும் காக்ஷிகளை வேறு சில படங்களில் அநுமதித்துள்ளனர். இது போல் அநுஷ்டான முரண்பாடுகள் இனி ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுவார்களாக.

பரஸ்பரம்

“நேயர்களுடன் பேசி ரொம்ப நாளாகி விட்டதே” என்ற எண்ணம் சில தினங்களுக்கு முன் எனக்கு ஏற்பட்டதால் இப்பகுதி தோன்றியிருக்கிறது. இந்த எண்ணத்தை ஏற்படுத்தி விட்டதும் அவர்கள்தாம்.

“குண்டூசி ’யின் முதல் மலர் எப்பொழுது வரப்போகிறது?” “சுதந்திர மலர் வெளியிடப் போகிறீர்களா?” “ஆண்டு மலர் தயாராகிறதா?” என்று இதுபோல நண்பர்கள் பலர் கேட்டிருக்கிறார்கள். எழுதிக் கேட்டிருக்கும் நண்பர்களுக்கு மட்டுமன்றி, எழுதிக் கேட்காத அநேக நேயர்களுக்கும் இவ் விஷயங்களைத் தெரிந்து கொள்ள ஆவலாயிருக்கும் என்பது எனக்குத் தெரியும். ஆதலால் அதை இங்கே வெளியிடுகிறேன்.

அடுத்த மாதத்தில் சுதந்திர மலரையும், அடுத்தாற்போல் இரண்டு மாதங்களில் ஆண்டு மலரையும் வெளியிடுவது உசிதமல்ல; சாத்தியமும் அல்ல. ஆதலால் “குண்டூசி” ஆண்டு மலரை மட்டும் அடுத்த அக்டோபர் மாதத்தில் தீபாவளியின் போது வெளியிடத் தீர்மானித்திருக்கிறேன்.

இந்த ஆண்டு மலர் மிக கவர்ச்சிகரமாயும், படிப்பதற்கும், பார்ப்பதற்கும் நிறைய விஷயங்கள் உள்ளதாயும், நேயர்கள் கொடுக்கும் விலைக்குப் பன் மடங்கு மதிப்பளிப்பதாயும் இருக்க வேண்டும் என்பது என் விருப்பம். ஆண்டு மலர் சம்பந்தமான வேலைகள் இப்பொழுதிருந்தே ஆரம்பமாகி விட்டதென்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

* * *

“பொது ஜனம் பேசுகிறார்” பகுதி பொழுது போக்கிற்காகவோ, பக்கங்களை நிரப்புவதற்காகவோ ஏற்படுத்தப் பட்டதல்ல. பொது ஜன அபிப்பிராயத்திற்கு அதிக மதிப்பை உண்டு பண்ணி, சினிமாக் கலையை அவர்கள் விரும்பும் வகையில் மாறும்படி செய்வதே என் நோக்கமாகும். ஆதலால் உங்களுக்காக ஏற்படுத்தப் பட்டுள்ள இப் பகுதியை நீங்கள் சரிவரப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். உங்கள் அபிப்பிராயங்களை ஆணித்தரமாய் தெரிவிக்க வேண்டும். இப் பகுதியைப் படத் தொழில் சம்பந்தப்பட்டவர்கள் கவனத்துடன் படிக்கிறார்கள். சில கடிதங்களில் குறிப்பிட்டுள்ள தியேட்டர் குறைகளை நீக்குவதற்கு அதன் முதலாளிகள் முயற்சித்து வருவது சந்தோஷிக்கத் தக்கது. பொது ஜனங்கள் சார்பாக அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

* * *

சினிமா சம்பந்தமான ஹாஸ்யத் துணுக்குகளை நான் நிறைய வெளியிட விரும்புகிறேன். ஆதலால், சினிமா, நாடகம், சங்கீதம், ரேடியோ, காலக்ஷேபம் போன்ற கலைகள் சம்பந்தமான ஹாஸ்யத் துணுக்குகளை நிறைய எழுதி அனுப்புங்கள், ஆனால் அவை இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் வந்ததாய் இருக்கக் கூடாது என்பதை கண்டிப்பாய் கவனிக்கவும். “குண்டூசி” ஏற்றுக் கொண்டு வெளியிடும் ஒவ்வொரு ஹாஸ்யத் துணுக்கிற்கும் இரண்டு ரூபாய் பரிசளிக்கப்படும்.

* * *

நேயர்கள் பலரிடமிருந்து, தங்களுக்கு “குண்டூசி” தபால் மூலம் சரிவரக் கிடைப்பதில்லை என்ற புகார்கள் நிறைய வந்து கொண்டிருக்கின்றன. இது எனக்கு ஒரு விதத்தில் சந்தோஷத்தையே அளிக்கிறது. ஏனென்றால், நல்ல பத்திரிகைகளைத்தானே திருடியாவது படிக்க வேண்டுமென்ற எண்ணம் ஏற்படும்? நான் சந்தோஷம் அடைவதற்காக நேயர்கள் பிரதிகள் கிடைக்காமல் வருந்திக் கொண்டிருப்பதை நான் விரும்பவில்லை. ஆனால் அவர்களைச் சந்தோஷிப்பதற்காக மீண்டும் பிரதிகளை அனுப்புவதும் சாத்தியமல்ல. எனவே, பிரதிகள் கிடைக்கப் பெறாதவர்கள் தங்கள் ஊர் போஸ்ட் மாஸ்டரிடம் புகார் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

—ஆசிரியர்

உள்ளது உள்ளபடி

சென்னை பாரகன் டாக்கீஸிற்கு நிரந்தர லைசென்ஸ் அளிக்க முடியாதென சென்னை போலீஸ் கமிஷனர் மறுத்து விட்டாராம். காரணம், இத் தியேட்டருக்குள் மோட்டார்களை நிறுத்துவதற்கான இடவசதி செய்யப்படவில்லை என்பதாம்.

இந்த பாரகன் டாக்கீஸ் சென்னையில் பல வருஷங்களாக நடந்துவரும் நிரந்தரத் தியேட்டராகும். முதலில் ஆங்கிலப்படத் தியேட்டராக இருந்த இது, பிறகு தமிழ்ப் படத் தியேட்டராக மாற்றப் பட்டது. சுமார் இரண்டு வருஷங்களுக்கு முன்பு (மோஹினி ருக்மாங்கதா படம் காட்டப்பட்டபோது) அதிக மழை காரணமாக சுவர் இடிந்து உயிர்ச் சேதத்தை உண்டு பண்ணியது நேயர்களுக்கு ஞாபகமிருக்கும். அதன் பின் இதன் சொந்தக்காரரான ஸ்ரீ. நரஸூ இத் தியேட்டரை பூராவாக இடித்துவிட்டு புதிய முறையில் புனர் நிர்மாணம் செய்திருக்கிறார். எனவே கட்டடம் புதிது என்றாலும் இதைப் புதுத் தியேட்டர் என்று எப்படிக் கருத முடியும்? இவ்வளவு வருஷங்களாக போக்குவரத்துக்கு இல்லாத இடையூறு புதிதாக இப்பொழுது ஏற்பட்டுவிடவில்லை. புதிதாய்த் தோன்றும் தியேட்டர்கள் விஷயத்தில் மட்டும் இக் கொள்கையை வற்புறுத்துவதே சரியாகும். புனர் நிர்மாணம் செய்யப்பட்ட ஒரு பழைய தியேட்டரை புதிய தியேட்டராக பாவித்து போலீஸ் கமிஷனர் லைசென்ஸ் மறுப்பது நியாயமாகாது.

தியேட்டருக்கு வெளியிலேயே மோட்டார்களை நிறுத்தி வைக்க வசதி செய்யலாம் என்று தியேட்டர்காரர்கள் கூறுகின்றனர். வாலாஜா ரோடின் இப்பகுதியில் போக்குவரத்து ரொம்பவும் அதிகம் என்று சொல்ல முடியாது. மேலும் தியேட்டர் சமீபத்தில் ரோடிற்கு இரு பக்கமும் விசாலமான பிளாட்பாரம் இருக்கிறது. ஆகவே மோட்டார்களை நிறுத்துவதற்கு வசதி செய்வதில் சிரமமிராதென்றே எனக்குத் தோன்றுகிறது. ஆகவே கமிஷனரை, இத் தியேட்டருக்கு நிரந்தர லைசென்ஸை அளித்து, இந்த வசதிகளையும் செய்து தரும்படிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சர்க்கார் நிர்வாகத்தில் சினிமா

மேற்கு வங்காள சர்க்கார் துணிந்து ஒரு காரியத்தை—இந்தியாவிலேயே முதன் முதலாக—செய்யப் போகிறது. சினிமாத் தொழிலைத் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டு நடத்தத் தீர்மானித்திருக்கிறதாம். அதாவது படத் தயாரிப்பு, விநியோகம், படம் காட்டுதல் ஆகிய மூன்று பகுதியையுமே அந்தச் சர்க்கார் ஏற்று நடத்துமாம். இது ஒரு மாபெரும் துணிகர முயற்சி என்பதில் சந்தேகமில்லை.

இந்தியாவில் சினிமா தோன்றியது முதல் இன்று வரை அதன் சரித்திரத்தையும், அது தயாரித்த படங்களையும் ஆராய்ந்தால், ஏராளமான பண வருவாய்க்காகவே பலர் படம் தயாரிக்க முற்படுகிறார்கள் என்பதும், பண வசூல் கொள்ளைக்காக அவர்கள் கலை அம்சத்தைக் காற்றில் விட்டு விட்டு என்ன வேண்டுமானாலும் செய்யத் துணிந்திருக்கிறார்கள் என்பதும் விளங்கும். ஆதலால் இத் தொழிலை சர்க்கார் ஏற்றுக் கொண்டு நடத்துவது நல்லதே என்று எனக்குத் தோன்றுகிறது.

ஒரு காலத்தில் வங்காளப் படங்கள் இந்தியாவிலேயே முதல் ஸ்தானம் வகித்தன. ஆனால் பம்பாய் மாஹாணத்தவர் அட்டஹாஸமான முறை

யில் போட்டி போட்டு, வங்காளத்தினரை ஒரு கோடிக்கு ஒதுக்கிவிட்டனர். தற்போது வங்காளத்தில் சினிமாத் தொழில் பெயரளவில்தான் இருந்து வருகிறது. ஆதலால் சர்க்கார் இத் தொழிலை நடத்த முற்பட்டது மிக வரவேற்கத் தக்கதே. இதன் மூலம் வங்க சினிமாத் தொழிலுக்கு நன்மையே ஏற்படக் கூடும்.

சென்னை பின்பற்றலாம்

சென்னை சினிமாத் தொழிலின் நிலைமை வங்க சினிமா நிலைமைக்கு ரொம்பவும் மேம்பட்டதாயில்லை. சினிமாத் தயாரிப்புச் செலவுகள் லக்ஷக் கணக்கிற்கு உயர்ந்திருப்பதால், படங்களைத் தயாரிக்க பண வசதி சொற்ப பேர்களுக்கே இருக்கிறது. ஆதலால் புதுப் படத் தயாரிப்பு குறைந்து இத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருகிறது. ஆகவே, வங்காளத்தைப் பின்பற்றி, சென்னை சினிமாத் தொழிலை சென்னை சர்க்கார் மேற்கொண்டு நடத்த முன் வந்தால் அவர்களுக்கும், பொது மக்களுக்கும் மிகுந்த நன்மை ஏற்படும் என்று கருதுகிறேன். வங்க சர்க்காரை ஆதரித்து சென்னை சினிமா டெக்னிஷியன்கள் நிறைவேற்றி யுள்ள தீர்மானத்தை சர்க்கார் கவனிக்க வேண்டும்.

நல்ல படங்களுக்குப் பரிசு ?

சில தினங்களுக்கு முன் நம் கல்வி மந்திரி கனம் ஸ்ரீ. அவினாசிலிங்கம் செட்டியார் தென்னிந்திய பிலிம் சேம்பருக்கு விஜயம் செய்து சினிமா பற்றிப் பேசினார். சினிமாத் தொழில் கேட்டு மகிழக்கூடிய பல விஷயங்களை அவர் சொல்லியிருக்கிறார். சினிமாத் தொழிலின் சக்தி அபாரம் என்பதை சென்னை சர்க்கார் உணர்ந்திருப்பதாகவும், இத் தொழிலுக்கு சர்க்கார் சாத்தியமான எல்லா உதவிகளையும் செய்யத் தயாராயிருப்பதாகவும் அவர் சொல்லியிருக்கிறார். அப்படி நடந்து விட்டாலோ நம் சினிமாத் தொழிலுக்கு நல்ல காலம் ஆரம்பமாகி விட்டதென்றே கருத வேண்டியிருக்கும்.

மந்திரி இன்னொன்றும் சொன்னார். அதாவது, சர்க்கார் சிறந்த படங்களுக்கு வருஷா வருஷம் பரிசளிக்கலாம் என்று கூறினார். இது ஒரு நல்ல யோசனையே. நல்ல படங்களைத் தயாரிப்பதற்கு இது ஒரு தூண்டுதலாக இருக்குமாதலால் இந்த யோசனையை சர்க்கார் ஏற்றுக் கொள்ளுவார்கள் என நம்புகிறேன்.

சண்டித்தனம்

சென்னை தியேட்டர் முதலாளிகள்–தொழிலாளர்கள் தகராறில் மத்தியஸ்தர் அளித்த தீர்ப்பை சில தியேட்டர்காரர்கள் இன்னும் அமுலுக்குக் கொண்டு வராமல் சண்டித்தனம் செய்து வருகிறார்களாம். இதற்கான நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக் கொள்ளப் போகிறார்களாம்.

தியேட்டர்கள் முன்பெல்லாம் சதவிகித முறையில் படத்தை வரவழைத்துக் காட்டி வந்தனர். இப்பொழுதோ என்றால், வாரத்திற்கு இவ்வளவு என்று பேசிக் கொண்டு தியேட்டரை அதிக வாடகைக்கு விட்டு விட்டுக் கொள்ளை லாபம் தட்டி வருகின்றனர். ஒவ்வொரு தியேட்டருக்கும் குறைந்தது ஆறு மாதத்திற்காவது படங்கள் ஒப்பந்தமாகி யிருக்கின்றன. ஆகவே மத்தியஸ்தர் அளித்த தீர்ப்பை உடனே அமுலுக்குக் கொண்டு வந்து விடுவதே புத்திசாலித்தனம் என்பதை இத் தியேட்டர்காரர்கள் உணரவேண்டும்.

பூஞ்சோலையிலே...
மலரிதுவே..
இன்றே
இரவல்
காசுமில்லே
கீசுமில்லே
போகச்சொல்லுங்க

தகுந்த தண்டனை

சாம்ராஜ்

'**பி**ரபல சினிமா நடிகர்களான நரேந்தரும், ரேவதியும், சினிமா உலகையே விட்டு விலகி விட்டனர்' என்று பத்திரிகைகளில் வெளி வந்த செய்தி சினிமா ரஸிகர்களுக்கும் பொது ஜனங்களுக்கும் ஒரே வியப்பையும், திகைப்பையும் உண்டாக்கின. 'எதற்காக இருவரும் சினிமா உலகைவிட்டுவிலகுகின்றனர்? ஒரு வேளை இருவரும் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடப் போகிறார்களா?' என்று பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டனர் சிலர். 'அடடா, இவர்கள்நடிக்கும் 'அதிசயப் பெண்' படம் பாதியில் நிற்கிறதே, அதன் கதி என்ன?' என்று மற்றும் சிலர் குறைப்பட்டுக் கொண்டார்கள்.

ரேவதிக்கு, சந்திரனின் அழகையும் பழிக்கும்படியான வட்ட வடிவமான முகம்; வேலை ஒத்த நீண்ட விழிகள். நடிப்பின் போது அவள் முகத்தில் தோன்றும் பற்பல பாவங்களை வர்ணிக்க வார்த்தைகளே கிடையாது. பூங்கொடி போன்ற அவள் மென்மையான உடல் அமைப்பு அவளை சினிமா உலகிலேயே ஒரு தனி ஸ்தானம் வகிக்கும்படியாகச் செய்தது. அவள் எழில் வாய்ந்த முகமும், அபார நடிப்பும், கவர்ச்சியாக அவள் பேசிய வசனங்களும் ரஸிகர்களை ஒருங்கே கவ்வி இருந்தது.

ஒரு சமயம் ரேவதி தன்னுடன் பால்யத்தில் வாசித்த நளினியை சந்தித்தாள். அவளும் நல்ல அழகிதான். இனிமையாக குயிலைப் பழிக்கும்படிப் பாடக் கூடியவள். ஆகவே அவளுடைய ஏழ்மை நிலையைக் கண்ட ரேவதி, "நளினி, எத்தனை நாளைக்கு நீ இப்படி கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பது?" என்றாள்.

"என்ன செய்வது ரேவதி, நான் கஷ்டப்படப் பிறந்திருக்கும்போது கஷ்டப்படத்தானே வேண்டும்?"

"நளினி, நான் சொல்வதைக் கேள். சினிமாவில் சேர்ந்தால் என்ன? சினிமாவில் சேர்ந்தவர்கள் கெட்டுவிட்டார்கள் என்பது அர்த்தமா? யாரோ சிலர் அப்படி நடந்து கொண்டால் எல்லோரையும் அப்படி நினைக்கலாகாது. ஆகையால் உன்னை நான் சினிமாவில் சேர்த்து விடுகிறேன். உனக்குத்தான் நன்றாகப் பாடவருமே. நீ பேசும் போது வார்த்தைக்குத் தகுந்தபடி முகபாவத்துடன் பேசுகிறாய். ஆகவே உன்னால் நன்றாக நடிக்கவும் முடியும்" என்று கூறினாள்.

தன் தோழி நளினியின் கஷ்டத்தையும், ஏழ்மை நிலையையும் போக்க பல இடங்களில் சிபாரிசுகள் செய்து அவளை சில படங்களில் ஒப்பந்தம் செய்து வைத்தாள்.

நளினி, ரேவதியுடன் அவள் வீட்டிலேயே வசித்து வந்தாள். இருவரும் சகோதர பாவத்தில் பழகி வந்தனர். இருவரும் ஒரே விதமாக உடுப்பார்கள்; ஒன்றாகவே உண்பார்கள்; உறங்குவார்கள்.

நளினி புதிய நடிகையாக இருந்தும் கூட சில படங்களில் ரேவதியுடன் சேர்ந்து நடித்ததினுல் வெகு சீக்கிரத்திலேயே கொஞ்சம் நல்ல பெயரையும் வாங்கிக் கொண்டாள்.

நரேந்திரன் பி. ஏ. ஒரு இளம் காளை. நல்ல அழகு வாய்ந்தவன்; சிறந்த கலைப்பித்தன். செல்வந்தனும்கூட. சினிமா உலகில் நடிப்பு என்ற பாகத்தில் அவன் முடிவிலா ஒரு கீர்த்தியை அடைந்துவிட வேண்டுமென்று ஆசை கொண்டவன். நடிப்பின் நுட்பங்களை அறிய அவன் மேல்நாடுகளுக்கெல்லாம் சென்றுவந்தவன். பட உலகிலேயே ரேவதியும், நளினியும் நடிக்கும் நடிப்பைத்தான் கொஞ்சம் ரஸித்தான் நரேந்திரன். ஆகவே, தானே சொந்தமாக 'அதிசயப் பெண்' என்ற ஒரு படத்தை எடுக்க ஏற்பாடு செய்து, ரேவதியையும், நளினியையும், அதில் நடிக்க அழைத்தான். இருவரும் அதற்குச் சம்மதித்தனர்.

"சாந்தி பவனம்" என்னும் பெயருள்ள நரேந்திரனின் அழகிய பங்களாவில் தினமும் ஒத்திகை நடைபெறும். 'அதிசயப்பெண்' மிகவும் சுவாரஸ்யமான அழகிய கதை. நவரஸம் பொருந்தியது. சிறந்த நடிகர்கள் தங்கள் நடிப்புத்திறனை ஒவ்வொரு கட்டத்திலும் அழகாக வெளியிட ஏற்றதாய் இருந்தது. நடிப்பில் இந்த மூன்று நக்ஷத்திரமணிகளும் ஒருவருடன் ஒருவர் போட்டி இட்டனர்.

படப் பிடிப்பு ஆரம்பிப்பதற்கு முன்பே ரேவதியும், நளனியும் நரேந்திரனிடம் மிகவும் நெருங்கிப் பழகிவந்தார்கள். நரேந்திரனும் ஒழிந்த நேரங்களில் தன் காரை எடுத்துக் கொண்டு ரேவதியின் பங்களாவிற்கு வந்துவிடுவான். மூவரும் ஒன்ருக, கடற்கரை எங்கே, அழகிய ஆற்றங்கரை எங்கே, ரஸமான சினிமா காட்சி எங்கே என்று உல்லாசமாகப் பொழுது போக்கச் சென்று விடுவார்கள்.

நல்ல அழகனும், செல்வந்தனும் திறமைசாலியுமான ஒரு வாலிபன் மிக உல்லாசமாகப் பழகினுல், தன் மனதைப் பறிகொடுக்காமல் எந்த அழகிய இளம் நங்கைதான் மௌனமாக இருப்பாள்? ஆகவே நரேந்திரன் விஷயத்தில் ரேவதியும், நளினியும் மனதை பறிகொடுத்ததற்கு இருவரை



யும் குறைகூறிப் பயனில்லை! ஆனால் அவர்கள் இருவரில் யாரை நரேந்திரன் விரும்புகிறான் என்று அவர்களுக்கே தெரியாது.

ரேவதியும் நளினியும் சகோதரிகள் போல் பழகியதினால் எந்த விஷயமும் அவர்களுக்கிடையில் மறைமுகமே கிடையாது. அப்படிப்பட்டவர்கள் இந்த காதல் விஷயத்தில் மட்டும் ஒருவரிடம் மற்றவர் பிரஸ்தாபிக்கவில்லை.

ரேவதி மட்டும் அடிக்கடி, ''நளினிக்கு நான் நரேந்திரனிடம் இச்சை கொண்டுள்ளது தெரிந்தது தான். ஆனால் அவள் மௌனமாகவே இருக்கிறாள். பாவம், நான் மட்டும் நரேந்திரனை மணந்து சுகமாக இருந்தால் அவள் என்ன செய்வாள்? வெட்கம் போல் இருக்கிறது. அதனால்தான் இதைப் பற்றி ஒன்றும் பேசாமல் இருக்கிறாள்'' என்று நினைத்துக் கொள்வாள் பெருந்தன்மையுடன் அவள்.

ஆனால் நளினியோ, ''பார்த்தாயா இந்த ரேவதியை. நான் நரேந்திரனை விரும்புகிறேன் என்று தெரிந்தும் என்னிடம் ஒன்றும் சொல்லாமல் அவள் என்னிடம் போட்டி இடுகிறாள். அவள் இப்படியே செய்யட்டும். இவளுக்கு நல்ல பாடம் கற்பித்து வைக்கிறேன்'' என்று பொறாமையினால் பொங்கி உள்ளம் பொருமினாள்.

இந்நிலையில் நரேந்திரன் மிகவும் சாந்தமாக, ''ரேவதியிடம் என்ன அடக்கம், ஒழுக்கம், மரியாதை, துளிக் கூட கர்வம் கிடையாது. நான் அவளை விரும்புகிறேன் என்று என்னுடைய வெகுண்ட பார்வையின் மூலம் தெரிந்து கொண்டும் என்னுடைய சொல்லுக்காக காத்துக்கிடக்கிறாளே, அழகி, அன்ன நடையாள் ரேவதி. பாவம், நளினிக்கு இந்த விஷயத்தில் ஏமாற்றம்தான். இந்தப் படம் முடிந்ததும் ரேவதியிடம் மனவிருப்பத்தை தெரிவித்து விவாகத்திற்கு ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்'' என்று எண்ணிக் கொண்டிருந்தான்.

ரேவதியும் நரேந்திரனை காதலிக்கிறாள். அவனும் ரேவதியை காதலிக்கிறான் என்று, கண்ணாடியில் உருவம் தெரிவது போல் பளிச் சென்று தெரிந்தும், நளினி அவர்கள் இருவர் சார்பிலும் மனதை மாற்றிக் கொள்ளவே இல்லை. இவ்வளவு தூரம் தன்னை முன்னுக்கு கொண்டுவந்து தன் சீர்கெட்ட வாழ்க்கைப் பாதையை செப்பனிட்டது ரேவதியாயிற்றே. இந்த பெருத்த உபகாரத்திற்காவது இவ்விஷயத்தில் அவளுக்கு விட்டுக் கொடுக்கலாம் என்று கூட அவளுக்குத்தோன்றவில்லை. ஒரே உறுதியான மனப்பான்மையுடன் ரேவதியை நரேந்திரனிடமிருந்து பிரிப்பதிலேயே கண்ணும்கருத்துமாய் இருந்தாள். அதற்கு மார்க்கமென்ன என்பதே சதா காலமும் அவளுடைய நினைவாக இருந்து வந்தது. இவ்வளவுக்கும் அவள் நரேந்திரனிடம் கொண்டிருந்த பிடிவாதக் காதலே காரணமாயிருந்தது.

[தொடர்ச்சி 57-ம் பக்கத்தில்]

ஜுலை
1948

பத்மினி

"வேதாள உலகம்" தமிழ்ப் படத்தில் வெகு அழகாக நாட்டியம் ஆடி யிருக்கிறார்களாம் லலிதா - பத்மினி சகோதரிகள்.

கண்ணாம்பா

வாழ்க்கை வர்ணனை

சமீப காலமாக தமிழ்-ஆந்திர பிரிவினை பிரச்னை பிரமாதமாக வளர்ந்திருக்கிறது. ஆந்திரர்கள் தனி மாஹாணம் வாங்காமல் விடுவதில்லை என்று கச்சை கட்டிக் கொண்டிருக்கிறார்கள். தமிழர்களும் அதற்குச் சம்மதிக்கவே செய்கிறார்கள். இந்தப் பிரிவினை விஷயத்தைப் பரிசீலனை செய்வதற்காக இந்திய அரசியல் நிர்ணய சபையும் ஒரு தனிக் கமிட்டியை ஏற்படுத்தி விட்டது.

ஆனால், முக்கியமாக அபிப்பிராய பேதங்களுக்கும், வாக்குவாதங்களுக்கும் இடம் ஏற்படுத்தி யிருப்பது, இந்த சென்னை நகரத்தை தமிழ் நாட்டுடன் சேர்ப்பதா; ஆந்திர மாஹாணத்துடன் சேர்ப்பதா என்ற விஷயந்தான். இதற்காக "ரத்தம் ஆறாக ஓடுவதானாலும் பரவாயில்லை" என்கின்றனர் தெலுங்கர்கள். "அண்டம் புரண்டாலும் விடப்போவதில்லை" என்று கர்ஜிக்கின்றனர் தமிழர்கள்.

அரசியல் வட்டாரங்களில் இந்த ஆந்திர-தமிழ் பிரச்னை இவ்வளவு அமளி துமளிப் பட்டு வருகிறதே; சினிமா உலகிலோ இதற்கு நேர்மாறாக ஆந்திர-தமிழ் ஐக்கியம் அதிவேகத்தில் பலப்பட்டு வருகிறது. சமீபவருஷங்களில் புஷ்பவல்லி, பானுமதி, மாலதி, கிருஷ்ணவேணி, சாந்த குமாரி ஆகியோரெல்லாம் தமிழ் நடிகைகளாக மாறி விட்டனர். இந்த நடிகைகளெல்லாம் தமிழ்நாட்டில் நல்ல கிராக்கியோடும் விளங்குகின்றனர். கலை பல பாஷையினரை, பல மதத்தினரை, பல மாஹாணத்தினரை, பல தேசத்தினரை—ஏன் உலகம் பூராவையுமே ஒன்று படுத்தும் சக்தி வாய்ந்ததென்பதற்கு இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்?

அரசியல் உலகில் என்ன மாறுதல் வேண்டுமானாலும் ஏற்படட்டும். ஆந்திரர்கள் சென்னையை வேண்டுமானாலும் பிரித்துக் கொண்டு போகட்டும். ஆனால், அவர்களது சுப மாஹாணக்

பசுபுலேட்டி கண்ணம்பா

குண்டூசி...

கிளர்ச்சி அளவு சடந்து போய், ஆந்திர நடிகைகள் தமிழ்ப் படங்களில் நடிக்கக் கூடாதென்கிற அளவிற்கு வந்து விடுமானால், அதை விடப் பெரிய துரதிருஷ்டம் இருக்கவே முடியாது.

ஆனால் கண்ணம்பாவைப் பொருத்த வரையில் எனக்கு இவ்விதமான பயம் இல்லை. ஏனெனில், கண்ணம்பாவுக்கு அசோக்குமார் தமிழ்ப் படத்தில் நடித்தது முதல், ஆந்திராவை விட தமிழ் நாட்டிலேயே அதிக ஆதரவும், புகழும், சம்பாத்தியமும் ஏற்பட்டிருக்கிறது. அவருடைய கம்பெனி தொடர்ந்து தமிழ்ப் படங்களைத் தயாரித்து வருவதே இதற்குத் தகுந்த அத்தாக்ஷி. கலை விஷயத்தில் மற்ற மாகாணங்களைக் காட்டிலும் தமிழ் நாடு பரந்த நோக்கம் கொண்டிருப்பது பெருமைப் படத்தக்க விஷயமாகும்.

கண்ணம்பா தமிழ்ப் படங்களில் நடிக்க ஆரம்பித்ததும் நம் படங்களின் நடிப்பு அம்சம் திடீரென்று உயர்ந்து விட்டது என்று சொன்னால் மிகையாகாது. கண்ணகி படத்தில் அவர் நடித்ததும், "தமிழ் நாட்டிலும் சரி; ஆந்திராவிலும் சரி; ரௌத்ராகார நடிப்பில் கண்ணம்பாவுக்கு இணை அவரே தான்" என்ற ஏகோபித்த அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிறது.

கண்ணம்பாவை ஒரு பிறவி நடிகை என்றே சொல்ல வேண்டும். இல்லையென்றால் திடீரென்று தம் பதின்மூன்றாவது வயதில் மேடையேறி, பல வருஷங்களாக நடித்து வந்தவர்களைக் காட்டிலும் பன்மடங்கு பாராட்டுதலைப் பெறுவது சாத்தியமாயிருந்திருக்குமா? எல்லூரில் சுமார் இருபத்தி ஐந்து வருஷங்களுக்கு முன்னால் "நாவல நாடக சங்கம்" என்ற ஒரு சபை ஸ்தாபிக்கப்பட்டது. அந்த சபை அந்த ஊர்வாசிகளிடையே கிளர்ச்சியை உண்டு பண்ணி விட்டது. அந்த சபாவில் பல சிறந்த நடிக நடிகைகள் சேர்ந்திருந்ததால் அது நடத்திய நாடகங்கள் உன்னத முறையில் இருந்தன. இந்த நாடகங்களைப் பார்த்த குடும்ப ஸ்திரீ புருஷர்கள் பலர் நடிப்புக் கலையில் ஆசை கொண்டு இந்த நாடகக் கம்பெனியில் சேர்ந்தனர் என்றால்

பார்த்துக் கொள்ளுங்களேன்! இது போல ஆர்வங் கொண்டு நாடகத்தில் ஈடுபட்டவர்களில் ஒருவர்தான் கண்ணம்பா.

இந்த நடிப்புக் கலைக்கு மட்டும் ஒரு 'கெட்ட' சுபாவம் உண்டு. ஒருவர் அதில் ஒரு முறை ஈடுபட்டு, சபையோரின் கரகோஷத்தையும் பெற்று விட்டாலோ, பிறகு அவரை வேறு தொழிலுக்குச் செல்லவொட்டாமல் பூரணமாக ஆகர்ஷித்துக் கொண்டு விடும். இது போல அநேக நடிக, நடிகைகள் விஷயத்தில் ஏற்பட்டிருக்கிறது. கண்ணம்பாவும் இந்த விதிக்கு விலக்கானவரல்ல. நாடக மேடையில் அமெச்சூர் நடிகையாக ஏறிய கண்ணம்பா பிறகு தொழில் நடிகையாகவும் ஆகி விட்டார்.

சில மாதங்களுக்கு முன் நடந்த ஒரு பத்திரிகைக் காக்ஷியில் என்னருகில் ஒரு ஆந்திர நண்பர் அமர்ந்திருந்தார். நான் சொன்னேன் அவரிடம்: "உங்கள் கண்ணம்பாவின் நடிப்பு சினிமாவில் பிரமாதமாயிருக்கிறது" என்று. அவர் என்னை வெறிக்கப் பார்த்தார். அடித்து விடுவார் போல் கூடத் தோன்றியது. "இதென்ன பிரமாதம்? அவர் நாடக மேடையில் நடிப்பதை நீங்கள் பார்த்திரானால் என்ன சொல்லுவீர்களோ!" என்று கூறினார் அவர்.

அந்தக் காலத்தில் கண்ணம்பா ஆந்திர நாடக உலகில் அமோஹமான புகழுடன் விளங்கி வந்தார். சந்திரமதி, சாவித்திரி, அனுசூயை முதலிய வேஷங்களில்நடித்து அவர் இணையற்ற பெயர் பெற்றிருந்தார். அதன் விளைவாக அவர் தாமே "ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி நாடக சபா" என்ற நாடகக் கம்பெனியை ஆரம்பித்து, ஆந்திர தேசத்தில் பல ஊர்களுக்குச்சென்று நாடகங்களை நடத்தி விட்டு வந்திருக்கிறார். நான்கைந்து வருஷங்களுக்கு முன்பு தான் அவர் இந்தக் கம்பெனியை மூடி விட்டு நாடகங்களில் நடிப்பதையும் நிறுத்திக் கொண்டார்.



கண்ணம்பாவின் புகழ் நாடக மேடையில் உச்ச நிலையில் இருந்த போது அவரை சினிமா உலகம் கவர்ந்திழுக்க ஆரம்பித்தது. 1935-ம் வரு

ஷத்தில் முதன் முதலாக சினிமாவில் நடிப்பதற்காக ஸ்டார் கம்பைன்ஸார் அவரை ஒப்பந்தம் செய்து அழைத்து வந்தார்கள். கண்ணாம்பா சந்திரமதி வேஷத்தில் இணையற்றவரென பெயர் பெற்றிருந்தமையால் ஹரிச்சந்திராவையே படம் பிடிப்பதென தீர்மானிக்கப்பட்டது. அதன்படியே கண்ணாம்பா சந்திரமதியாக அதில் நடித்தார். இப்படத்திற்கு ரஸிகர்களிடம் மிகுந்த ஆதரவு ஏற்பட்டதாம்.

கண்ணாம்பா தெலுங்கு ஹரிச்சந்திராவுக்குப் பிறகு திரௌபதி வஸ்திராபஹரணம் தெலுங்குப் படத்தில் திரௌபதியாக நடித்தார். ஆனால் நான் முதன் முதலில் அவருடைய நடிப்புத் திறமையைப் பற்றிக் கேள்விப்பட்டது அவர் கனகதாரா தெலுங்குப் படத்தில் நடித்த பின்னர்தான். நான் இந்தப் படத்தைப் பார்க்கவில்லையென்றாலும் அநேகர் இப் படத்தையும், அதில் குறிப்பாகக் கண்ணாம்பாவின் நடிப்பையும் மிகப் புகழ்ந்ததைக் கேட்டிருக்கிறேன்.



கிரஹலக்ஷ்மி படம் தமிழ் நாட்டிலும், ஆந்திர தேசத்திலும் ஒருங்கே நல்ல வெற்றி பெற்ற படங்களில் முதன்மையானது. இப் படத்தின்

வெற்றிக்கு கண்ணாம்பாவின் சிறந்த நடிப்பு ஒரு காரணமாயிருந்தது என்று சொல்ல வேண்டும். நாகய்யா முதன் முதலில் தோன்றிய படம் இது தான் என்பது குறிப்பிடத்தக்கது. சோக நடிப்பில் தமக்குள்ள திறமையை வெளியிடுவதற்கு கண்ணாம்பாவுக்கு இப்படத்தில் நல்ல சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருந்தது. இதன் பின்னர், அவர் சண்டிகா, போஜ காளிதாஸ் ஆகிய இரு தெலுங்குப் படங்களில் நடித்தார்.

இந்த சமயத்தில்தான ராஜகோபால் டாக்கீஸார் **கிருஷ்ணன் தூது** தமிழ்ப் படத்தைத் தயாரித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் திரௌபதி வேஷத்தில் யார் யாரையோ வெல்லாம் நடிக்க வைக்க முயன்று வந்தனர். கடைசியில், அவர்கள் அசாத்திய துணிபுடன் தெலுங்கு நடிகையான கண்ணாம்பாவை அந்த வேஷத்திற்குத் தேர்ந்தெடுத்தனர். இத்தகைய அபாயகரமான பரீக்ஷையை அவர்கள் செய்யத் துணிந்ததற்குக் காரணம், கண்ணாம்பா அதற்கு முன்பே ஒரு சிறந்த நடிகை என்று பெயர் வாங்கி யிருந்ததுதான்.



கண்ணாம்பா நடித்த முதல் தமிழ்ப் படம் **கிருஷ்ணன் தூது**தான்.

ஆனால் இப்படத்தில் அவரது நடிப்பு அவ்வளவாக சோபிக்கவில்லை. தமிழ் சம்பாஷணைகளை அவர் உச்சரித்திருந்ததும் அவ்வளவு திருப்திகரமாய் இருக்கவில்லை.

1940 ம் வருஷத்தில் கண்ணாம்பாவும், டைரெக்டர் நாகபூஷணமும் சேர்ந்து ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பிக்சர்ஸை ஸ்தாபித்தனர். இக்கம்பெனியார் தயாரித்த முதல் படமான **தல்லி பிரேமா** தெலுங்கு சமூகப் படம் ஆந்திர ஜில்லாக்களில் பிரமாதமாக ஓடியதால் இக் கம்பெனியின் ஆயுள் ஸ்திரப்பட்டதோடு, மேலும் மேலும் படங்களைத் தயாரிப்பதற்கு அவர்களுக்கு உத்ஸாகம் ஏற்பட்டது.

தல்லி பிரேமாவில் தாயின் வாஞ்சையை வெகு அற்புதமாக நடித்திருந்தார் கண்ணாம்பா. வாழ்க்கையில் புத்திர பாக்கியம் ஏற்படாததால் அவருக்கு ஏற்பட்டுள்ள மனக் குறையை அடிப்படையாகக் கொண்டே இக்கதை எழுதப்பட்டது என்று சொன்னாலும் பொருந்தும்.

அடுத்தபடியாக ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பிக்சர்ஸ் தயாரித்த படம் **சுமதி** இப்படமும் நல்ல வசூலைப் பெற்றது.

இந்த சமயத்தில் முருகன் டாக்கீஸார் **அசோக் குமார்** படத்தைத்தயாரித்துக் கொண்டிருந்தனர். **கிருஷ்ணன் தூதில்** கண்ணாம்பாவின் தோற்றம் தோல்வியாய் முடிந்திருந்தும் கூட, அவரைத் தங்கள் படத்திற்கு தைரியமாக ஒப்பந்தம் செய்து கொண்டனர் முருகன் டாக்கீஸார். அவருக்கு காமுகியான சிற்றன்னை திஸ்யரக்ஷதையின் பாகத்தைக் கொடுத்து, அதை அவர் மிக சிறப்பாக நடிக்கும்படியும் செய்துவிட்டது குறிப்பிடத் தக்கது.

கண்ணாம்பாவின் தமிழ் பேச்சு உச்சரிப்பு சுத்தமாய் இருக்கவேண்டுமென்பதற்காக முருகன் டாக்கீஸாரும், ‘‘இளங்கோவனு’’ம் மிகுந்த சிரத்தை எடுத்துக் கொண்டதைக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.



‘‘மஹாமாயா’’வில்
கண்ணாம்பா

அசோக் குமாரில் கண்ணாம்பாவின் நடிப்பை வாயாரப் புகழாத ரஸிகனே இல்லை. அவருடைய பேச்சும் கன கச்சிதமாய் அமைந்திருந்தது கண்டு அனைவரும் ஆச்சரியப்பட்டனர். இத்தனைக்கும் அப்பொழுது அவருக்கு தமிழ் பாஷை துளிக்கூடத் தெரியாது. தமிழ் சம்பாஷணைகளை தம் சுய பாஷையான தெலுங்கில் "த்வனிப்பதிவு" செய்து கொண்டு, அவைகளை மனனம் செய்து நடித்தார் என்பதை அறிந்தால் அவர்களது ஆச்சரியம் எல்லை மீறிப் போகும்.



கண்ணாம்பா அந்தப் படத்தில் எம். கே. டி. பாகவதரின் பின்பாட்டுடன் வெகு அழகாக பரத நாட்டியம் ஆடியிருக்கிறார். இத்தனைக்கும் அவருக்கு நாட்டியம் ஆடுவதற்கான பயிற்சி கிடையாது. அந்தப் படத்திற்காக வேண்டிய அளவு மட்டுமே கற்றுக் கொண்டு ஆடியிருக்கிறார் என்பது குறிப்பிடத் தக்கது.

அசோக் குமாருக்குப் பிறகு கண்ணாம்பா ஜூபிடர் பிக்சர்ஸின் கண்ணகியில் நடித்து அழியாப் புகழைச் சம்பாதித்துக் கொண்டார். கண்ணாம்பாவின் படங்கள் எல்லாவற்றிலுமே கண்ணகிக்கே முதல் ஸ்தானம் அளிக்க வேண்டும். அவரது நடிப்போ இந்தப் படத்தில் சோபித்ததுபோல் வேறு எந்தப் படத்திலுமே சோபிக்கவில்லை.

ஒருவர் எந்தப் படத்தை வேண்டுமானாலும் மறக்கலாம். ஆனால் கண்ணகியையும்—அதில் கண்ணாம்பாவின் நடிப்பையும் ஒருக்காலும் மறக்க முடியாது. கண்ணகி வேஷத்திற்காகவே பிறந்தவர்போல அந்த பாகத்தை அதி தத்ரூபமாய் நடித்திருக்கிறார். அந்தப் பழிதீர்த்த படலத்தை ஒருவர் எத்தனை தரம் பார்த்தாலும் சலிப்பேற்படாது.

அசோக் குமார் முடிந்ததுமே கண்ணாம்பா தமிழ் பாஷையைக் கற்றுக் கொள்ள ஆரம்பித்தார். அதனால் கண்ணகி சம்பாஷணைகளை அப்பழுக்கில்லாமல் பேசியிருந்தார். கண்ணகியில் கண்ணாம்பாவின் நடிப்பு தமிழ் நாட்டில் ஒரு பரபரப்பை உண்டு பண்ணியது என்று சொன்னால் மிகையாகாது.

கண்ணகியில் கண்ணாம்பா பிரமாதமான பாராட்டுதலைப் பெற்றது கண்டு ஜூபிடர் பிக்சர்ஸார் கண்ணாம்பாவுக்கெனவே **மஹாமாயா** கதையை எழுதி, அதில் கண்ணாம்பாவை நடிக்கச் செய்தனர். கண்ணகியில் உள்ள அளவு அவரது பாசம் சோபிக்கவில்லையென்றாலும் அவரது நடிப்பு நன்றாகவே இருந்தது.

இதன் பின்னர் தம் சொந்தத்திலேயே ஹரிச்சந்திரா தமிழ்ப் படத்தைத் தயாரித்து வெளியிட்டார். இப்படத்திற்கும், அவருக்கும் முக்கால் வெற்றி கிடைத்தது எனலாம்.

பிரமாதமான காக்ஷி ஜோடனைகளுடன் வெளிவந்த **பாதுகா,** கண்ணாம்பாவின் சொந்தக் கம்பெனியாலேயே தயாரித்து வெளியிடப்பட்ட

படமாகும். ஆனால் இப்படத்தில் கைகேயியாகத் தோன்றிய கண்ணாம்பாவின் நடிப்பு சோபிக்கவில்லை. படத்திற்கும் மிகுந்த வரவேற்புக் கிடைக்கவில்லை.

பாதுகாவில் நடித்தபடியே கண்ணாம்பா **மாயா லோகம், மாயாமச்சீந்திரா, பலநாட்டு யுத்தம், மூன்று மராட்டியர்கள்** ஆகிய நான்கு தெலுங்குப் படங்களிலும், **தெய்வநீதி** தமிழ்ப் படத்திலும் நடித்து முடித்தார். கடைசியாக கண்ணாம்பா நடித்து வெளிவந்திருக்கும் தமிழ்ப் படங்கள் (அவரது சொந்தப் படமான) **துளஸி ஜலந்தரும், ஜெமினியின் ஞான சௌந்தரியும்** ஆகும். ஸ்ரீராஜராஜேஸ்வரி பிக்சர்ஸார் தற்போது கண்ணாம்பாவைப் பிரதம நடிகையாகக் கொண்ட **நவஜீவனம்** என்ற தமிழ் சமூகப் படத்தைத் தயாரித்து வருகின்றனர்.



கண்ணாம்பா நடிப்பு விஷயத்தில் உன்னதஸ்தானத்தை அடைந்துள்ளதற்குக் காரணம் அவரது அநுபவம் மட்டுமல்ல; அவருக்கு இக்கலையில் உள்ள ஆர்வத்தையும் குறிப்பிட வேண்டும். ஒரு காக்ஷியில் நடிப்பதற்கு முன்பு அக்காக்ஷியில் தம் நடிப்பு நன்கு அமைய வேண்டுமே என்று இன்றைக்கும் கண்ணாம்பா கவலைப்படுவது வழக்கமாம். அதோடு கூட படத் தயாரிப்பு சம்பந்தப்பட்டவர்களுடன் முகம் கோணாது பணிவுடன் ஒத்துழைப்பார். அவரது இந்த குணங்களே அவருக்கு வெற்றியைச் சம்பாதித்துக் கொடுத்திருக்கின்றன என்று நான் கருதுகிறேன். "அடக்கம் அமரருள் உய்க்கும்" என்பது குறள். கண்ணாம்பாவின் அடக்க குணம் அவரது நடிப்பிற்கு அமரத்துவத்தை ஏற்படுத்தி விட்டது.

பால்யத்தில் தம் தாயாராலேயே வளர்க்கப்பட்டு வந்த கண்ணாம்பாவின் சொந்த ஊர் மேல் கோதாவரி ஜில்லாவைச் சேர்ந்த எல்லூராகும். காலஞ்சென்ற அவரது தந்தை ஸ்ரீ. நரஸப்ப நாயுடு சர்க்கார் உத்தியோகத்தில் இருந்து வந்தார். நாயுடு ஜாதியைச் சேர்ந்த கண்ணாம்பாவின் பாட்டனாரோ நல்ல படிப்பாளியாம். அவர் தெலுங்கில் பல கவிதைகளை இயற்றியிருக்கிறாராம். "பசுபுலேட்டி" என்பதை பலர் ஏதோ பட்டம் என்று எண்ணியிருக்கின்றனர். அது தவறு; இது அவருடைய குடும்பப் பெயராகும்.

கண்ணாம்பாவுக்கு இப்பொழுது சுமார் முப்பத்தி எட்டு வயதாகிறது. ஆனால் அவரது தோற்றம் அவ்வளவு மதிப்பிடுவதற்கு இடம் அளிக்காது. அதுவும் அவர் "மேக்கப்" போட்டுக்கொண்டு வந்தாலோ அவரது வயதை நிதானிக்க முடியாமலிருக்கும். சுமார் ஐந்தே முக்கால் அடி உயரமும், மாநிறமும் உடைய கண்ணாம்பா இயற்கையில் சாதாரண அழகுடையவர். ஆனால் 'மேக்கப்' கலைதான் அவரது அழகை பன்மடங்காக விரித்துக் காட்டி வருகிறது.

டைரெக்டர் கே. நாகபூஷணம் கண்ணாம்பாவின் வாழ்க்கையிலும் தொழிலிலும் பாகஸ்தராய் இருக்கிறார்.

[தொடர்ச்சி 61-ம் பக்கத்தில்]

ஒண்டேசியைக் கேளுங்கள்

டி. கே. அப்பர்சாமி
(பொன்னமராவதி)

டி. வி. ராஜசுந்தரி தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்? அவருடைய மகள் எந்தப் படத்திலாவது நடிக்கிறாரா? அவர் யாரை மணந்துகொண்டிருக்கிறார்?

ராஜசுந்தரி காலமாகிவிட்ட விஷயம் உமக்குத் தெரியாது போலிருக்கிறது. அவருடைய மகள் தான் குரல் இரவல் கொடுத்து வரும் ராஜேஸ்வரி. இவர் படங்களில் நடிக்கவில்லை. "தினசரி"யில் உதவி ஆசிரியராயிருக்கும் சுப்ரமண்யம் என்பவரை சில மாதங்களுக்கு முன் மணந்து கொண்டிருக்கிறார்.

வி. கோவிந்தராஜுலு
(திருக்கோயிலூர்)

சிறுகளத்தூர் சாமா நடித்த முதல் படம் எது? தற்போது எந்தப் படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்?

சிறுகளத்தூர் சாமா முதன் முதலில் (நாரதர் வேஷத்தில்) நடித்த படம் "வள்ளி கல்யாணம்" என்ற வெளி வராத படமாகும். தற்போது அவர் "ராஜமுக்தி"யில் நடித்து வருகிறார்.

எஸ். பி. ஆறுமுகம் (கொழும்பு)

ஏவி. எம். ஸ்டூடியோ யாருடையது? அதன் விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

இந்த ஸ்டூடியோ டைரெக்டர்-பட முதலாளியான ஏவி. மெய்யப்பச் செட்டியாருடையது. விலாஸம்:—ஏவி. எம். ஸ்டூடியோ, தேவகோட்டை ரோடு, எஸ். ஐ. ஆர். ஓய்.

எஸ். வள்ளிப்புரம் (கண்டி)

ரஞ்சன், ராதா ஆகிய இருவருள் பட்டம் பெற்றவர் யார்?

ரஞ்சன் படிப்பில் பட்டம் பெற்றவர். ராதாவோ நடிப்பில் (நவாப்) பட்டம் பெற்றவர்.

எம். எஸ். மாதவராவ் (திருச்சி)

எம். ஆர். சந்தானலக்ஷ்மி பெரும்பாலும் தாயார் வேஷத்திலேயே தோன்றக் காரணமென்ன?

அவருக்கு தாய்மையில் அதிக அநுபவம் இருப்பது உமக்குத் தெரியாது போலும்!

ஜி. என். சாரி (சைதாப்பேட்டை)

ஸிடாடல் ஞானசௌந்தரியில் பி. ஆர். மங்களம் பேசுவது சொந்தக் குரலிலா? அல்லது இரவல் குரலிலா?

பாட்டுக்கு இரவல் குரல் வாங்குவது போல் சம்பாஷணைகளுக்கும் இனி இரவல் குரல் வாங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

எஸ். சர்மா (சிரம்பான், மலேயா)

தமிழ்ப் புராணப் படங்களை அந்தக் கடவுள்களே பார்த்தால் என்ன நினைப்பர்?

மனித வர்க்கத்தைச் சிருஷ்டித்தது மஹா தவறு என்று நினைப்பர்!

ஸீ. நாகராஜன் (ஆதனூர்)

சிலர் படங்களில் நடிக்காமல் குரல் இரவல் மட்டும் கொடுக்கிறார்களே,

அதன் மூலம் அவர்களுக்கு ஏதேனும் நன்மை உண்டா?

தங்கள் அவலக்ஷண முகத்தைப் படத்தில் காட்டி, ரஸிகர்களின் வசவுகளுக்குள்ளாகாமல் தப்புகிறார்களே அதுவே பெரிய நன்மையல்லவா!

ஜி. எஸ். எஸ். மணி (அம்பாலா)

எம். கே. டி. பாகவதர் நடிக்கும் ராஜமுக்தி எப்பொழுது வெளிவரும்?

"ராஜ முக்தி"யின் ஷூட்டிங் மீண்டும் புனாவில் மும்முரமாய் நடந்துவருகிறது. இன்னும் ஒரு மாதத்தில் ஷூட்டிங் முடிவடைந்து விடுமாம்.

"சியாமளா" (சிறுகமணி)

ரஞ்சன் மற்றெல்லாப் படங்களையும் விட சந்திரலேகாவில் அதி சிறப்பாய் நடித்திருப்பது எதனால்?

டைரெக்டரின் திறமைதான் காரணம்.

கே. அப்புக்குட்டன் நாயர் (கொழும்பு)

ஸிடாடல் ஞானசௌந்தரியில் நடனம் ஆடும் லலிதா, பத்மினி—இவர்களின் சொந்த ஊர் எது?

அவர்கள் திருவாங்கூரைச் சேர்ந்தவர்கள்.

பி. வேலுசாமி (ஆண்டிப்பட்டி)

டி. ஏ. மதுரத்தின் சொந்த ஊர் எது? அவருக்கு என்ன வயதாகிறது?

மதுரத்தின் சொந்த ஊர் ஸ்ரீரங்கம். வயது சுமார் 30 ஆகிறது.

"சினிமா விசிறி" (சென்னை)

தென்னிந்திய சினிமாவில் மேக்கப் செய்வதில் யாருக்கு முதல் ஸ்தானம் அளிக்கலாம்?

ஹரிபாபுவுக்குத் தான் என்பதில் அபிப்பிராய பேதம் இராது.

அ. கங்காதரன் (திருச்சி)

டி. வி. குமுதினி அசோக் குமாருக்குப் பிறகு ஏன் படங்களில் நடிக்கவில்லை? தற்போது என்ன செய்து வருகிறார்?

அசோக் குமாருக்குப் பிறகு அவர் "பக்த காளத்தி, ஸ்ரீமுருகன், சுலோசனா" ஆகிய படங்களில் தோன்றியது ஏன் உம் கண்களுக்குப் புலப்படவில்லை? கடைசியாக அவர், (சீக்கிரமே வெளிவரவிருக்கும்) பக்தஜனா தமிழ்ப் படத்தில் நடித்திருக்கிறார்.

எஸ். சங்கர் (கொழும்பு)

கண்ணாம்பாவுக்கு "பசுபுலேட்டி" என்ற பட்டம் எதற்காக, எப்பொழுது கொடுக்கப்பட்டது?

"பசுபுலேட்டி" என்பது பட்டமல்ல; அது அவருடைய குடும்பப் பெயராகும்.

"பொது ஊசி" (யாழ்ப்பாணம்)

குண்டூசியாரே! உம்முடைய ஊசி எதனால் செய்யப்பட்டது? எப்பொழுது துருப்பிடிக்கும்?

ஆயிரக்கணக்கான நேயர்களின் "அபிமானம்" என்ற உலோகத்தால் செய்யப்பட்ட "குண்டூசி" ஏன் துருப்பிடிக்கப் போகிறது?



சில தினங்களில் வெளிவர விருக்கும் "போஜன்" தமிழ்ப் படத்தில் கதாநாயகியாய் நடிக்கும் வரலக்ஷ்மி.

எல். பி. பரமானந்தம் (கல்கத்தா)

பத்மஜோதியில் நடித்த பத்மா ஏன் படவுலகிலிருந்து விலகிவிட்டார்?

மற்றவர்களுக்குப் படிப்பினை போதித்து வந்த அந்த வாத்தியாரம்மா பத்ம ஜோதியில் நடித்த பின்னர் 'சினிமா தமக்கு லாயக்கற்ற தொழில்' என்ற படிப்பினையைத் தெரிந்து கொண்டு விலகிவிட்டார்!

ஜி. ஸ்ரீநிவாஸன் (சூளை)

நான் சினிமாவில் சேர விரும்புகிறேன். சேர்ந்தால், பாடும்போது தாளம் போட வேண்டுமா?

சினிமாவில் பாடும்போது தாளம்போடுவது வழக்கமில்லை. அது தான் அநேகரிடம் கிடையாதே! ஆனல் சினிமாவில் சேர்ந்துள்ளவர்களில் அநேகர் சோற்றுக்குத் தாளம் போட்டு வருவதை நீர் தெரிந்து கொள்ளும்.

வி. ஏ. ஓடாந்தூர் (காட்பாடி)

விஸ்வாமித்திராவில் கே. ஆர். ராம்சிங் பாடுவது சொந்தக் குரலிலா, அல்லது இரவல் குரலிலா?

இரவல் குரலில்தான்-அவருக்குப் பாடத் தெரியாது. அதற்குப் பதில் நடிக்கச் சொன்னல் வெளுத்துக்கட்டி விடுவார்.

ஆர். ராகவன் (பள்ளத்தூர்)

உங்கள் பத்திரிகையில் விளம்பரம் செய்து வரும் மதுரை ஏ. வி. அண்ட் ஸன்ஸும், காரைக்குடியில் நடைபெற்றுவரும் ஏவி. எம். ஸ்டுடியோவும் ஒருவருடையதுதானு?

இல்லை. ஏ. வி. அண்ட் ஸன்ஸ் அழகிய பெண்மணிகளை அழகுபடுத்தும் ஆபரண வியாபாரிகள். ஏவி. எம். ஸ்டுடியோவோ அழகிய பெண்மணிகள் மூலம் சினிமாத் திரையை அழகு படுத்தும் பட முதலாளிகளாவர்.

கே. ஆறுமுகம் (கீரனூர்)

தென்னிந்தியாவிலேயே சிறந்த ஸ்டுடியோ எது?

ஜெமினி ஸ்டுடியோதான்.

ச. ஆறுமுகம் (சிவகாசி)

குண்டூசி அண்ணு! கே. தவமணி தேவி தற்போது என்ன செய்து கொண்டிருக்கிருர்? நாட்டியம் ஆட அழைத்தால் வருவாரா?

அவர் தற்போது சும்மாத்தான் இருக்கிருர். சினிமாவில் அவரைக் கூப்பிடுவோரைக் காணும், ஆதலால் நாட்டியத்திற்கேனும் யாராவது கூப்பிட மாட்டார்களா என்றுதான் காத்துக் கொண்டிருக்கிருர். ஆனல் அவருடைய நாட்டியத்தைப் பார்ப்பதற்கு ஆள்கள் இருக்கின்றனரா என்பதை முதலில் தெரிந்து கொள்ளும்.

வெள்ளித் திரைக்கு விரைவில் வரவிருக்கும் முபாரக் "பில்ஹணு"வில் சகுந்தலாவும், ஜெயஸ்ரீயும்.

பப்பட் (பண்ணுருட்டி)

நான் சினிமாவில் சேர்ந்து ஏதாவது ஒரு பிரபல நடிகையுடன் காதல் சீனில் நடிக்க விரும்புகிறேன். இதற்கு என்ன வழி சொல்லும்?

இதென்ன பிரமாதம்? கதாநாயகியின் வேலைக்காரன் வேஷம் கிடைத்தால் உம் அபிலாஷை தீர்ந்துபோகிறது!

என். ராஜு (புதுக்கோட்டை)

நீங்கள் சந்திரலேகாவை பிரமாதமாய்ப் புகழ்ந்து எழுதியிருக்கிறீர்களே; காரணம் என்ன?

அந்தப் படம் பிரமாதமாய் இருப்பது தான்; இது தெரியவில்லையா?

ஏ. சங்கரன் (புடு, கோலாலம்பூர்)

காஞ்சனமாலா தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்? அவரது விலாஸத்தைத் தெரிவிக்க முடியுமா?

சித்த ஸ்வாதீனமில்லாதிருக்கும் அவருடைய விலாஸத்தைத் தெரிவிக்காமலிருப்பது அவருக்கும் சரி, உமக்கும் சரி, நன்மையாயிருக்குமல்லவா?

து. குமரேசன் (விழுப்புரம்)

டி. எஸ். ராஜலக்ஷ்மி ஏன் சினிமாவில் நடிப்பதை விட்டு நாட்டியம் ஆடப் போய் விட்டார்? அவரது விலாஸம் தேவை.

அவரை விட்டு நம் பட முதலாளிகள் வேறு நபர்களுக்கெல்லாம் சந்தர்ப்பம் அளித்து வந்தது காரணமாயிருக்கலாம். அவரது விலாஸம்:— 61 துளசிங்க நாய்க்கன் தெரு, புதுப்பேட்டை, மௌண்ட்ரோடு, சென்னை.

பீ. என். கிருஷ்ணமூர்த்தி (கோயமுத்தூர்)

நீங்கள் பதிலளித்திருந்ததற்கிணங்க, என் ஜாதகத்தை ஜோஸியரிடம் காண்பித்தேன். 'சீக்கிரத்தில் நான் ஒரு கலைஞனாகி விடுவேன்' என்று சொன்னார். ஆதலால் இனி யாவது சினிமாவில் சேருவதற்கான வழியைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

அட, ராமா! அதையும் அந்த ஜோஸியரிடமே கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கக் கூடாதோ?

எஸ். ஏ. ஜாபர் (பெரம்பூர்)

ராம்-ரஹீம் என்ற படம் என்ன வாயிற்று? ஏன் இன்னும் வெளிவரவில்லை?

சென்னை ரஸிகர்களுக்கு இப்பொழுது காக்ஷி அளித்து வரும் ஜுபிடர் "அபிமன்யு"வில் நடிக்கும் சந்தானலக்ஷ்மி.

இப்படத்தைத் தயாரிக்க முற்பட்டவர்கள், லைஸென்ஸ் கிடைக்காத காலத்தில் லைஸென்ஸிற்காக பகீரதப்பிரயத்தனம் செய்தார்கள். பின்னர் யார் வேண்டுமானாலும் படம் பிடிக்கலாமென்றான காலத்தில் யாரிடமிருந்தாவது பணம் பெயராதா என்று தலைகீழாக நின்றார்கள். அப்படியே பணம் கிடைத்து இந்த ஹிந்து முஸ்லீம் ஒற்றுமைப் பிரசாரப் படத்தை வெளியிட்டாலும் பாகிஸ்தானை இந்தியாவுடன் மீண்டும்சேர்த்துவிட முடியாது என்ற எண்ணத்தினால் போலும், படத்தை பாதியோடு நிறுத்தி விட்டார்கள்!

எம். ஏ. நமசிவாயம் (அம்பாசமுத்திரம்)

வசுந்தராதேவி தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

அவர் செய்து கொண்டிருப்பதையெல்லாம் சினிமா உலகம் தெரிந்து கொள்ளக்கூடியதாயில்லை!

சோமு (சேலம்)

சின்னப்பாவைவிட ஹொன்னப்பா பாட்டில் சிறந்தவர் என்று எழுதி

யிருக்கிறீர். சின்னப்பாவின் பாட்டை உத்தமபுத்திரன், கண்ணகி, ஆர்ய மாலா, குபேர குசேலா, மனோன்மணி, ஹரிச்சந்திரா ஆகிய படங்களில் ஜனங்கள் மிக ரஸித்திருக்கிறார்கள். நீங்கள்கூட முன்பு (ஹநுமானில்) அவரது பாட்டைப் புகழ்ந்திருக்கிறீர். அப்படியிருக்க இப்பொழுது நீங்கள் அளித்திருக்கும் பதில் சரியானதா?

என்னுடைய தற்போதைய பதில் தற்போதைய நிலைமையை அனுசரித்தது. "ஹரிச்சந்திரா" படத்திற்குப் பிறகு சின்னப்பா குறிப்பிடத்தக்கபடி பாடவில்லை என்பதை உம்முடைய கேள்வியே விளக்குகிறதே?

ஆர். ஏ. ராமய்யா (ஊருகலை)

யூ. ஆர். ஜீவரத்தினத்தின் சொந்த ஊர் எது? என்ன ஜாதியைச் சேர்ந்தவர்? வயது என்ன?

சுமார் 23 வயதான ஜீவரத்தினம் செங்குந்த முதலியார் ஜாதியைச் சேர்ந்தவர். சொந்த ஊர் ஊஞ்சலூர்.

ஆர். வி. பாலாச்சாரி (தர்மபுரி)

முன்பு மதராஸ் மெயில் என்று ஒரு தமிழ்ப் படம் வெளிவந்ததா?

ஆம்; பாட்லிங் மணி, டி. என். மீனாக்ஷி, கே. ஆர். செல்லம் ஆகியோர் நடித்து, பம்பாயில் தயாராகி, முன்பு வெளிவந்த இந்த ஸ்டண்ட் படம் நல்ல வசூலைப் பெற்றது.

வி. எஸ். கந்தையா (யாழ்ப்பாணம்)

குண்டுசியாரே! உம் பத்திரிகை மாதாமாதம் கால தாமதமாய் வரக் காரணம் என்ன?

நம் படத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர்கள் சினிமாக் கம்பெனிகளை நிர்வகிக்கத் தெரியாதவர்கள். சினிமாப் பத்திரிகைகளோ இவர்களிடமிருந்து, செய்திகள், படங்கள், விளம்பரங்கள் இவைகளைச் சேகரித்து நடத்தவேண்டியதாயிருக்கிறது. சில சமயங்களில், சினிமாப் பத்திரிகையை நடத்துவதை விட்டு, வேறு தொழிலுக்குப் போய் விடலாமா என்றே எனக்கு வெறுப்புத் தோன்றும். ஆதலால், நீரும் மற்ற வாசகர்களும் எனக்கு அநுதாபம் தெரிவிப்பது மிகப் பொருத்தமாயிருக்கும்.

வி. ஜி. பதி (கள்ளக்குறிச்சி)

சினிமா நடிகைகள் சம்பாதிக்கும் பணத்தை எல்லாம் என்ன செய்கிறார்கள்?

முன்பெல்லாம் தாங்களே படமுதலாளிகளாக மாறி நஷ்டம் அடைவது வழக்கம். இப்பொழுதெல்லாமோ அவர்கள் மனைவிமார்களாக மாறி கணவன்மார்களிடம் ஏமாறுவது சகஜமாகி வருகிறது!

ஜி. புருஷோத்தமன் (நெல்லிக்குப்பம்)

குண்டுசியாரே! உம்மால் கொஞ்சம் குண்டுசி சப்ளை செய்ய முடியுமா?

பேஷாய்! ஆறு ரூபாயை அனுப்பி வைத்தால் ஒரு வருஷத்திற்கு உங்கள் வீடுதேடி வந்து விடுகிறது!

ரஸிகர்கள் பார்ப்பதற்காக ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கும் "பிழைக்கும் வழி"யில் டி. ஏ. ஜெயலக்ஷ்மி யாருக்காகவோ ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கிறா.



"ஸ்ரீ வள்ளி"யில் நாட்டியமாடிப் புகழடைந்த செளதாமினி "ஸ்ரீ ஆண்டாளி"ல் மேலும் அதிகப் புகழ் பெறுவாராம்

கிருஷ்ணன் (தாழக்குடி)

குண்டூசியாரே! உமக்குக் கலியாணம் ஆகிவிட்டதா? குழந்தைகள் உண்டா? எனின், எத்தனை ?

எனக்கு பாக்கியாக உள்ளது அறுபதாம் கலியாணம் ஒன்றுதான்! நேயர்களின் கேள்விகளுக்குப் பதிலளிப்பதில் தடை ஏற்படக்கூடாதென்பதாலோ என்னவோ, அந்தக் கடவுள், எனக்கு ராமேஸ்வரத்திற்கு யாத்திரை போகவேண்டிய அவசியத்தை வைக்கவில்லை! ஒரு புத்திரனையும், இரு புத்திரிகளையும் எனக்கு அளித்திருக்கிறார்.

டி. பொன்னுத்தாய் (அருப்புக்கோட்டை)

பக்ஷிராஜா ஸ்டுடியோவில் வளர்க்கும் முயல், புறா, மயில், மான் இவைகளுக்காக மாதச் செலவு என்ன இருக்கும்?

என்னவிருந்தாலும், அவர்கள் வளர்க்கும் நக்ஷத்திரங்களுக்கு ஆவதைவிட அதிகச் செலவாகாது என்று நிச்சயமாய் சொல்லலாம்!

என். வி. காஞ்சனா (தாழக்குடி)

சந்திரலேகாவில் சசாங்கன் தன் வேலையாளைக் கோபித்துக் கொள்ளும்போது நாய் குரைக்கிறதே. சரியான வேளையில் நாயைக் குரைக்கச் செய்வதற்காக தாங்கள் பின்னால் நின்று கொண்டு அதை அடித்திருப்பீர்களோ ?

அதெல்லாமில்லை. நீர் நாய்க்கு எதிர்புறத்தில் வந்து நின்றிருப்பீரோ என்றே நான் சந்தேகிக்கிறேன்!

வி. கிருஷ்ணமூர்த்தி (ஆம்பூர்)

ஆயிரம் தலைவாங்கி என்று பெயர் வைத்துக்கொண்டு சிந்தாமணி 999 தலைகளைத் தானே வாங்குகிறாள்?

இக்கதாசிரியரின் தலை ஒன்று பாக்கியிருப்பதை சிந்தாமணி மறந்து போய் விட்டதற்கு யார் என்ன செய்யலாம்?

எஸ். கே. என். ஷண்முகம் (தாம்பின்)

சில சினிமா நக்ஷத்திரங்கள், காங்கிரஸ், சோஷலிஸ்ட், கம்யூனிஸ்ட், திராவிடஸ்தான் ஆகிய அரசியல் கக்ஷி எதிலேனும் சேர்ந்து கொள்ளுகிறார்களே; இது சரியா ?

நக்ஷத்திரங்கள் வாழ்க்கையில் எந்தக் கக்ஷியைச் சேர்ந்தவராகவோ அல்லது ஆதரிப்பவராகவோ இருக்கலாம், ஆனால் கலைஞர்களுக்கு ஒரே ஒரு கட்சி தான் உண்டு; அதுதான் கலைக்கட்சி, கட்சி பிரசாரத்தை எவரேனும் தம் கலையில் புகுத்த முயன்றால் அதை "கலை விபசாரம்" என்று சொல்வதே பொருந்தும்.

வி. செல்வராஜ் (பம்பாய்)

டி. ஆர். ராஜகுமாரி எதுவரைப் படித்திருக்கிறார் ?

எந்தப் புஸ்தகம் என்று தெரிவிக்கவில்லையே!

வி. எம். விஸ்வநாத் (ஒத்தப்பாலம்)

குமாரி ருக்மணி வாழ்க்கை வர்ணனையில் அவரது வயது 22 என்றும்

அவர் பிறந்த தேதி 19-4-29 என்றும் இருக்கிறது. இதில் எது சரி?

19-4-27 என்றிருக்க வேண்டும். இந்த அச்சுப் பிழைக்காக வருந்துகிறேன்.

டி. சி. லக்ஷ்மணன் (மண்ணடி)

பி. எஸ். கோவிந்தன் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்? விவாஹம் ஆகிவிட்டதா? குழந்தைகள் உண்டா? தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்?

பி. எஸ். கோவிந்தன் தற்போது "போஜன்" தமிழ்ப் படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். நாயுடு ஜாதியைச் சேர்ந்த கோவிந்தனுக்குப் பல வருஷங்களுக்கு முன்பே விவாஹம் ஆகி விட்டது. ஆனால் புத்ர பாக்கியம் தான் இல்லை.

"முரளீதரன்" (ஜார்ஜ் டவுன்)

நான் வி. ஏ. செல்லப்பாவைச் சந்திக்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

கண்ணை இறுக மூடிக்கொண்டு மௌன்ட் ரோடில் குறுக்கே போனால் போதும்!

கே. ராஜமாணிக்கம் (சொக்கலிங்கபுரம்)

குமாரி ருக்மணி தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்?

ஹிந்தி "ராமதாஸ்", ஹிந்தி "லவங்கி" ஆகிய படங்களில்.

கே. ஏ. எம். சுல்தான் (ஈப்போ, மலேயா)

முன்பு "இந்து நேசன்" ஆசிரியர் நடிக நடிகைகளின் வாழ்க்கையைப் பற்றித் தாறுமாறாக எழுதிவந்தாரே, நீரோ அவர்களைப் பிரமாதமாய்ப் புகழ்ந்து எழுதுகிறீரே?

"சினிமா உலகம் தூய்மை அடைய வேண்டும்; அதில் சம்பந்தப்பட்டவர்களின் வாழ்க்கை பரிசுத்தம் அடைய வேண்டும்" என்பது தான் எங்கள் இருவருடைய நோக்கமும். ஆனால் அதைச் சாதிப்பதற்கு அவர் சென்ற பாதை வெறுக்கக்கூடியதாகும். அவர் கலைஞர்களிடம் உள்ள கலைத் திறனை அறவே மறந்து விட்டு, அவர்களின் வாழ்க்கை விபரீதங்களையே பெரிது படுத்திப் பிரசாரம் செய்து வந்தார். வாழ்க்கை விபரீதங்களை அடியோடு மறந்து விட்டு, அவர்களுடைய கலைத் திறனை மட்டுமே நான் பிரசாரம் செய்துவருகிறேன். கலைஞன் இறந்து விடுவான்; ஆனால் கலை அழிவற்றதல்லவா?

முத்துகிருஷ்ண ரெட்டி (தியாகராயநகர்)

தங்கள் வாழ்க்கை வர்ணனையில் "..........." (நடிகையின்) தாயாரின் பெயரை வெளியிட்டிருக்கிறீரே. ஏன் தந்தையின் பெயரைக் குறிப்பிடவில்லை?

தர்மசங்கடமான கேள்வியைக் கேட்கிறீரே, ஸ்வாமி!

ம. பா. மோஹனசுந்தரம் (வில்லிவாக்கம்)

பி. ஆர். பந்துலு திறமையுடன் நடித்துப் புகழ் பெற்றது நாம் இருவ

"பக்த ஜனா"வில் கோவில் சர்வாதிகாரியாய் தோன்றி பி. ஆர். பந்துலு அசாத்திய கெடுபிடி செய்கிறார்.

ரிலா, விஜயலக்ஷ்மியிலா, அல்லது சம்ஸார நௌகாவிலா?

மூன்றிலுமல்ல; அவருக்குப் புகழ் ஏற்பட்டதெல்லாம் "சம்ஸார நௌகா" நாடகங்கள் மூலம்தான்.

எஸ். சிவசாமி (போடி)

எம். எஸ். சுப்புலக்ஷ்மிக்குக் குழந்தைகள் உண்டா? அவரை மணந்து கொண்டிருக்கும் சதாசிவம் என்ன ஜாதியைச் சேர்ந்தவர்? அவருடைய மூத்த மனைவி உயிருடனிருக்கிறாரா?

எம். எஸ். ஸு-க்கு புத்ரபாக்கியமில்லை. அவரது கணவர் சாதசிவம்,ஐயர் ஜாதியைச் சேர்ந்தவர். அவருடைய மூத்த மனைவி, எம். எஸ். எஸ்.ஸை மணந்து கொள்வதற்கு முன்பே இறந்து விட்டார்.

என். கிருஷ்ணமூர்த்தி (திருவல்லிக்கேணி)

சந்திரலேகாவில் மன்னன் இறகு பேனாவால் எழுதுகிறார். ஆனால் சர்க்கஸ் உதவி கணக்குப்பிள்ளை ஸ்டீல் பேனாவால் எழுதுகிறார். மன்னனுக்கு இறகுபேனா; ஆனால் சாதாரண பிரஜையிடம் ஸ்டீலபேனா—இது பொருந்துமா?

அரசனுக்கு "பார்க்கர்" பேனாவை கொடுத்திருந்தால் நீர் புகார் செய்ய வழி இருந்திருக்காதல்லவா?

எம். கிருஷ்ணஸ்வாமி (ராசிபுரம்)

குமாரி கமலாவின் சொந்த ஊர் எது? என்ன ஜாதியைச் சேர்ந்தவர்? வயது எத்தனை? தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்?

கமலாவின் சொந்த ஊர் மாயவரம். ஐயர் ஜாதியைச் சேர்ந்தவர். அவருக்குத் தற்போது 15 வயது ஆகிறது. சமீபத்தில்தான் அவர் "வேதாள உலக"த்திலிருந்து விடுபட்டு வந்திருக்கிறார்.

கே. வி. கே. (கும்பகோணம்)

ஜெமினி ஞான சௌந்தரியில் பி. எஸ். சுசிலா பாடும் பாட்டுகளெல்லாம் அவராலேயே பாடப்பட்டவைகளா?

இல்லை. ரஞ்சனின் மைத்துனியான கல்பகம் பாடிய பாட்டுகள் அவை.

கே. எஸ். மணி (வத்தலகுண்டு)

சிதம்பரம் "சிங்கக் குட்டி" ஜெயராமனும், புளியமாநகர் "புலிக்குட்டி" பி. எஸ். கோவிந்தனும் சேர்ந்து ஒரே படத்தில் நடித்தால் எப்படியிருக்கும்?

அதிபயங்கரமாய்த்தானிருக்கும்! இப்படத்தைப் பற்றி, "காட்டு மிருகங்களின் இனிய கானம் நிறைந்த படம்" என்று கூட விளம்பரம் செய்யலாம்!

ஆர். கோபு (தர்மபுரி)

குண்டூசியாரே! உம் புத்திக் கூர்மைக்காக ஒரு கைகெடிகாரத்தைப் பரிசாக அனுப்ப உத்தேசம். அதை நீர் எங்கே கட்டிக்கொள்ளுவீர்?

தயவு செய்து ஓடாத கெடிகாரமாய் அனுப்பி வையும்! வீடு கிடைக்காமல் தவிக்கும் நான் அதை என் வீடாக உபயோகித்துக் கொள்ளுகிறேன்!

எம். ஆர். சிவராமன் (மதுரை)

பாரதியார் நம் எல்லோருக்கும் பொது ஆயிற்றே? அவருடைய பாட்டுகளை மற்றவர்கள் உபயோகிக்கக் கூடாது என்று ஸ்ரீ. ஏவி. எம். தடுப்பானேன்?

பாரதி பாட்டுகளை ஒலிப்பதிவு செய்யும் உரிமைகளை 'பிராட்காஸ்ட்' இசைத் தட்டுக் கம்பெனியார் பல வருஷங்களுக்கு முன் விலை கொடுத்து வாங்கிக் கொண்டனர். அதன் பின் அக் கம்பெனியே மறைந்து விட்டதால் இந்த உரிமை அவர்களாலோ மற்றவர்களாலோ பல வருஷங்கள் பயன் படுத்தப்படாமலிருந்துவந்தது. இதை அறிந்த ஏவி. எம். இவ்வுரிமைகளைத் தாம் வாங்கிக் கொண்டு அதை நன்கு பயன் படுத்தி வருகிறார். ஆதலால் இந்த உரிமைகளைப் பொதுச் சொத்தாக வைக்காமல் ஒரு தனி நபருக்கு விற்றவர்களை விட்டு விட்டு, வாங்கினவர்கள் மீது குறை கூறுவது நியாயமல்லவே.



விரைவில் வெளிவரவிருக்கும்
ஒரு தமிழ்ப் படத்தில் தோன்
றும் இந்தத் தாடிப் பெரியார்
யாரென்று சொல்லுங்கள்
பார்க்கலாம். தெரியவில்லை
யென்றால் அடுத்த ஊசியைப்
பாருங்கள்.

கே. சுப்ரமண்யம் தயாரித்து
வரும் தேசியத் தமிழ்ப் பட
மான ''கீதகாந்தி''யில் பீ. ஏ.
பெரியநாயகி நர்ஸாகத்
தோன்றி சேவை செய்கிருர்.

பிரபல நடிகை கே. ஆர். செல்லம் எந்தப் படத்தில் நடித்தாலும தம் பாகத்தைத் திறம்பட நடித்து 'சபாஷ்' பெறுகிறார். "பக்த ஜனா" இதற்கு விதிவிலக்கல்ல.



இடது புறம்:
"சம்சாரம்" தமிழ்ப் படத்தில் மாதவனும், கே. கே. கிருஷ்ணவேணியும்.

★

வலது புறம்:
"வேதாள உலக"த்தில் இந்தப் பரிஹாஸப் படலம் வருகிறது

குண்டூசி



இடது புறம்:
மூபாரக் "[illegible]"வில் ஒரு காட்சி.
புளிமூட்டை, சுந்தர்ராவ், எஸ். எம். ஷெய்க்கப்பா

★

வலது புறம்:
"போஜன்" தமிழ்ப் படத்தில் டி. எஸ். கோவிந்தன், வரலக்ஷ்மி.

ஹாஸ்ய நடிகை எம். எஸ். எஸ்.
பாக்கியம் "அபிமன்யு"வில் நாட்
டியம் கூட ஆடுகிறார்.

திருச்சூர் டி. பிரேமாவதிக்கு "திரு
மழிசை ஆழ்வார்" நல்ல பெயரைச்
சம்பாதித்துக் கொடுக்குமாம்.

சிறந்த ஹாஸ்ய நடிகரான சாரங்க
பாணி "வேதாள உலக"த்தில்
படம் பூராவிலும் தோன்றி சக்கை
போடு போடுகிறாராம்.

பொதுஜனம் பேசுகிறார்

* பாலஸ்-டி-வேல்ஸ்

"சேற்றில் செந்தாமரை" என்று சொல்லுவார்களே, அதுபோல திருநெல்வேலிக் கூடல் "பாலஸ்-டி-வேல்ஸில்" (பெயர் மட்டிலும்தான் பாலஸ்!) "சந்திரலேகா" நடக்கிறது. இப்படம் வருமுன் தியேட்டர் ஒரு வார விடுமுறையில் இருந்தது. அந்த விடுமுறையில் இரட்டைப் புரொஜெக்டர்கள் வைப்பதற்காக ஜெமினி ஸ்டுடியோவிலிருந்து ஸ்பெஷல் இன்ஜினியர் வருவதாகக் கூடச் சொன்னார்கள். தியேட்டர் சரிவரய் இருந்தால்தான் படம் கொடுக்கப் போவதாகக்கூடச் சொன்னார்களாம்.

'முதல் நாள் படம் பார்க்கும் கோஷ்டி'யில் சேர்ந்தவன் நான். ஆனால் அன்று மாலை 6-30 மணிக்கு நான் கண்ட காக்ஷி என்னை திடுக்கிடச் செய்தது. டிக்கெட் ரூமை என்னால் கண்டு பிடிக்க முடியவில்லை, அனைவரும் படையெடுத்த மாதிரி குழுமினர், நான் 'என் தேகாரோக்யத்தை' உத்தேசித்து முதல் நாள் பார்க்கும் வழக்கத்தை மறந்தேன். ரௌடிகள் போல சோபாவிற்குக்கூட அடிதடிதான். 'மிஸ் மாலினி'யில் டிக்கெட் எடுக்கும் காக்ஷியை காண்பித்தார்களே அதையும் தோற்கடித்து விட்டார்கள். இதை 'கேபின்' ரூமிலிருந்து போட்டோ வேறு பிடிக்கிறார் ஒரு ரஸிகர்! அது வேறு! முன்னோர் யார் செய்த பாவமோ தியேட்டருக்குள் போய்விட்டேன் ஒரு மட்டிலும்! பெஞ்சியிலும் தரையிலும் அதிகப் பிரவேசம் செய்யப்பட்டிருந்தது. ஓரங்களில் எல்லோரும் நின்றுகொண்டு பார்த்தார்கள். "ஏய்! மறைக்குது உட்காரு!" என்ற கூச்சல். கொட்டகைக்குள் வாயுபகவான் இறந்து விட்டார்! ஜனங்கள் இரண்டாயிரம் கசரத் எடுத்தவர்கள் மாதிரி காணப்பட்டார்கள். புளி மூட்டை மாதிரி அடைக்கப்பட்ட தரை மஹா ஜனங்களின் ஒலிபெருக்கிபோன்ற கூச்சல்; விசிறிகளின் 'கடகட' சங்கீதம் படத்திற்கு பக்க வாத்தியம் போல் இருந்தது, தரையில் திரையின் முன் பக்கத்திலிருந்து அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் படம் பார்த்தார்களோ என்னவோ!

இந்த லக்ஷணத்தில் சிகரெட் சுருட்டு, 'காதலர்கள்' வேறு! இரண்டு மூன்று பேர் மூர்ச்சையற்றுக்கூட விழுந்து விட்டார்கள் தியேட்டருக்குள். உள்ளே நல்ல அலங்கரிப்பும், இரட்டை புரொஜெக்டர்களும் வைத்து விட்டால் சுகாதார முறை ஆய்விட்டது என்று நினைக்கிறார்கள் போலும், தியேட்டர்காரர்கள்!

"கலையழகன்",

கொக்கிரகுளம்.

எம்பயர் தியேட்டர்

எங்கள் ஊரில் உள்ள எம்பயர் தியேட்டரில் புதுப் படங்களைக் காட்டுவது குதிரைக் கொம்பாய் இருக்கிறது. அநேகமாக அறுந்து போன பழைய படங்களையே தான் காட்டி வருகிறார்கள். அதுவும் இன்றைக்கு ஒரு படம், நாளைக்கு ஒரு படம் என்று அடிக்கடி படங்களை மாற்றிக் கொண்டேயிருக்கிறார்கள்.

தியேட்டருள்ளே சென்றால் ஆசனங்கள் மீது வெற்றிலை பாக்கு எச்சிலும், சிகரெட் துண்டுகளும் இருக்கும். படம் பார்ப்பவர்கள் இதையெல்லாம் கவனித்து உட்கார வேண்டியிருக்கிறது. ஆசனங்களிலிருந்து மூட்டைப் பூச்சிகளின் படையெடுப்பு வேறு!

படத்தையாவது சரியாய் காட்டுகிறார்களா? அதுவும் இல்லை. படம் ஓடிக்கொண்டிருக்கும்போதே சப்தம் நின்றுவிடும். படங்களில் சில பாகங்களை காட்டாமலும் விட்டு விடுகிறார்கள்.

திரையில் படம் ஓடிக் கொண்டிருக்கும் போது கூட ஒரே இரைச்சலாக இருக்கும். படம் முடியும் வரையில் பான், பீடா, பீடி, காபி, டீ முதலியவைகளை சுற்றிச் சுற்றி விற்கிறார்கள்.

இத் தியேட்டரில் ஸ்திரீகள் படம் பார்ப்பதற்கு நிறைய வருகிறார்கள். ஆனால் அவர்கள் சிரமமில்லாமல் டிக்கெட் வாங்குவதற்கு வசதிகள் செய்யப் படவில்லை.

மேலே சொன்ன குறைகளை யெல்லாம் இத் தியேட்டர் முதலாளி கவனித்து, சீர்திருத்தம் செய்வாரா?

ஜே. எம். ராமமூர்த்தி,
பெங்களூர்.

சென்னையிலுமா இது!

சமீபத்தில் வெளிவந்த ஒரு புதுப்படத்தைக் காண கெயிட்டி டாக்கீஸ"க்குச் சென்றிருந்தேன். தியேட்டர் வெளிப்புறமே எனக்கு பிரமிப்பை உண்டுபண்ணியது. சென்னை போன்ற பட்டிணத்தில் கூடவா இவ்வளவு மோசமான தியேட்டர் இருக்கவேண்டும்?

டிக்கெட் கொடுக்குமிடம் அதைவிட ஆச்சரியத்தை உண்டுபண்ணியது. கடைசி இரண்டு வகுப்புகளுக்கும் டிக்கெட் வாங்க ஒரு 'க்யூ' நின்று கொண்டிருந்தது. வெயில், மழை முதலியவைகளுக்குப் பாதுகாப்பாக எதுவும் இல்லை. மழை வந்தால் ஒண்டக்கூட இடமில்லை. வெயிலில் அகப்பட்டுக் கொண்டால் மூர்ச்சைபோட்டு விழவேண்டியதுதான்.

இவ்வளவு கஷ்டங்களையும் சமாளித்துக்கொண்டு கொட்டகைக்கு உள்ளே சென்றாலோ உட்காரும் இடங்கள் நம்மை ஆனந்தசாகரத்தில் ஆழ்த்தும். சரித்திர காலத்து நாற்காலி, பெஞ்சுகள் உங்களை வரவேற்கும். அதிலிருக்கும் மூட்டைப்பூச்சிகள் உங்களை அன்புடன் உட்காரச் செய்து ரத்தத்தை உறுஞ்ச ஆயத்தம் செய்யும்.

இதையும்விட இத்தியேட்டரில் படம் திரையில் தெரிவதோ சொல்லவே வேண்டாம். பாட்டு, பேச்சுகள் எதிரொலியுடன்தான் கேட்கும்.

ஐஸ், சோடா, கலர் முதலியவைகள் மேல் வகுப்புக்காரர்களுக்குத்தான் விற்கப்படுகிறது. கீழ் வகுப்பினருக்கு டீயும், பீடியும்தான் விற்கிறார்கள். வியாபாரத்தில்கூட இம்மாதிரி பேதம் காண்பிப்பது மிகவும் வருந்தத்தக்கது.

இவ்வளவு குறைகளையும் தியேட்டர்காரர் நிவர்த்திக்க வேண்டும். அல்லது சர்க்காராவது தகுந்த நடவடிக்கை எடுத்துச் செய்யவேண்டும்.

டி. சி. லெக்ஷ்மணன்,
சென்னை.

சேலம் சூர்யா பில்ம்ஸாரின் "ஸ்ரீ ஆண்டாளி"ல் காளி என். ரத்தினமும், எம். எஸ். சுப்புலக்ஷ்மியும்

தியேட்டரின் குறைகள்

எங்கள் ஊரில் புகழகிரி டாக்கீஸ் என்ற பெயருள்ள ஒரு தியேட்டர் இருக்கிறது. தியேட்டர் கூடுமானவரை நல்ல முறையில் கட்டப்பட்டிருந்தாலும் பொது ஜனங்களுக்கு அசௌகரியத்தையும் ஏற்படுத்தி வருகிறார்கள். அதாவது தியேட்டருக்குள் மின்சார விசிறிகளும், போதுமான விளக்கு வெளிச்சமும் குடிப்பதற்கு தண்ணீர் வசதியும் கிடையாது.

படம் 1-வது காக்ஷி ஆரம்பிப்பது $7\frac{1}{4}$ மணி; 2-வது காக்ஷி ஆரம்பிப்பது $11\frac{1}{2}$ மணி; 2-வது காக்ஷி முடிவது $2\frac{3}{4}$ மணி அல்லது 3 மணி ஆகிவிடுகிறது. மேலும் படம் ஓடுவது ஒரு மிஷினில்தான். மானேஜ்மென்ட் சரிவர கிடையாது. தியேட்டரில் வேலை பார்க்கும் ஆட்கள் பெண்கள் உட்காரும் இடங்களில் போய் நின்றுகொண்டு, அட்டகாசம் செய்வதால் பெண்கள் சினிமாவுக்குப் போவதற்கு பயப்படுகிறார்கள். மேலே கண்டுள்ள குறைகளை தியேட்டர் சொந்தக்காரர் தீர்த்து வைப்பார் என்று எதிர்பார்க்கிறேன்.

ஏ. எம். குருசாமி,
சின்னமனூர்

அட்டூழியம்

சேலத்தில் மொத்தம் 8 சினிமாத் தியேட்டர்கள் இருக்கின்றன. நியூ சினிமா, பிரபாத், ஓரியண்டல், விக்டோரியா, சரஸ்வதி, அம்பிகா, சித்தேஸ்வரா ஆகிய தியேட்டர்கள். அம்பிகா, நியூ சினிமா, பிரபாத், சரஸ்வதி, ஓரியண்டல் சித்தேஸ்வரா முதலியவைகளில் க்யூ வழக்கம் ஒழுங்காக அநுசரிக்கப்படுகிறது. தரை மகாஜனங்களும் டிக்கெட் வாங்கிக் கொண்டு போய் விடுகிறார்கள். இந்த டாக்கீஸ்களில் ஒழுங்காகவே சினிமா காட்சியும் நடைபெறுகிறது. ஆனால் அம்பிகா டாக்கீஸில் பெண்கள் தரை டிக்கெட் வாங்கிக் கொண்டு உள்ளே போகும் சமயத்தில் கேட்டிலிருப்பவன் பெண்கள் டிக்கெட்டை வாங்கும்பொழுது கையைகெட்டியாகப் பிடித்துக்கொள்கிறான். பெண்களோ எங்கே இடம் கிடைக்காமல் போய்விடுகிறதோ என்று இதைக் கவனிக்காமல் அவசரமாக உள்ளே போய்விடுகிறார்கள். மேலும் சென்ட்ரல், விக்டோரியா ஆகிய இரு தியேட்டர்களிலும் இதே கண்ணராவிதான் நடக்கிறது.

சென்ட்ரலிலும், விக்டோரியாவிலும் முதலாளிகள் ஒழுங்கான கேட்கீப்பரை வைத்து நடத்தினால் என்ன ?

வி. டி. செல்வராஜ்,
குகை, சேலம்.

கே டாக்கீஸ்

கோலார் தங்கவயலில் ஒலிம்பியா டாக்கீஸ், கிருஷ்ணா டாக்கீஸ், மாடர்ன் டாக்கீஸ், கே டாக்கீஸ் எனத் தியேட்டர்கள் நான்கு உள்ளன. இந்த நான்கு தியேட்டர்களுக்கும் முதன்மை வாய்ந்த தியேட்டர், ஒலம்பியா டாக்கீஸ். மிகவும் மோசமான தியேட்டர் கே டாக்கீஸ் இத் தியேட்டரில் புதிய படம் வந்தால் கூட நான்கு, ஐந்து தடவை படம் துண்டிக்கப்படுகிறது. படச் சுருளை மாற்றும் பொழுது, படத்தை தலை கீழாகவும் பாதி படம் மேலும், பாதி படம் கீழுமாகவும் காண்பிக்கப்படுகிறது. இப்படிப் படம் காண்பிக்கும் பொழுது தியேட்டரில் ஜனங்கள் கோஷம் செய்தபின் மறுபடியும் படத்தை சரிவர திருப்பிக் காட்டப்படுகிறது. உதாரணமாக, சமீபத்தில், கே டாக்கீஸில் திரையிடப்பட்ட "ஞான சௌந்தரி" படத்தை முதல் நாளிலேயே, படம் பார்த்து வந்த ரஸிகர்கள் சலிப்புடன் குறை கூறினார்கள். காரணம் படம் சரிவரக் காட்டப்படாமலும், படம் அறுபட்டும், படம் தலை கீழாகவும் காட்டப்பட்டதும்தான்.

எந்த நல்ல படங்கள் வந்தாலும் கே டாக்கீஸிற்குப் போவதற்கு சலிப்பு தோன்றுகிறது. அதனால் எந்த படமும் இத் தியேட்டரில் அதிக நாள் காட்டப்படுவதில்லை. தியேட்டர் முதலாளி இக் குறைகளை நிவர்த்திக்க வேண்டும். இக் குறைகளினால் நல்ல படம் வந்தால் கூட கே டாக்கீஸில், மோசமான பெயரை வாங்கிக் கொண்டு போகிறது.

ஸேப்டி பின்,
தங்கவயல்.

பொதுஜனங்களே !

நம் நாட்டில் இருக்கும் தியேட்டர்களை பற்றி பலர் பலவிதமான குற்றங்களை கண்டு எழுதி இருக்கிறார்கள். ஆனால் நம்மவர்கள் படம் பார்க்கச் சென்றால் வெற்றிலையை தின்றுவிட்டு கண்ட இடங்களில் துப்புவதும், சுண்ணாம்புகளை பெஞ்சில் தடவவும் செய்கிறார்கள். படம் முடிவதற்கு முன் எழுந்து நின்று கொண்டும் போய்க்கொண்டும் இருக்கிறார்கள். டிக்கெட் வாங்குவதற்கு க்யூவில் நின்று வரிசைக் கிரமமாக வாங்குவதற்குப் பதில் ஒருவருக்கொருவர் அடித்து இடித்துக் கொண்டும் டிக்கெட் வாங்கிக் கொண்டும் உள்ளேபோய், வீட்டுப் பேச்சுகளை பேச ஆரம்பித்து விடுகிறார்கள். அதனால் அடுத்தவர்களுக்கு இடஞ்சல். பிறர் மீது குற்றம் சொல்பவர்கள் இனிமேலாவது படம் பார்க்கச் சென்றால் தியேட்டர்களை அசுத்தம் செய்யாமலும், அமைதியாகவும் படம் பார்த்துவிட்டு வருவார்கள் என்று நம்புகிறேன்.

இ. வேம்பு,
சிலோன்

மாறுதல் வேண்டும்

விஞ்ஞான வளர்ச்சி நாளுக்கு நாள் முன்னேற்றம் அடைந்துவரும் இந்த நாகரிக காலத்தில் சினிமாக் கலைக்கும்

*பரிசு பெற்ற கடிதம்

எழுதியவர் :

" கலையழகன் "

கொக்கிரகுளம்.

அதன் வளர்ச்சிக்காகப் பாடு படும் தொண்டர்களுக்கும் நல்ல மதிப்பு இருந்து வருகிறது.

இதை நன்குணராத பட முதலாளிகளும், கதாசிரியர்களும், டைரெக்டர்களும் மக்கள் மனதை அறிந்தவர்கள் போல ஆபாசக் கருத்துக்களைப் புகுத்தி, அதற்கேற்ப ஆடை அணிவித்து சினிமாக் கலையையே கெடுத்து வருகிறார்கள். இந்நிலை மாறவேண்டும். மக்களுக்குப் பயன் அளிக்கும் முறையிலும், தேசிய உணர்ச்சி ஒவ்வொருவர் மனதிலும் ஏற்படும் வகையிலும், விபசார ஒழிப்பு, லஞ்ச ஒழிப்பு ஆகியவற்றை நிரூபிக்கும் முறையிலும் படங்கள் வெளிவர வேண்டும். மேலும் குறிப்பிட்ட, புகழ்பெற்ற நடிகர்களை எச்சமயமும் நடிக்கச் செய்வதை விட உணர்ச்சி ததும்ப நடிக்கும் புது நடிக நடிகைகளுக்கு வசதி அளிப்பது நலம். எனவே படமுதலாளிகள் லாப மொன்றையே குறிக்கோளாகக் கொள்ளாமல் கலைக் கண்ணாடியிலுள்ள மாசை அகற்றி மக்கள் முற்போக்கடையத் தக்க படங்களைப் பிடித்து மக்களை நல்வழியில் திருத்துவார்களா?

அமிருத லிங்கம்,
பண்ணுருட்டி.

நாட்டிற்கேற்ற படம்

தற்காலத்தில் பொதுஜனங்கள் பெரும்பாலும் திரைப்படத்தை விரும்புகிறார்கள். வெளிநாடுகளில் தங்கள் நாட்டின் பெருமை, நாகரிகம், கலை முதலியவைகளை திரைப்பட மூலம் மக்களுக்குப் புகட்டுகிறார்கள். ஆனால் நம் தமிழ் நாட்டிலே இருக்கும் பட முதலாளிகள், டைரெக்டர்கள், வசன கர்த்தாக்கள் நம் நாட்டுப் பெருமை, நாகரிகம், கலை முதலியவைகளைப் பற்றி சிறிதும் சிந்திப்பதில்லை. அன்னிய நாட்டு நடனங்களையும், ஆபாசமான உடைகளையும் புகுத்துகிறார்கள். இதன் மூலம் நம் நாட்டு நடை, உடை, பாவனை முதலியவைகளைப் பற்றி எவரும் அறிந்துகொள்ள முடிவதில்லை. இதனால் நம் நாட்டுப் பெருமையும் போய் விடுகிறது. இவை எல்லாம் ஒழித்து இனிமேலாவது தமிழ்ப் பட முதலாளிகளும், வழிகாட்டுபவர்களும் கவனித்து பண்டைய தமிழ் நாட்டின் பெருமை, நாகரிகம், கலை முதலியவைகளை நன்கு சித்தரிக்க முன்வருவார்களா?

ச. பா. தட்சணாமூர்த்தி,
செங்கல்பட்டு.

"FORTIS"

FOR
PRESENTATION

Rolled Gold 15 Jewels Rectangular shape, Fancy Dials, Extra fine quality Lever Movement, Beautiful appearance.

NO DOUBT IT IS A GENTS ORNAMENT
Rs. 80/- ONLY. GUARANTEED 2 YEARS

JALAL & SONS
MADRAS, MOUNT ROAD & HYDERABAD (DN.)

குண்டூசியின் இரண்டாவது இதழில் ஸ்ரீ. வி. எஸ். வெங்கடேசன் "முதலாளி நடிகன்" என்ற ஒரு கற்பனைக் கதையை எழுதியிருந்தார். அதைக் கற்பனைக் கதை என்று குறிப்பிடுவதைவிட நடந்த கதை, நடக்கும்கதை என்று கூறுவது மிகவும் பொருந்தும்.

* * *

முதலாளி, நடிகனாக மாறிவிட நினைக்கும்படித்தான் இருக்கிறது, தற்போதைய சினிமா உலக நிலைமை. இந்த சமயத்தில் சொந்தத்தில் படத் தயாரிப்புக் கம்பெனிகளை ஆரம்பித்த பல நடிக, நடிகைகளைப் பற்றிய நினைவு நமக்கு ஏற்படுகிறது.

* * *

"நடிகர்கள் நடிகர்களாகவே தான் இருக்க வேண்டும். முதலாளிகளாக மாற நினைத்தால் 'பல்டி' அடிக்க வேண்டியதுதான்" என்பது அநேக சந்தர்ப்பங்களில் நிரூபணமாகி யிருக்கிறது.

* * *

அந்த நாளில் ஸ்ரீமதி டி. பி. ராஜலக்ஷ்மி நடித்த படம் என்றால் அமோஹமான ஆதரவு. பதினெட்டு வயதுக் குமரியாக அவர் நடித்தாலும் ரஸிகர்களுக்கு அதைப்பற்றி அக்கரையே யில்லை. அவர் நடித்த குப்பைப் படங்கள்கூட வெள்ளி விழா முதல் வைர விழா வரை எட்டிப் பார்த்திருக்கின்றன. அப்படிப்பட்ட சமயத்தில் திரையிடப்பட்ட அவருடைய சொந்தப் படமான மிஸ். கமலா மட்டும் தோல்வியுற்றதற்கு என்ன சொல்லுவது?

* * *

ஸ்ரீமதி டி. பி. ராஜலக்ஷ்மிக்கு அடுத்தபடி அந்தக் காலத்திலேயே ரஸிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றிருந்தவர் ஸ்ரீமதி எஸ். டி சுப்புலக்ஷ்மிதான். அவர் டைரெக்டர் ஸ்ரீ. கே. சுப்ரமண்யத்துடன் கூட்டாகச் சேர்ந்து 'எம். யு. ஏ. ஸி.' கம்பெனியை ஆரம்பித்தார். ஆரம்ப காலத்தில் அபாரமான ஆதரவு இருந்தது என்றாலும் நாளாக நாளாக அதன் புகழ் மங்கி விட்டது. ஒரு சமயம், அந்தப் பெயர்தான் ராசியானதாக இல்லையோ என்று எண்ணித்தானோ என்னவோ அது 'கலைவாணி பிலிம்ஸாக' மாறியது. ஆனால் அதிருஷ்ட தேவதையை ஏமாற்ற முடியுமா என்ன?

* * *

அமெச்சூர் நடிகர்களில் நல்ல பெயரையும் கௌரவத்தையும் ஒருங்கே பெற்றிருந்தார் மாஜி மின்சார இன்ஸ்பெக்டர் ஸ்ரீ. எம். சுப்பிரமணியம். அவர் சொந்தமாக மன்மத விஜயம் என்ற படத்தைத் தயாரித்தார். "மன்மத விஜயம் என்ற ஒரு படம் எப்பொழுது திரையிடப்பட்டது?" என்று வாசகர்கள் பலர் கேட்பது என் காதில் விழுகிறது. அவ்வளவு "வெற்றி" அப்படத்திற்கு!

உணர்ச்சியுடன் நடிக்கக்கூடியவர்களில் ஸ்ரீ. சிறுகளத்தூர் சாமா ஒருவர். பொதுவாக, ரஸிகர்களின் நன்மதிப்பைப் பெற்றவர். "பாரத் பிக்சர்ஸ்" என்ற கம்பெனியை சொந்தத்தில் ஆரம்பித்தார். ஷைலக் என்ற படத்தையும் ஒரு வழியாக எடுத்து முடித்தார். ஆனால் அந்தப் படத்தைப் பார்க்கும் விஷயத்தில் 'ஷைலக்'காக இருந்துவிட்டார்கள் பொதுஜனங்கள்! அவர் அடுத்தபடி தயாரித்த ராஜசூயம், சுபத்ரா அர்ஜுனா ஆகிய படங்களுக்கும் கூட ஷைலக்கிற்குக் கிடைத்த அதே 'வெற்றி' தான் கிட்டிற்று.

*   *   *

ஸ்ரீமதி எம். வி. ராஜம்மா நடித்த அநேக படங்கள் பண வசூலில் வெற்றிகரமான படங்கள் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால், அவர் சொந்தத்தில் 'விஜயா பிலிம்ஸ்' என்ற படக் கம்பெனியை ஆரம்பித்து ராதா ரமணா என்ற கன்னடப் படத்தைத் தயாரித்தார். இப்படம் தரத்திலோ, பண வசூலிலோ வெற்றி அடையாமற் போய் விட்டது.

டைரெக்டர்:—என்ன மிஸ்டர் சுப்பண்ணா! இது மிக உருக்கமான கட்டம். எவ்வளவு முடியுமோ அவ்வளவு சோக பாவம் முகத்தில் தோன்றும்படி நடிக்க வேண்டும், தெரிந்ததா!

*   *   *

தமிழ் நாட்டில் உண்மையில் நடிக்கும் திறமையுள்ளவர்களில் ஸ்ரீ. நாகையா ஒருவர். அவர் "ரேணுகா பிலிம்ஸ்" என்ற ஒரு படக் கம்பெனியை நடத்துகிறார். பாக்யலக்ஷ்மியைத் தயாரித்த அவருக்கு அந்த லக்ஷ்மியின் பார்வை கிடைக்காமற் போயிற்று. அவருடைய தியாகையா உயர்ந்த படமே யென்றாலும் வசூல் விஷயத்தில் அப்படி இல்லை.

*   *   *

வசுந்தரா தேவி நடித்த உதயணன் வெற்றி பெறவில்லை என்பது உண்மைதான். ஆனால் அவர் நடித்த மற்ற படங்களுக்கு (ரிஸ்ய சிருங்கர், மங்கம்மா) இன்று கூட அமோக ஆதரவு கிடைத்து வருகிறது. பம்பாயில் அவர் தயாரிப்பதாக விளம்பரப் படுத்தப்பட்ட அவருடைய சொந்த கன்னடப் படமான தீபாவளியின் விஷயம் நாளது வரை கிணற்றில் போட்ட கல்லாகவே இருந்து வருகிறது.

*   *   *

தீவிரமான முயற்சியுள்ளவர் நடிகர் ஸ்ரீ. ஸி. வி. வி. பந்துலு. ஊக்கமாகத்தான் முயற்சி செய்து, "நவகலா பிக்சர்ஸை" சேலத்தில் ஆரம்பித்தார். ஆனால் அவர் தயாரிப்பதாக விளம்பரப் படுத்திய மதனிகா விளம்பர அளவுடன் நிற்கிறது. அவரோ சேலத்தை விட்டு சென்னைக்கு மீண்டும் நடிக்க வந்துவிட்டார்.

*   *   *

ஜகதீஷ் பிலிம்ஸ் முதலாளியான நடிகர் (டைரெக்டர்) ஸ்ரீ. ஒய். வி. ராவும் மேற்படி ஜாப்தாவுக்கு விதிவிலக்கானவரல்ல. அவருடைய பக்த மீரா முதல் பக்த ராமதாஸ் உள்பட அவர் தயாரித்த எல்லா படங்களுமே வெற்றி பெற்றதாகச் சொல்லி விட முடியாது.



முபாரக் "பில்ஹணு" தமிழ்ப் படத்தில் கே. ஆர். ராமசாமியும், ஏ. ஆர். சகுந்தலாவும்.

ஸ்வர்க்கஸீமா மூலம் புகழ்ஏணியின் உச்சியை அடைந்தவர் 'பாவுறமா' பானுமதி. "பரணி நக்ஷத்திரத்தில் ஜனித்தவர்கள் தரணியை ஆளுவார்கள்" என்று நக்ஷத்திரசாஸ்திரம் கூறுகிறது. ஆனால் அந்த நக்ஷத்திரத்தையே பெயராகக் கொண்ட, இந்த சினிமா நக்ஷத்திரத்தின் சொந்தக் கம்பெனி விஷயத்தில் அது பொய்த்து விட்டது. **ரத்னமாலா** தெலுங்குப் படத்தை பிரமாத வெற்றி என்று கூற முடியாது. **புலந்திரன்** தமிழ்ப் படமோ அறிவிப்பு விளம்பரத்தோடு நிற்கிறது.

* * *

சுமங்கலி மூலம் அறிமுகமான மாலதியின் "ஜெய் ஹிந்த் ப்ரொடக்ஷன்ஸ்" மின்னல் வேகத்தில் தோன்றி அதே வேகத்தில் மறைந்தும் போயிற்று. **ஜெயந்த் ஜெயபால்** என்ற அவருடைய படத்தின் விஷயம், 'ஜெய் ஹிந்த்' வீர கோஷமிட்ட நேதாஜியை விடப் பெரிய மர்மமாக இருக்கிறது!

* * *

ஜெமினி நடிகை புஷ்பவல்லி "வைஜயந்தி பில்ம்ஸ்" என்ற கம்பெனியை ஆரம்பித்து **விந்தியா ராணி** என்ற தெலுங்குப் படத்தைத் தயாரித்தார். பிரமாதமான வெற்றியைப் பெறும் என்று எதிர் பார்க்கப்பட்ட இப்படம் படுதோல்வியைப் பெற்றது.

* * *

ஒரு நடிகரோ, நடிகையோ சொந்தக் கம்பெனி ஆரம்பித்தால் தான் இந்த நிலைமை என்று இல்லை. ஒரு கம்பெனிக்கு அவர்கள் உதவி செய்ய முன் வந்தால்கூடப் போதும்! அருணா பில்ம்ஸுக்கு நேர்ந்த கதியைப் பாருங்கள். அவர்களுடைய **ஜயனுரப்பனில்** ஒரு முக்கிய பாகத்தில் நடிக்க ஒப்பந்தமாகியிருந்த ஹாஸ்ய நடிகை ஸி. டி. ராஜகாந்தம் கம்பெனியின் ஒரு பாகஸ்தராகச் சேர்ந்து பண உதவி செய்தாராம். இப்பொழுதோ விளம்பரம் போட்ட பல பத்திரிகைக்காரர்கள் இக்கம்பெனியைத் தேடித் திரியும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

* * *

இந்த வகையில் சேர்ந்ததுதான் "கிரீன்பிக்சர்ஸு"ம். ஒருகாலத்தில் நடிகராக இருந்த கே. ஆர். வி. சர்மா, கம்பெனிக்குப் பண ஒத்தாசை செய்யாவிட்டாலும், அதன் நிர்வாகப் பொறுப்பை தாமே ஏற்று நடத்தி வந்ததுதானோ என்னவோ, **நாத விஜயம்** பல லக்ஷக் கணக்கான ரூபாய்களை விழுங்கிவிட்டு இன்னும் "அசையாப் படமாக"வே இருந்து வருகிறது!

* * *

அவ்வளவு தூரம் போவானேன்? பல வருஷங்களாக நியூடோன் ஸ்டுடியோவில் தயாராகி வரும் ஒரு படத்தை, அந்தப் படத்தின் பிரதம நடிகரே ஏற்று நடத்தப் போவதாக ஒரு செய்தி வந்தது. இந்தச் செய்தி வருவதற்கு முன்பாவது படப்பிடிப்பு

தயங்கித் தயங்கி நடைபெற்று வந்தது. ஆனால் இப்பொழுதோ அப் படத்தைப் பற்றிய பேச்சையே காணோம்!

* * *

"எந்த சட்டமானாலும் அதற்கும் விதி விலக்கு உண்டு" என்பது ஆங்கிலப் பழமொழி. இந்த 'நடிகர்-முதலாளி' விஷயத்தில்தான் அந்தப் பழமொழி எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது! பட முதலாளிகளாகி அதிலும் வெற்றி பெற்ற நக்ஷத்திரங்கள் இல்லாமல் இல்லை.

* * *

பிரபல பாடகியான ஸ்ரீமதி. எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் சொந்தக் கம்பெனிதான் 'சந்திரப்ரபாசினிடோன்.' அவருடைய அதிருஷ்டம் என்று சொன்னாலும் சரி; அல்லது ஸ்ரீ. டி. சதாசிவத்தின் நிர்வாகத் திறமை என்று வைத்துக் கொண்டாலும் சரி; அந்தக் கம்பெனியின் படங்கள் தரத்திலும், பண வசூலிலும் சிறந்து விளங்குகின்றன.

* * *

தியாகராஜ பாகவதரின் "தியாகராஜா பிலிம்ஸ்" இந்த வெற்றி ஜாபிதாவில் சேர்க்கப்பட வேண்டும். அது தயாரித்த திருநீலகண்டர், சத்தியசீலன் ஆகியவை ஏராளமான பண வசூலைப் பெற்றன வல்லவா? பாகவதர் புதிதாய் ஆரம்பித்திருக்கும் நரேந்திரா பிக்சர்ஸும் இந்த வெற்றி ஜாபிதாவிலே சேரும் என்று தாராளமாய்எதிர்பார்க்கலாம்.

* * *

பசுபுலேட்டி கண்ணம்பாவின் கம்பெனிக்கு எப்பொழுதுமே ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரியின் கிருபா கடாக்ஷம் இருந்து வருகிறது. அவருடைய படங்கள் தரத்தில் அவ்வளவு உயர்ந்தவைகள் அல்ல என்று சிலர் நினைத்தாலும், பண வசூலில் வெற்றிகரமானவை என்பது மறுக்க முடியாத உண்மை. இக்கம்பெனி இடைவிடாது மேலும் மேலும் படங்களைத் தயாரித்து வருவதே அதற்கு அத்தாக்ஷி.

"சிறுகக் கட்டிப் பெருக வாழ்" என்ற கொள்கையைக்கடைப்பிடிப்பவர்கள் பதி பிக்சர்ஸார். ஹாஸ்ய நடிகர் எம். எல். பதியின் முயற்சியில் ஜனித்த "பதி பிக்சர்ஸ்" ஜீவஜோதியைத் தயாரித்து விட்டு, ஜோதி மங்காது மற்றொரு படத்திற்கும் ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

* * *

நாடகத் துறையில் மட்டுமன்றி படத்தொழிலிலும் மூன்றுவெற்றி கண்ட நடிகர்கள் டி. கே. எஸ். சகோதரர்கள். அவர்களுடைய படங்கள் யாவுமே குறைந்த செலவில் தயாரானவை; ஆனால் நல்ல பெயர் வாங்கிய படங்கள் என்பது தெரிந்த விஷயம்.

* * *

ஹாஸ்ய நடிகர் ஸ்ரீ. என். எஸ். கிருஷ்ணனைப் பாருங்கள். பல படங்களின் பணவசூல் வெற்றிக்குக் காரணமாக இருந்திருக்கும் அவருடைய "அசோகா பிலிம்ஸ்" "என்னெஸ்கே பிலிம்ஸ்" இரண்டும் தயாரித்த படங்களை சோடை என்று சொல்லிவிட முடியுமா?

* * *

நடிகர்கள் முதலாளிகளாக மாறியிருக்கும்ஜாபிதாவில் "மரகதா பிக்சர்ஸ்" பாகஸ்தரான ஸ்ரீ. டி. எஸ். துரைராஜும், பக்த கும்பரா கன்னடப் படத்தின் பாகஸ்தர் ஸ்ரீ. ஹொன்னப்ப பாகவதரும் சேர்க்கப் படவேண்டியவர்களாவர்.

* * *

சமீபகாலமாக ஸ்ரீமதி. கே. தவமணி தேவி சொந்தத்தில் படம் பிடிக்கப் போவதாக செய்திகள் வெளி வருகின்றன. இது எவ்வளவு தூரம் உண்மையோ தெரியவில்லை.

உண்மையென்றால், பத்திரிகாசிரியர்கள் தங்கள் கதைகளை வெளியிட மறுத்ததின் காரணமாக, தாமே பத்திரிகை ஆரம்பித்தவர்களின் கதையை இது ஞாபக மூட்டும்!

இதசெய்தி

சினிமா ரஸிகர்கள் சங்கம்

மேற்படி சங்கத்தின் பொதுக் கூட்டம் ஒன்று ஜூன் மாதம் 25ம் தேதி திருவல்லிக்கேணி கிரஸெண்ட் ஹாலில் ஸ்ரீ. எஸ். எம். பாஸில் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி சங்கத்தை ஆரம்பித்து வைத்த ஸ்ரீ. டேனியல் தாமஸின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்து, மேலும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன . இக்கூட்டத்தில். தணிக்கை போர்டில் இந்த சங்கத்திற்கு போதுமான அளவு பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும் என்பதும், தியேட்டர்களில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்பதும் இந்தத் தீர்மானங்களின் முக்கிய நோக்கமாகும்.

நிரந்தர லைசென்ஸ் கிடையாது.

புதிதாகக் கட்டப்பட்ட பாரகன் டாக்கீஸுக்கு, நிரந்தர லைசென்ஸ் கொடுக்க, சென்னை போலீஸ் கமிஷனர் மறுத்து விட்டார். தியேட்டரின் உள்ளே கார்களை நிறுத்தி வைக்க இடமில்லை என்ற காரணத்தை அவர் குறிப்பிட்டுள்ளார். மற்ற போக்குவரத்துகளுக்கு இடைஞ்சல் இல்லாதபடி, ரோடிலேயே கார்களை நிறுத்த முடியும் என்று ஒரு யோசனை தெரிவிக்கப்பட்டது. இந்த யோசனையைக் குறித்து அபிப்பிராயம் தெரிவிக்கும் படியும், அப்படி கார்களை நிறுத்த வசதி இருக்குமா என்றும் சென்னை கார்ப்பரேஷன் கமிஷனரை சர்க்கார் கேட்டிருக்கிறது.

நடிகர் பத்திரிகாசிரியராகிறார்

நடிகர் ஸ்ரீ. ஆர். ரஞ்சன் "நாட்டியம்" என்ற ஆங்கிலத் தமிழ் மாதப் பத்திரிகையை ஆரம்பித்து நடத்தப் போகிறாராம்.

டி. கே. ஷண்முகம் திருமணம்

டி. கே. சகோதரர்களில் ஒருவரான ஸ்ரீ. டி. கே. ஷண்முகம் சீக்கிரமே தம் நாடகக் கம்பெனியின் நடிகையான ஸ்ரீமதி சீதாலக்ஷ்மி என்பவரை பதிவு முறைப்படி மணந்து கொள்வாரென்று தெரிகிறது.

புதிய நாடகக் கம்பெனி

வடநாட்டில் பிரபல நடிகர் ஸ்ரீ. பிருதிவி ராஜ் ஆரம்பித்து நடத்தி வரும் ஒரு நாடக சபாவைப் போல தமிழ் நாட்டிலும் சீக்கிரமே ஒன்று ஆரம்பமாகுமெனத் தெரிகிறது. இந்த முயற்சியை நடிகர் ஸ்ரீ. கே. ஆர். ராம்சிங், வசனகர்த்தாக்களான "கர்மயோகி", ஸ்ரீ. எஸ் டி. சுந்தரம் ஆகிய மூவரும் செய்து வருகின்றனர்.

சென்னையில் புதிய தியேட்டர்

சென்னை மவுன்ட் ரோடில் சீக்கிரமே ஒரு புதிய தியேட்டர் ஆரம்பமாகப் போகிறது. சுகுண விலாஸ சபையினர் நாடகங்கள் நடத்திவந்த நியூ தியேட்டர்ஸை பிரபல ஹோட்டல் முதலாளி ஒருவர் பத்து வருஷங்களுக்குக் குத்தகை எடுத்துக் கொண்டிருக்கிறார். அவர் அதை ஒரு சினிமாத் தியேட்டராக மாற்றி அமைத்து வருகிறார்.

அரசாங்கத்தின் மேற்பார்வை

மேற்கு வங்காளத்தின் சினிமாத் தொழிலை, (படத் தயாரிப்பு, வினியோகம், திரையிடுதல் முதலிய விஷயங்களை) சீக்கிரமே அந்த மாகாண சர்க்கார் தனது மேற்பார்வையில் நடத்துமாம். ஸ்டுடியோக்கள், வேலை செய்

யும் நேரம், சுகாதார விதிகள் இவைகளுக்கு உட்பட்டும் ஆலை சட்டங்களுக்குக் கட்டுப் பட்டும் லைசென்ஸ் பெற்று, வேலை செய்யுமாம். படமாகத் தயாரிக்கப்படு முன்பே படக் கதைகள் தணிக்கை போர்டாரால் ஆராயப் படுமாம். உயர்ந்த நோக்கங்களுடன் கூடிய பொழுது போக்கிற்கான படங்களைத் தயாரிக்கும் விஷயத்தில் ஆலோசனை சொல்லவும் உதவி செய்யவும் அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்குமாம்.

ஸ்டுடியோ ஸ்டிரைக்

இம்மாதம் 5-ந் தேதி யன்று சென்னையில் சில ஸ்டுடியோக்களில் வேலை நிறுத்தம் நடைபெற்றது. சினிமாத் தொழிலாளர்களுக்குள்ள குறைகளை ஸ்டுடியோ முதலாளிகள் தீர்த்து வைக்காத காரணத்தினால், முன்னூறுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை ஆரம்பித்தனர். ஒவ்வொரு ஸ்டுடியோ முன்பும் ஒரு தொழிலாளி உண்ணாவிரதம் இருக்கவும் ஆரம்பித்தனர்.

நகர ஸ்டுடியோ சொந்தக்காரர்கள், தென்னிந்திய பிலிம் வர்த்தக சபைத் தலைவர், தமிழ் நாட்டு ஸ்டுடியோத் தொழிலாளர் தலைவர் ஸ்ரீ. பிரபு ஆகியோர் தொழிலாளர் கமிஷனரை 6-7-48ல் சந்தித்தனர். இரு சாராரும் ஒரு தற்காலிக சமாதானத்திற்கு வந்தனர். தொழிலாளர் யூனியனால் கோரப்பட்டிருக்கும் விஷயங்களை ஆராய்ந்து தொழில் கமிஷனர் செய்யும் முடிவுப்படி நடப்பதாக ஸ்டுடியோ சொந்தக்காரர்கள் ஒப்புக் கொண்டதின் பேரில், தொழிலாளர்கள் உடனே வேலைக்குத் திரும்பினர். ஜெமினி, நியூடோன் ஸ்டுடியோக்களில் இந்த வேலை நிறுத்தம் நடக்கவில்லையென்று தெரிகிறது.

மத்தியஸ்த தீர்ப்பு அமுலுக்கு வரும்

சினிமாத் தியேட்டர் தொழிலாளர்களுக்கும், சொந்தக்காரர்களுக்கும்



இடையே ஏற்பட்ட தகராறு சம்பந்தமாக அளிக்கப்பட்ட மத்தியஸ்த தீர்ப்பை அரசாங்கம் அமுலுக்குக் கொண்டு வரும். அதன்படி நடக்கத் தவறும் தியேட்டர் சொந்தக்காரர்கள் மீது வழக்குத் தொடர அரசாங்கம் நிச்சயித்திருக்கிறதாம்.

சினிமா டெக்னிஷியன்கள் சங்கம்

சென்ற மாதம் 20-ம் தேதியன்று மேற்படி சங்கத்தின் வருஷாந்திரக் கூட்டம் நடைபெற்றது. 1948—49 ம் வருஷத்திற்கு ஸ்ரீ. எல். வி. பிரசாத் தலைவராகவும், ஸ்ரீமான்கள் பி. சுப்பாராவ், எம். ஏ. ரஹ்மான், உபதலைவர்களாகவும், ஸ்ரீ. ஏ. கே. சேகர் பொக்கிஷதாரராகவும், ஸ்ரீ. எம். லிங்க மூர்த்தி, என். கிருஷ்ண மூர்த்தி ஆகிய இருவரும் காரியதரிசிகளாகவும், மற்றும் பதினைந்து கமிட்டி மெம்பர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மேற்படி சங்கத்தின், இம்மாதம் 4 ம் தேதி நடைபெற்ற கூட்டத்தில், மேற்கு வங்காளத்தில் சினிமாத் தொழிலின் நிர்வாகத்தை சர்க்கார் ஏற்றுக் கொண்டிருப்பதை வரவேற்று, மற்ற மாஹாண சர்க்கார்களும் மேற்கு வங்காளத்தை பின்பற்ற வேண்டுமென அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள்.

ராம்னுத்–சேகர் ஸ்டுடியோ

ஸ்ரீமான்கள் ராம்னுத், சேகர் ஆகிய இருவரும் ஜெமினிக்கு ஒரு படத்தைத் தயாரித்துக் கொடுத்துவிட்டு பிறகு தாங்களே சொந்தத்தில் ஒரு ஸ்டுடியோவை ஆரம்பித்து நடத்துவார்களென்று ஒரு செய்தி கிடைக்கிறது.

மதுரை வீரன்

பூம்பாவை படத்தில் சம்பந்தப்பட்டிருந்த ஸ்ரீ. டி. பாலாஜி சிங் **பாலாஜி பிலிம்ஸ்** என்ற பெயரில் ஒரு கம்பெனியை ஆரம்பித்திருக்கிறார். ஸ்ரீ. சிங் **மதுரைவீரன்** படத்தைத் தயாரிக்க ஏற்பாடுகள் செய்துவிட்டாராம். கே. ஆர். ராமசாமியும், பானுமதியும் பிரதம பாகங்களில் நடிப்பார்களாம். மேலும் இப்படத்தில் கிருஷ்ணன்–மதுரம் தவிர அந்த ஹாஸ்ய கோஷ்டி பூராவும் நடிக்க ஏற்பாடாகி இருக்கிறதாம். கதை, வசனம் "இளங்கோவன்" எழுதியிருக்கிறாராம். சேலம் ரத்னு ஸ்டுடியோவில் இப்படம் தயாரிக்கப்படுமென தெரிகிறது.

ஹிந்தி "சந்திரலேகா"

ஜெமினியில் சந்திரலேகாவை ஹிந்திப் படமாக மாற்றுவதற்கான வேலைகள் ஜரூராக நடைபெற்று வருகின்றனவாம். ரஞ்சன், கிருஷ்ணமாச்சாரி ஆகியோர் தங்கள் பாகங்களை தாங்களே ஹிந்தியிலும் பேசி நடிக்கிறார்களாம். மற்ற முக்கியமான பாகங்களுக்கு வடநாட்டிலிருந்து பிரபல நக்ஷத்திரங்கள் வரப் போவதாகவும் தெரிகிறது. ஹிந்தியில் வசனங்களைத் தயாரித்திருக்கும் பண்டிட் இந்திராவின் மேற்பார்வையில் இவ் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

"புதுமைப் பித்தன்" காலமானார்

"புதுமைப் பித்தன்" என்ற புனை பெயர் கொண்ட எழுத்தாளர் ஸ்ரீ. சொ. விருத்தாசலம் 30-6-48 அன்று திருவனந்தபுரத்தில் காலமானசெய்தி கேட்டு வருந்துகிறோம். "தினமணி" "தினசரி" பத்திரிகைகளின் உதவி ஆசிரியர்களில் ஒருவராக வேலை பார்த்து வந்தார். வெள்ளை உள்ளம் படைத்த இந்த எழுத்தாளரின் பிரிவு பத்திரிகை உலகத்திற்கு ஒரு பெரிய நஷ்டம். **காமவல்லியின்** கதை, வசனம், இவருடையவையே. கடைசியாக, ஸ்ரீ. பாகவதரின் படமான **ராஜ முக்தி**க்குக் கதை வசனம் எழுதிக் கொண்டிருந்தார். இவருக்கு ஞாபகச் சின்னம் ஏற்படுத்த செய்யும் முயற்சிக்கு யாவரும் ஆதரவு அளிக்கவேண்டியது அவசியமாகும்.

ஸ்டுடியோ மூடப்பட்டது

சென்னையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ. சிவன் செட்டியாரின்

கணேஷ் ஸ்டுடியோ தற்காலிகமாக மூடப்பட்டிருக்கிறது. தற்பொழுது இருக்கும் மந்த நிலையை உத்தேசித்து ஸ்ரீ. செட்டியார் ஸ்டுடியோவை மூடி வைத்திருக்கிறாராம்.

குணசுந்தரி

பம்பாய் ரஞ்சித் மூவிடோன் கம்பெனியார் ஏற்கனவே குணசுந்தரி என்ற ஹிந்திப் படத்தைத் தயாரித்திருக்கிறார்கள். அதே கதையைத் தமிழில் தயாரிக்க ஸ்ரீ. பாலச்சந்தரை ஏற்பாடு செய்திருக்கிறாராம் ரஞ்சித் மூவிடோன் முதலாளி ஸ்ரீ. சந்துலால் ஷா. ஸ்ரீ. பாலச்சநதர் படத்தின் பிரதம பாகத்தில் நடிப்பதுடன் டைரெக்ஷன், சங்கீத டைரெக்ஷன் பொறுப்புகளையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார். இது நிஜமா டாக்டர் வேஷதாரி ஸ்ரீ. வி. சீதாராம் ஸ்ரீ. பாலச்சந்தருக்கு உதவியாக இருப்பார். இப் படத்தின் மூலம் பல புதிய முகங்களைத் திரைக்கு அறிமுகப்படுத்தப் போகிறாராம் ஸ்ரீ. பாலச்சந்தர்.

நாட்டியக்காரி

ஸ்ரீ நடராஜ கலா மண்டலியார் மீண்டும் **நாட்டியக்காரி** நாடகத்தை 4-7-48ல் வி. பி. ஹாலில் நடத்தினார்கள். வஸந்தா வேஷத்தில் நடித்த வி. டி. ராஜகோபாலனின் பாட்டும் நடிப்பும் உயர்தரமாக இருந்தன.

நடிகை முதலாளியாகிறார்

ஆந்திர நடிகையான கமலா கோட்னிஸ் சொந்தத்தில் ‘கமல சித்ரா’ என்ற ஒரு கம்பெனியை ஆரம்பித்திருக்கிறார். **சதி அஹல்யா** என்ற ஹிந்திப் படத்தின் படப்பிடிப்பு புனா பிரபாத் ஸ்டுடியோவில் ஆரம்பமாகி விட்ட தென்றும், இப்படத்தில் உல்ஹாஸ், சாப்ரூ முதலியோரும் நடிக்கிறார்களென்று தெரிகிறது.

நாட்டிய ஒத்திகை

பிரபல லேடி பாகவதரும் சினிமா நடிகையுமான ஸ்ரீமதி. ஸி. பணி

பாயின் சகோதரிகளின் பெண்களான சௌ. ஸி. ஜோதிபாய், சௌ. ஸி. பேபி மீரா பாய் ஆகிய இரு சிறுமிகளின் நாட்டிய ஒத்திகை சென்னை மேயர் ஸ்ரீ. யூ. கிருஷ்ண ராவ் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. 10-7-48 அன்று சௌந்தர்ய மஹாலில் நடைபெற்ற இந்த ஒத்திகைக்கு பிரபலஸ்தர்கள் பலர் விஜயம் செய்திருந்தனர். நாட்டிய வித்வான் ஸ்ரீ. பி. எஸ். கண்ணப்ப பிள்ளை, மிருதங்க வித்வான் ஸ்ரீ. எம். ஆர். துரைராஜ அய்யர், சங்கீத வித்வான் ஸ்ரீ. எம். எஸ். சேஷாத்திரி ஐயங்கார் ஆகிய மூன்று வித்வான்களிடமும் சிக்ஷை பெற்ற இவ்விரு சிறுமிகளும் அன்று ஆடிய ஆட்டம் அவர்கள் எதிர் காலத்தில் நாட்டியத் துறையில் நல்ல பெயரும் புகழும் அடைவார்கள் என்பதை எடுத்துக் காட்டுவதாக இருந்தது.

சாபு நடிக்கும் "சாபு"

சாபு என்ற பெயரில் இந்தியாவில் ஒரு படம் தயாரிக்கப்படுமென்றும், அந்தப் படத்தில் சாபு நடிப்பாரென்றும் நிச்சயமாகத் தெரிகிறது. இந்தியர் ஒருவரால்தான் மேற்படி படம் தயாரிக்கப்பட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

லண்டனில் இந்திய நடனம்

லண்டனில் இந்திய நாட்டியங்களுக்கு நல்ல ஆதரவும் பண வரூலும் இருக்கிறதாம். சமீபத்தில் ஸ்ரீ. ராம் கோபால் கோஷ்டியின் நாட்டியம் நடைபெற்றதாம். கதக் நாட்டியத்தில் திறமை பெற்ற குமுதினி என்பவரும் மேற்படி நிகழ்ச்சியில் பங்கு எடுத்துக் கொண்டாராம். திருவனந்தபுரத்தைச் சேர்ந்த ஸ்ரீ. சிவராம் என்பவரும் சீக்கிரமே லண்டனுக்கு விஜயம் செய்து இரு நாட்டியக் கச்சேரிகளை செய்வாராம்.

சந்திரமோஹன்

கிருஷ்ணன் நாடக சபையினர் மேற்படி நாடகத்தை தற்சமயம் திருச்சியில் வெற்றிகரமாக நடித்து வருகின்றனர். "சிவாஜி கண்ட ஹிந்து ராஜ்யம்" என்பது தான் கதை. இக்கதையை எழுதித் தயாரித்தவர் ஸ்ரீ. ஸி. என். அண்ணாத்துரை.

திருமணங்கள்

"ஹிந்து" ஸ்ரீ. கே. கோபாலன் அவர்களின் குமாரர் ஸ்ரீ. ஜி. கஸ்தூரி 1-7-48 அன்று ஸ்ரீரங்கத்தில், ஸ்ரீ. எஸ். ஆர். ரங்கஸ்வாமி தாத்தாச்சாரியாரின் புத்திரி சௌ. கமலாவைத் தமது வாழ்க்கைத் துணைவியாக அடைந்தார். 12-ம் தேதி சென்னையில் வரவேற்பு சிறப்பாக நடைபெற்றது.

* * *

சங்கீத வித்வான் ஸ்ரீ. டி. பி. கைலாசத்திற்கும், சௌ. காமாக்ஷிக்கும் கும்பகோணத்தில் 8-7-48-ல் விவாகம் நடைபெற்றது.

* * *

"ஹநுமான்" பத்திரிகையின் உதவி ஆசிரியர் ஸ்ரீ. எஸ். சுவாமி



அமெச்சூர் நடிகரான துரைசிங்கம் "கிருஷ்ண பக்தி"யில் நடிக்கிறார்.

நாதனுக்கும், ஊஞ்சலூர் ஸ்ரீ. எஸ். கணபதி அய்யரின் புத்திரி செள. கெளரிக்கும் 12—ம் தேதி ஊஞ்சலூரில் விவாகம் நடைபெற்றது.

*   *   *

மாருதி பத்திரிகை ஆசிரியர், காந்தி ஜோஸ்யர் ஸ்ரீ. வி. கே. சடகோபாச்சாரியாரின் புத்திரன் ஸ்ரீ. கே. எஸ். நரசிம்மன், செள. வனஜாக்ஷியை அம்மனூரில் 14-7-48 அன்று மணந்து கொண்டார்.

*   *   *

லாவண்யா பிக்சர்ஸின் முதலாளியும் பிரபல, நூல், ஜவுளி வியாபாரியுமான, எஸ். கே. சுந்தரராம அய்யர் பி. ஏ. அவர்களின் குமாரி செள. திலோத்தமாவுக்கு, முருகன் டாக்கீஸின் பாகஸ்தர் பி. ஏ. பி. குப்புசாமி அய்யரின் குமாரன் ஸ்ரீ. பாலசுப்ரமணியத்திற்கும் 8-7-48-ல் மதுரையில் திருமணம் வெகு சிறப்பாக நடந்தது. பல ஊர்களிலிருந்து ஏராளமான வியாபாரிகளும், நகர பிரமுகர்களும், நண்பர்களும் விஜயம் செய்திருந்தார்களாம். கான சரஸ்வதி டி. கே. பட்டம்மாள், வந்திருந்தவர்களுக்கு இசை விருந்தளித்தாராம். இரு பெரிய குடும்பங்களின் சம்பந்தத்தைப்பற்றி மதுரை எங்கும் ஒரே பேச்சாக இருந்ததாம்.

*   *   *

மணமுள்ள பட்டணம் பொடி தயாரிப்பில் பெயர் பெற்ற பி. வி. ராஜன் கம்பெனியின் பாகஸ்தரான கே. நாராயண அய்யரின் குமாரன் சிரஞ்சீவி பரசுராமனுக்கும், மசூலிபட்டணம் போலீஸ் டிபுடிசூபரெண்ட் ஈ. நாகபூஷணம் அய்யரின் குமாரத்தி செள. மீனாக்ஷிக்கும் 8-7-48-ல் வேலூரில் திருமணம் சிறப்பாக நடந்தது.

*   *   *

நமது "குண்டூசி"யின் விசேஷ நிருபரான ஸ்ரீ. கே. வி. கிருஷ்ணஸ்வாமியின் சகோதரி செள. ருக்மணிக்கும், சீர்காழி பி. டபிள்யூ. டி.யைச் சேர்ந்த சிரஞ்சீவி கே. ஸ்ரீநிவாஸரங்கனுக்கும் கும்பகோணத்தை அடுத்த மேலக்கொட்டையூரில் 12-ந்தேதியன்று திருமணம் நடந்தேறியது.

*   *   *

இம்மாதம் 12-ம் தேதி நமது மதுரை ஏஜண்டின் புத்திரரான ஸ்ரீ. சூரியநாராயணனுக்கும், காலஞ்சென்ற டி. எஸ். கிருஷ்ணய்யரின் பெளத்திரியும், காலஞ் சென்ற கூனியூர் எஸ். நீலகண்ட அய்யரின் புத்திரியுமான செள. கோமதிக்கும் விவாகம் சிறப்பாக நடந்தேறியது.

*   *   *

ஏவி. எம். ஸ்டுடியோவில் பிலிம் டைரெக்டராக இருந்து வரும் எம். வி. ராமனின் சகோதரரான எம். ஆர். சந்திரன், காந்த லக்ஷ்மியை சென்ற 14-ந் தேதி யன்று (சென்னையில்) மணந்து கொண்டார். இது சம்பந்தமான வரவேற்பு குமாரி கமலாவின் நாட்டியத்துடன் பாரிஷ் ஹாலில் சிறப்பாய் நடந்தது.

தம்பதிகள் அனைவருக்கும் குண்டூசியின் மனப்பூர்வமான ஆசிகள்.

தேநீர் விருந்து

சமீபத்தில் கிரஹஸ்தரான நடிகர் ஸ்ரீ. டி. எஸ். மஹாதேவன் தமது திருமணத்தை ஒட்டி சென்ற மாதம் 26-ம் தேதி ஒரு தேநீர் விருந்தளித்தார். ஸ்ரீ. கே. சுப்ரமண்யம் பங்களாவில் நடைபெற்ற இந்த விருந்திற்கு சினிமாத் துறையின் பல பிரமுகர்களும் பத்திரிகாசிரியர்களும் வந்திருந்தனர்.

பக்த துளஸிதாஸ்

விக்ரம் ஆர்ட் ப்ரொடக்ஷன்ஸின் தயாரிப்பான, தமிழ் நாடு டாக்கீஸார் விநியோகிக்கும், **பக்த துளஸிதாஸ்** படத்தின் பத்திரிகைக் காக்ஷி 15-7-48 ஸாகர் டாக்கீஸில் நடைபெற்றது. இப்படம் 16-ந் தேதி முதல் ஸாகரில் திரையிடப்பட்டுள்ளது.

பட்டாபிஷேக நாடகம்

கடந்த மூன்று வருஷங்களாக சென்னையில் பல அருமையான நாடகங்களை நடத்திவந்த நாடகப் புரவலர் ஸ்ரீ வைரம் அருணசலம் செட்டியாரின் ஸ்ரீ ராம பால கான சபாவின் பட்டாபிஷேக நாடகம் ஒற்றைவாடைத் தியேட்டரில் 15-7-48 அன்று நடைபெற்றது. பிரபல பிரமுகர்கள் பலரும், பத்திரிகாசிரியர்களும் விஜயம் செய்திருந்தனர். எழுத்தாளர் ஸ்ரீ. ஜி. சதாசிவம், இந்த சபாவின் நாடகங்களையும் நடிகர்களையும், ஸ்ரீ. செட்டியாரின் கலை ஆர்வத்தைப் பற்றியும் புகழ்ந்து பேசினர். சபாவுக்குப் பலர் பரிசுகளை வழங்கினர்கள். இவர்களது அடுத்த முகாம் திண்டுக்கல் சோலை ஹால் ஆகும்.

டி. கே. எஸ். பிரதர்ஸ்

தற்சமயம் கோவையில் நாடகங்கள் நடத்திவரும் டி. கே. பிரதர்ஸ் நாடக சடாவின் அடுத்த முகாம் சென்னை என்பது நிச்சயமாகி விட்டது. அவர்களது நாடகங்களை சென்னை ஒற்றைவாடைத் தியேட்டரில் சீக்கிரமே கண்டு களிக்கலாமென்று தெரிகிறது

வர்ணப் படம்

“டெக்னி கலர்” என்று சொல்லப்படும் வர்ணப் படத் தயாரிப்பிற்கு அதிக சிரமமும் செலவும் ஆகிறது. ஆதலால் அது தாராளமாய் முன்னேருமலிருக்கிறது. ஆனல் இப்பொழுது பிரான்ஸிலுள்ள ஆர்மாண்ட், லூஸியன் ரௌக்ஸ் ஆகிய இருவரும் அதிசுலபமான வர்ணப் படத் தயாரிப்பு முறையைக் கண்டுபிடித்திருக்கிருர்களாம். இவர்கள் கண்டு பிடித்துள்ள ஒரு ஆச்சரியகரமான பூதக் கண்ணுடியை உபயோகித்தால் ஒரே நெகடிவ்வில் வர்ணப் படம் பதிவாகி விடுகிறதாம். மூன்று நெகடிவ்களும், மூன்று கேமிராக்களும் அவசியமே யில்லையாம். இப் புது முறையில் தயாரிக்கப் பட்டுள்ள வர்ணப் படங்களைக் காட்டுவதற்காக பிரான்ஸிலுள்ள 300 சினிமாத் தியேட்டர்கள் பிரத்தியேக ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனவாம்.

“படம் மோசம் போலேயிருக்கு; கூட்டமே யில்லேயே! நம்மளை எதுக்காக வரவழைச்சாங்க?”

“அதுவா, தியேட்டர் முதலாளி கல்லடி படாமே பத்திரமா வூட்டுக்குப் போக வேணுமா!”

ஆந்திர சினிமாத் தொழிலாளர் சங்கம்

இப்படி ஒரு சங்கம் பெஜவாடாவில் ஆரம்பமாகியுள்ளதாம். அவர்கள் சமீபத்தில் நடத்திய ஒரு கூட்டத்தில், முதலாளிகள் தங்கள் குறைகளைத் தெரிந்து கொண்டு, தங்கள் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டுள்ளனர். சினிமாத் தொழிலாளர்களின் நிலைமையைப் பரிசீலனை செய்யும் படியும், அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்படியும் சென்னை சர்க்காரை இச் சங்கத்தினர் கேட்டுக் கொண்டிருக்கின்றனர்.

சிறந்த படங்களுக்கு சர்க்கார் பரிசு?

பிலிம் சேம்பரில் கல்வி மந்திரி பிரசங்கம்

இம்மாதம் 2-ம் தேதியன்று கல்வி மந்திரி கனம் டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் தென்னிந்திய பிலிம் வர்த்தக சபைக்கு விஜயம் செய்தார்.

தலைவர் ஸ்ரீ. கே. சுப்ரமண்யம் கனம் மந்திரியை வரவேற்றுப் பேசினார். பின்னர் ஸ்ரீ. அவினாசிலிங்கம் பின் வருமாறு பேசினார் :—

"சினிமாவின் சக்தி அபாரமானது. ஆகவே அதனால் தேசத்திற்கு என்னென்ன வகையில் நல்லது செய்யலாம் என்பதை யோசிப்பது அவசியம். படத் தயாரிப்பு மிகவும் முக்கியமானது. ஏராளமான தொகை இந்தத் தொழிலில் போடப்பட்டிருக்கிறது; ஆயிரக் கணக்கானவர்கள் அதன் மூலம் ஜீவனம் நடத்துகிறார்கள் என்ற காரணங்களினால் மட்டுமல்ல; அது மக்களிடையே நல்ல செல்வாக்குப் பெற்றிருப்பதுதான் முக்கிய காரணம்.

"தென்னிந்தியாவில் மட்டும் சாதாரணமாக வாரத்திற்கு மூன்று முதல் நான்கு லக்ஷம் ஜனங்கள் சினிமாப் பார்க்கிறார்கள். சினிமாவுக்கு இவ்வளவு செல்வாக்கு இருப்பதனால் அது சரியான வகையில் கொண்டு வரப்பட வேண்டும். மக்கள் சினிமாவுக்கு வருவதன் மூல காரணம், பொழுது போக்கிற்காகத்தான். இதை மனதில் கொண்டு, மக்களுக்கு போதனை செய்யக்கூடிய, சமூக சீர்திருத்த நோக்கங்கள் கொண்ட படங்கள் தயாரிக்கப்பட வேண்டும். இந்தியாவில் தயாரிக்கப்படும் சமூகப் படங்களில் சில நன்றாக இருக்கின்றன என்றாலும் பல படங்கள் கீழ்த்தரமானவைகளாக இருக்கின்றன.

"உயர்ந்த நோக்கங்களுடன் தயாரிக்கப்படும் படங்களுக்கு நல்ல ஆதரவு இருப்பதில்லை என்று கூறுகிறார்கள். இது வருந்தத் தக்க விஷயம். மேற்கு வங்காளத்தில் சினிமாத் தொழிலை சர்க்கார் மேற்பார்வையில் நடத்தத் தீர்மானித் திருக்கிறார்கள். அரசாங்கத்தின் அதிகாரம் மட்டும் இருந்தால் போதாது. உயர்வான படங்கள் வெளி வரவேண்டுமானால் தொழில் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு நபரும் பொதுமக்களும் ஒத்துழைக்க வேண்டுவது அவசியம்"

பிறகு கல்விப் படங்கள் செய்திப் படங்கள் முதலியவற்றை திரையிடுவது குறித்தும், ஆக்ஷேபகரமான விளம்பரங்களைத் தடைசெய்வது குறித்தும் விவாதம் நடைபெற்றது.

ஒரு கேள்விக்கு பதில் அளிக்கையில் கனம் மந்திரி, சினிமா பார்க்கும் விஷயத்தில் வயதுக் கட்டுப்பாடு செய்யும் யோசனை தற்பொழுது கிடையாது என்றும், அவசியம் நேரிடுமானால் அரசாங்கம் அது விஷயத்தில் சிரத்தை காட்டும் என்றும் தெரிவித்தார். மற்றொரு கேள்விக்கு கனம் மந்திரி, "உயர்ந்த படங்களுக்கு அரசாங்கம் உதவி செய்யும். பிரதி வருஷமும், சிறந்த புஸ்தகங்களுக்குப் பரிசு அளிப்பது போல, சிறந்த படங்களுக்கும் பரிசு அளிக்கலாம்" என்று பதில் சொன்னார்.

கடைசியாக மந்திரி பிலிம் தொழில் சம்பந்தமான எந்த விஷயத்திலும் அரசாங்கம் தென்னிந்திய பிலிம் சேம்பரை ஆலோசித்திருக்கிறதென்றும், செய்திப் படங்கள் உட்பட படம் ஓடும் நேரம் மூன்று மணி நேரத்திற்குள் முடியும்படி இருந்தால் நல்லது என்று தணிக்கை போர்டார் அபிப்பிராயப்படுவதாகவும், படம் தயாரிப்பவர்கள் இதை கவனிக்க வேண்டும் என்றும் கூறினர்.

சேலம் சூர்யா பில்ம்ஸின்
"ஸ்ரீ ஆண்டாளி"ல்
யூ. ஆர். ஜீவரத்தினம்



தகுந்த தண்டனை!

[12-ம் பக்கத் தொடர்ச்சி]

ஒரு நாள் 'அதிசயப் பெண்'ணில் ஒரு ரஸமான கட்டம் உருவாகவேண்டியிருந்தது. அதில் நளினி தனக்கு வேண்டிய சில முக்கியமான வசதிகளுக்கு ஏற்பாடு செய்து வைத்துக் கொண்டாள். படப் பிடிப்பு ஆரம்பமாயிற்று. அதாவது: நளினி நர்ஸ் உடையில் இருக்கிறாள். கதாநாயகி ரேவதி நெற்றியில் அடிபட்டு சிகிச்சை பெற ரேவதியிடம் வருகிறாள். ரேவதி நெற்றியில் அடிப்பட்ட இடத்தைகழுவி, மருந்து வைத்துக் கட்ட வேண்டும். இந்த காட்சி தயாரிக்கப்பட்டபோது, ரேவதியின் நெற்றியை பஞ்சில் நீரை நனைத்து கழுவும்போது, "அப்பாடி" என்று பலமாக கத்தி விட்டாள் ரேவதி. இருக கண்களையும் மூடிக்கொண்டுவிட்டாள். சில நிமிஷத்தில் அக்கட்டம் படப் பிடிப்பு முடிந்தது. கட்டிலில் கிடந்த ரேவதியின் அருகில் சென்று நரேந்தர் "ரேவதி நீ சிகிச்சை பெறும் போது 'அப்பாடி' என்று கத்தி நடித்த இடம் மிகவும் சிறந்த நடிப்பு" என்று புகழ் மாலை சூட்டினான். மெல்ல கண்களை திறக்க முயன்ற ரேவதி கண்கள் அசாத்தியமாக எறிவதைக் கண்டு கண்களை இருக மூடிக் கொண்டு, "கண்களை திறக்க முடியவில்லையே, கண்கள் எறிகிறதே" என்று பதைத்தாள்; கதறினாள். துடிப்பற்று நின்றிருந்த நளினி மட்டும், "என்ன ரேவதி" என்று அவள் அருகில் ஒன்றும் தெரியாதவள் போல் கேட்டாள்.

ரேவதி பதைத்து அழுவதைக் கண்டு சகியாத நரேந்திரன் உடனே டாக்டரை அழைத்து வந்தான். டாக்டர் பரிசோதனை செய்து பார்த்துவிட்டு, அமிலம் கலந்த தண்ணீர் கண்களில்பட்டிருக்கிறது. அதனால்கண்கள் ரணமாகி விட்டது. மாதக் கணக்கில் கண்களில் மருந்து விட்டு கட்டினால்தான் சுகமடையும். பூரணமாகக்கண் பார்வை தெரிய சில மாதங்கள் ஆகும்" என்று கூறினார்.

அருகில் நின்று இதையெல்லாம் கேட்ட நளினி ஒன்றும் தெரியாதவள் போல், "அலம்புவதற்கு வைத்திருந்த தண்ணிரில் அமிலத்தைக் கலந்து வைத்து இந்தக் காரியம் செய்தவர் யார்?" என்று வருந்துபவள்போல் தன் குற்றத்தை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் பேசினாள். இது நளினி வேண்டுமென்றே செய்த சதியல்லவா? இந்த விஷயத்தில் நரேந்திரனுக்கு மட்டும் நளினியின் பேரில் கொஞ்சம் சந்தேகம்தான்.

'சந்திர பவன்' பங்களாவிலேயே ரேவதி தங்கி விட்டாள் நரேத்திரனுடன். பால், காப்பி கொடுப்பது, கண்களுக்கு மருந்து விடுவது போன்ற பல சிஷ்ருஷைகளை நரேந்திரன் ரேவதிக்குச் செய்து வந்தான். பாவம், ரேவதி கண்களை கட்டிக் கொண்டு கண் பார்வை இன்றி சோபாவில் அமர்ந்திருப்பாள். எதிரில் நாற்காலியில் நரேந்திரன் உட்கார்ந்து ரஸமாகப் பேசுவான். அவளுடன் இப்படி மிகவும் நெருங்கிப் பழகுவதிலும், ரேவதியின் இனிமையான சுபாவத்திலும் ஒருவித இன்பத்தைக் கண்டான் நரேந்திரன்.

ஒரு நாள் நரேந்திரனின் பெயருக்கு ஒரு கடிதம் வந்தது. அதை நளினி தான் எழுதி இருந்தாள்:

அன்புள்ள நரேந்தர்!

தங்களை நான் முழுமனதுடன் நேசிப்பது நன்றாகத் தெரிந்திருந்தும் என் விஷயத்தில் பாராமுகமாக இருக்கிறீர்கள். இது நியாயமா? ரேவதிக்கு

என்ன வைத்தியம் செய்தாலும் கண் பார்வை வராது. நந்தியா வர்த்த மலர்கள் வெள்ளை வெளேர் என்று பார்வைக்கு அழகாக இருக்கின்றன. ஆனால் வாசனை கிடையாது. அது போல் ரேவதி என்ன அழகாக இருந்து என்ன பயன். முகத்துக்குப் பிரதான அழகைக் கொடுப்பவை கண்கள் அல்லவா? ஆகையால் இந்தக் கடிதம் கண்டதும் எனக்கு பதில் எழுதினால், நம்முடைய திருமணத்திற்கு ஏற்பாடு செய்கிறேன்.

அன்புள்ள,

நளினி.

இந்தக் கடிதத்தை வாசித்ததும் நரேந்திரனின் அழகிய கண்கள் கோபத்தினால் சிவந்தன.

நளினி எழுதிய அந்த வஞ்சகம் தோய்ந்த கடிதத்தை ரேவதிக்குப்படித்துக்காட்டினான்நரேந்தர். அதற்கு ரேவதி: "பாவம், நளினி ஒன்றும் தெரியாதவள்" என்றாள். இவ்வளவு தீங்கு செய்த நளினியிடம் அவள் துவேஷமே கொள்ளவில்லை.

அன்று பூர்ண சந்திரன் வட்டவடிவமாக வானத்தில் மிதந்து கொண்டிருந்தான். நரேந்திரனும் ரேவதியும் எதிரும் புதிருமாய் உட்கார்ந்திருந்தனர். அப்போது நரேந்தர், "ரேவதி நம் விவாகத்தை நிச்சயம் செய்துவிட வேண்டாமா?" என்றான்,

"என்ன! என்னையா தாங்கள் கலியாணம் செய்து கொள்ளப் போகிறீர்கள்?"

"ஆமாம்;இதில்என்ன சந்தேகம்?"

"என் வாழ்க்கை இப்பொழுது இருண்டிருக்கிறது. என் கண்பார்வை திரும்பவும் எனக்கு வரும் என்பது என்ன நிச்சயம்? அப்படி இருக்க தாங்கள் என்னை மணந்து எவ்விதமாக சந்தோஷத்தை அனுபவிக்க முடியும்?"

"ரேவதி, நீ சொல்வது சரிதான். சுகத்திலும் துக்கத்திலும் பங்கெடுத்துக் கொள்வதுதான் நிஜ அன்பின் சின்னமாகும். ஆகையால் இனி நீ என்னதான் சொன்னாலும் உன் வார்த்தையை கேட்கவேமாட்டேன். உன்னை நான் தான் மணப்பேன்" என்றான் நரேந்திரன்.

"போங்கள், என்னை மேலும் பேசவிடாமல் எப்படியோ மடக்கி விட்டீர்கள்" என்று லேசாக உதடுகளில் புன்னகை தவழ பதில் கூறினாள் ரேவதி. வெட்கத்தால் முகம் சிவந்தது.

நரேந்தர் ரேவதியை விவாகம்செய்து கொண்டதைக் குறித்து, சினிமா ரஸிகர்கள் நரேந்திரின் நேர்மையான குணத்தையும், நிஜ அன்பின் உயர்வையும் கண்டு புகழ்ந்தனர். இந்த சமயத்தில்தான் நரேந்திரன் தயாரித்துக்கொண்டிருந்த படத்தை அத்துடன் நிறுத்திவிட்டு சினிமா உலகையே விட்டு விலகினர்.

* * *

பல மாத காலம் ரேவதி கண்களில் கட்டுக் கட்டிக் கொண்டு காலம் கழித்தாள். "கண்ணுக்கு இனி கட்டுக் கட்டவேண்டியதில்லை. வெறும் மருந்து மட்டும் விட்டால் போதும். ரணமெல்லாம் ஆறி வருகிறது" என்று டாக்டர் கூறினர்.

ஒருநாள் மாலை மாடியில் முற்றத்தில் நரேந்திரனும்ரேவதியும்நின்று

கொண்டிருந்தனர். அப்பொழுது ரேவதி மேற்கில் அஸ்தமனமாகும் சூரியனைக் காட்டி, "அதோ சூரியன் அஸ்தமனமாகும் காட்சி எவ்வளவு அழகாக இருக்கிறது பாருங்கள்" என்றாள்.

"ரேவதி உனக்கு கண் பார்வை தெரிகிறதா?"

"இதோ பாருங்கள்; இந்த இரண்டு கிளிகளும் எவ்வளவு சந்தோஷமாக இருக்கின்றன" என்று அருகிலுள்ள மரத்தைச் சுட்டிக் காட்டினான்.

நரேந்தர் அவள் காட்டிய திக்கில் பார்த்தான். ஒரு ஆண் கிளியும் பெண் கிளியும் மூக்குடன் மூக்கை உராய்த்து கொண்டு மிக உல்லாசமாக இருந்தன. உடனே நரேந்தர் ரேவதியின் அழகிய நீண்ட நயனங்களை உற்று நோக்கினான். அன்பு ஊறும் தன் கரத்தினால் ரேவதியின் தளிர் கரத்தைப் பற்றினான்.

ஒரு நாள் கடற்கரைக்குச்செல்லலாம் என்று ரேவதி மட்டும் தனிமையில் மோட்டாரை எடுத்துக் கொண்டு வெளியே சென்றாள். அப்போது வழியில் நளினி அழகையும் அந்தஸ்தையும் இழந்து மிகவும் ஏழ்மையான நிலையில் பாதையில் சென்று கொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் ரேவதி அவள் அருகில் மோட்டாரை கொண்டுபோய் நிறுத்தினாள். மீண்ட கண் பார்வையுடன் ரேவதி காட்சியளித்ததைக் கண்ட நளினி திகைத்து விட்டாள். அவள் கண்கள் விரிந்தன. அவளுக்கு துக்கம் எங்கிருந்தோ பொத்துக் கொண்டு வந்தது. அதற்குள் ரேவதி, பதைபதைப்புடன் "நளினி, இது என்ன கோலம்?" என்றாள்.

நளினி சொன்னாள்: "நான் உனக்கு துரோகம் செய்தேன் ரேவதி. என் வினை என்னையே பழி வாங்கி விட்டது. என் வாழ்க்கைக்கு நீ குன்றின் மேல் இட்ட விளக்காவாய். ஆனால் என் மதியீனத்தினால் அறிவை இழந்தேன். உன் அன்பை மறந்தேன். உனக்கு தீங்கு செய்தேன். அதனால் என்னை சினிமா உலகிலிருந்தே ஒதுக்கி விட்டனர்."

"பரவாயில்லை, நளினி. கவலைப் படாதே. என் வீட்டில் வந்து உன் இஷ்டம்போல் இரு. போனது போகட்டும். ஏன் யோசிக்கிறாய்?" என்றாள் ரேவதி.

"ரேவதி, நான் உனக்கு தீங்குசெய்தேன். அதைப் பொருட்படுத்தாமல் உதார குணத்துடன் என்னை சந்தித்து திரும்பவும் உன் வீட்டிற்கு அழைக்கிறாயே அதுவே போதும் ரேவதி. என்விஷயமாவது மற்றநடிகைகளுக்கு ஒரு படிப்பினையாய் இருக்கட்டும். நான் செய்த குற்றத்திற்கு கடவுள் உன் கண் முன்பாகவே எனக்கு தண்டனையை கொடுத்து விட்டார். இது எனக்கு தகுந்த தண்டனைதான். நான் போகிறேன் ரேவதி" என்று கூறிக் கொண்டே அவ்விடம் விட்டு ஓடி மறைந்தாள் நளினி.

"நளினி!...நளினி!" என்று அழைத்தவண்ணம் அவள் போன திக்கையே நோக்கியவண்ணமிருந்த ரேவதி ஒரு நீண்ட பெருமூச்சுக்குப் பிறகு மோட்டாரைச் செலுத்தினாள்.

நீங்கள் விரும்பும்
சினிமா ஸ்டைலில் போட்டோ
எடுத்துக்கொள்ளத்தகுதியான இடம்

பாரத் ஸ்டுடியோ

மவுண்ட் ரோட் போஸ்ட் ஆபீஸ் எதிரில்
போன் - 8172 மதராஸ் 2.

**சினிமா நக்ஷத்திரங்களுக்கு
பிடித்தமான இடமும் இதுவே!**

நீங்களும் குறைந்த செலவில் சினிமா
நக்ஷத்திரங்களைப்போல் போட்டோ
எடுத்துக்கொள்ளுங்கள்.

என்னங்க, நான் சினிமாலே..... சேர்ரதுக்கு எதனாச்சும் வழி... சொல்லுதானு பாருங்க...
கைமேல் பலன்
சூரிய மேட்டிற்கும், சந்திர மண்டலத்திற்கும் குறுக்கே பாய்வதால் நீங்கள் சேருவதற்கு...., இடமுண்டு......
கைமேல் பலன்
பெரிய பெரிய எடங்களிலெல்..லாம் ஏறி ஏறி இறங்குவீங்க, உங்களை நாலுபத்துபேரு பின்னாடி சுத்திண்டே இருப்பாங்க..
கைமேல் பலன்
உங்களாலேதான் கம்பெனிக்கி நல்லவருவாய் வரப்போவு..துங்க......
கைமேல் பலன்
இப்பவே போறேன். இன்னியிலேருந்து நான் பெரிய நடிகனு ஆவப்போறேன்......
பத்தர்
சந்திரலேகா
வாரம்

வாழ்க்கை வர்ணனை

[22-ம் பக்கத் தொடர்ச்சி]

சொத்து, புகழ் எல்லாம் சம்பாதித்துக் கொண்டு விட்ட கண்ணும்பாவுக்கு உள்ளூர, "நமக்கென்று ஒரு குழந்தை பிறக்க வில்லையே" என்ற குறை இருப்பதாக ஊகிக்கிறேன். ஆதலால் அவர் ஒரு பெண்ணை எடுத்து, அதற்கு ராஜராஜேஸ்வரி என்று பெயர் கொடுத்து வளர்த்து, சுமார் இரண்டு வருஷங்களுக்கு முன்பு, அவளை டைரெக்டர் ஸி. புல்லையாவின் புத்திரருக்கு வெகு தடபுடலாக விவாஹம் செய்து கொடுத்திருக்கிறார்.

கண்ணும்பாவின் இஷ்டதெய்வம் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி, ஆதலால் தான் தாம் நடத்திய நாடகக் கம்பெனிக்கும் நடததிவரும் சினிமாக் கம்பெனிக்கும், அவருடைய வளர்ப்புப் புத்திரிக்கும் "ஸ்ரீ ராஜராஜேஸ்வரி" முத்திரை விழுந்திருக்கிறது.

கண்ணும்பா எதிலும் மிகுந்த ஊக்கம் உடையவர். எடுத்துக் கொள்ளும் காரியத்தைச் செவ்வனே செய்து முடிக்க வேண்டுமென்ற கொள்கை உடையவர். அவர் இப்பொழுது தமிழ் பாஷையை நன்றாகப் பேசவும், எழுதப் படிக்கவும் கற்றுக் கொண்டு விட்டார். தமிழ்ப் பத்திரிகைகள், புஸ்தகங்களை யெல்லாம் அவர் தாராளமாய்ப் படித்துவருகிறார்.

கண்ணும்பாவுக்கு பொதுஜனங்கள் தங்கள் பாராட்டுதல்களைத் தெரிவிக்கும் தோரணையில், சென்னை பிலிம் தேர்தலில் அவரை இருமுறை முதல் ஸ்தானத்திற்கு தேர்ந்தெடுத்தனர். 1941-ம் வருஷத்தில் சென்னையில் நடந்த ஆந்திர நாடக கலா பரீக்ஷித்தினர், கண்ணும்பாவுக்கு "நாட்டியக் கலா சாரதா" என்ற பட்டத்தை வழங்கியிருக்கின்றனர். ஆனால் கண்ணும்பா இந்தப் பட்டத்தை ஒரு முறைகூட உபயோகித்து நான் பார்த்ததில்லை! அசல் உழைப்பின் மூலமே முன்னணிக்கு வந்தவராதலால் சுயவிளம்பரத்தை அவர் விரும்பவில்லை. சாதாரண எளிய வாழ்க்கையையே அவர் விரும்புகிறார். பணம் இல்லாதவர்கள் எளிய வாழ்க்கையை விரும்புவது ஆச்சரியமல்ல; ஆனால் கண்ணும்பா போன்ற லக்ஷாதிபதிகள் எளிய வாழ்க்கையை நடத்த விரும்புவது தானே ஆச்சரியகரமான விஷயம்?

—()—

கவர்னர் ஜெனரலின் கதை

பிரபல வட இந்திய நடிகை ஸ்ரீமதி சாந்தா ஆப்தே தம் சொந்தத்தில் ஒரு நாடகக் கம்பெனியை ஆரம்பித்திருக்கிறார். அந்தக் கம்பெனியார் முதன் முதலில் நடிக்கப் போகும் நாடகம், இந்திய கவர்னர் ஜெனரல் ஸ்ரீ சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் எழுதியுள்ள கதையாக இருக்குமாம்.

15-8-48

சுதந்திர தினம் வெளிவருகிறது

பாபுஜி

சிறுவர்களுக்கான சிறந்த மாதப் பத்திரிகை

ஆசிரியர்:

"லால்ஜி" (ஜி. சதாசிவம்)

தனிப் பிரதி விலை அணு 2

வருட சந்தா (மலர் உள்பட) ரு. 1-8-0

முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் மட்டும் எழுதவும். மாதிரிப்பிரதி வேண்டுவோர் 0-2-6 ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.

"பாபுஜி" காரியாலயம்

38, நாகப்ப அய்யர் தெரு,

சென்னை 5.

தணிக்கை போர்டாரின் கொள்கை

அனுஷ்டிக்கப்படும் விதிகள்

[நம் மாஹாண சினிமாப்பட தணிக்கை போர்டார் சென்ற ஒரு வருஷ காலமாக புதிய கொள்கையுடன் படங்களை தணிக்கை செய்து வருவது நேயர்களுக்குத் தெரிந்திருக்கும். அவர்கள் அநுஷ்டித்து வரும், இனி அமுலிலிருக்கப் போகும் பட தணிக்கை விதிகள் என்னவென்பதை போலீஸ் கமிஷனரும் சினிமா தணிக்கை போர்டின் தலைவருமான ஸ்ரீ. ஏ. வி. பாத்ரோ வெளியிட்டிருக்கிறார். அவ்வறிக்கையை கீழே வெளியிட்டிருக்கிறோம். —ஆசிரியர்.]

பொதுக் கொள்கை

(1) படம் பார்ப்பவரின் ஒழுக்கத்தை குறைப்பதாயுள்ள எந்தப் படமும் அனுமதிக்கப்பட மாட்டாது. ஆதலால், குற்றங்கள், கொடுமைகள், தீச் செயல்கள், பாபங்கள் இவைகளுக்கு படம் பார்ப்பவர்கள் ஆதரவளிக்குமாறு செய்யக் கூடாது.

(2) சாதாரணமாக உள்ள தினசரி வாழ்க்கை, பொழுது போக்கிற்கு அவசியமான அளவில் மட்டும், காட்ட அனுமதிக்கப்படும்.

(3) மனிதனுல் ஏற்படுத்தப்பட்ட அல்லது இயற்கையாக ஏற்பட்ட சட்டதிட்டங்களைப் பழிப்பதோ, அதை மீறி நடக்கத் தூண்டப்படுவதோ அநுமதிக்கப்பட மாட்டாது.

அநுஷ்டான முறை

சட்டம் சம்பந்தமான குற்றங்கள்

சட்டம், நீதி இவைகளுக்கெதிரான பிரசாரத்தையோ, மற்றவர்கள் கற்றுக் கொள்ளக்கூடியபடி சட்டம், நீதி இவைகளை மீறி நடப்பதையோ காட்டக்கூடாது.

(அ) கொலை:— 1. பிறர் கற்றுக் கொள்ளக் கூடிய முறையில் கொலைக் காக்ஷிகளைக் காட்டக் கூடாது. 2. கோரக் கொலைகளை விவரமாய் காட்டக் கூடாது. 3. தற்கால ரீதியில் பழிவாங்குதல் நியாயமானதாய் கருதப்பட மாட்டாது.

(ஆ) குற்றங்கள் செய்யப்படும் முறைகள் விஸ்தரிக்கப் படக் கூடாது:— 1. பைப்பறி, இதர வகையான திருட்டு, கொள்ளை, பணப்பெட்டிகளை உடைப்பது, ரயில், பாலம், சுரங்கம், கட்டடம் இவைகளுக்கு வெடி வைத்துத் தகர்ப்பது, ஆகியவை எப்படிச் செய்யப்படுகிறதென்பதைக் காண்பிக்கக் கூடாது. 2. தீ வைக்கும் காக்ஷிகளுக்கும் இதே விதி தான். 3. துப்பாக்கி முதலியவைகளை உபயோகிப்பது அத்தியாவசியமான போது மட்டும் காட்டப்பட வேண்டும். 4. கள்ளத்தனமாய் சாமான்களைக் கொண்டு போவதையும் காட்டக் கூடாது. 5. சாராயம் முதலான மது பானங்களை கள்ளத்தனமாய் தயாரிப்பதைப் பற்றிய பேச்சே கூடாது.

(இ) மது அருந்தும் காக்ஷிகளுக்குத் தடை:— லாகிரி பானங்களை அருந்துவது சம்பந்தமான "ஆக்ஷேபகரமான காக்ஷிகள்" அநுமதிக்கப்பட மாட்டாது. 2. இதற்கு முன் தணிக்கை செய்யப்பட்டவை உள்பட எல்லாப் படங்களிலிருந்தும் இக் காக்ஷிகள் நீக்கப்படும். 3. இம் மாஹாணத்திற்கு வெளி நாட்டுப் படங்களை வரவழைப்பவர்கள், இந்த போர்டாரின் பார்வைக்கு அனுப்பும் படங்களில் மேற்சொன்ன காக்ஷிகளை நீக்கி விடுவது நலம் என்பதைத் தத்தம் படமுதலாளிகளுக்குத் தெரிவிக்க வேண்டும். 4. மது விலக்குப் பிரசாரப் படங்களில் மதுவின் தீமைகளை விளக்குவதற்காகக் காட்டப்படும் மதுபான காக்ஷிகளும், மது அருந்துவதை பரிகஸிப்பதற்கோ, வெறுக்கச் செய்வதற்கோ, அதை விஷம் என்றோ, அநாகரீகம் என்றோ, சுகாதாரக் கேடு என்றோ, சமூக விரோதமென்றோ விளக்குவ

தற்கோ காட்டப்படும் மது பானக் காக்ஷிகளும் அனுமதிக்கப்படும்.

இதற்கு மாருக, மதுவிலக்கையோ, அதை அமுலுக்குக் கொண்டுவந்த சர்க்காரையோ பரிகஸிக்கும்காக்ஷிகளும் மதுவிலக்குச் சட்டத்தை மீறும்படித் தூண்டும் காக்ஷிகளும், மது விலக்கிற்கு எதிர்ப்பிரசாரமான காக்ஷிகளும், மது "வருந்துவது தவறல்ல; நல்லது" என்று எந்தவிதமாகவோ காட்டப்படுவதும் "ஆக்ஷேபகரமான காக்ஷிகள்" எனப்படும்.

வெளி மாஹாணத்தில் தணிக்கை செய்யப்பட்டு இம் மாஹாணத்திற்கு வரும் படங்களும் இவ்விதிப்படியே புனர் பரிசிலனை செய்யப்படும்.

காதல், காமக் காக்ஷிகள்

விவாஹம், குடும்பம் ஆகியவையே புனிதமாகக் கருதப்படும். கீழ்த்தரமான கள்ள நட்புஅநுமதிக்கப்படுவதாகவோ, அல்லது வழக்கத்திலிருப்பதாகவோ சித்திரிக்கக் கூடாது.

(அ) கதைக்கு சில சமயம் அவசியமாயிருக்கும் போது கூட, விபசாரம், கள்ள நட்பு ஆகியவை கவர்ச்சிகரமாய் விஸ்தரிக்கப்படக் கூடாது. இவை நியாயமானதென்று தோன்றும்படியும் இருக்கக் கூடாது. ஆக்ஷேபகரமான படுக்கை அறை, ஸ்நான அறைக் காக்ஷிகளைக் காட்டக் கூடாது.

(ஆ) காமக் காக்ஷிகள் : *1.* கதைக்கு அத்தியாவசியமா இருந்தாலொழிய இவைகளைக் காட்டக் கூடாது. அப்படியே காட்டினுலும் அவை இந்தியக் கற்பு நெறிகளுக்கோ, உயர்தர சமூக வழக்கங்களுக்கோ முறன் பட்டதாய் இருக்கக் கூடாது. *2.* பொதுவாக, கீழ்த்தர எண்ணங்களேயுப், உணர்ச்சிகளையும் தூண்டும் வகையில் காமக் காக்ஷிகள் இருக்கக் கூடாது.

(இ) கற்பழித்தல், பலாத்காரம் :— *1.* இந்தக் காக்ஷிகள் கதைக்கு அத்தியாவசியமாய் உள்ள போது குறிப்பாக மட்டும் காட்டுவதாய் இருக்க வேண்டும்; விஸ்தாரமாய் சித்திரிக்கப்படக் கூடாது. *2.* இக் காக்ஷிகளை ஹாஸ்யத்திற்காகக் கையாளக் கூடாது.

(ஈ) *1.* காம விபரீதங்களை நடிப்பு மூலமாகவோ, குறிப்பு மூலமாகவோ, அல்லது வேறு எந்த விதமாகவோவேனும் காட்டுவது நிச்சயம் அநுமதிக்கப்பட மாட்டாது. *2.* கசையடி கொடுப்பதையோ, பெறுவதையோ, இதர கொடூரச் செயல்களையோ காட்டக் கூடாது. கதைக்கு அத்தியாவசியமாய் உள்ள போது மட்டும் இவைகளை குறிப்பாய் காண்பிக்கலாம்.

(உ) விபசாரத்திற்காக சிறு பெண்களையும், ஸ்திரீகளையும் அடிமைப் படுத்துவது பற்றிய படங்களையோ, காக்ஷிகளையோ தயாரிக்கவே கூடாது.

(ஊ) கல்வி போதனைப் படங்களைத் தவிர மற்ற படங்களில் சிற்றின்பம், சுகாதாரம், கர்ப்பத் தடை, காம வியாதிகள் இவைகளைக் காட்டக் கூடாது.

(எ) குழந்தை பிரசவத்தை நேரிடையாகவோ, நிழல் ரூபமாகவோ காட்டவே கூடாது.

(ஏ) குழந்தைகளை ஆண், பெண் குறிகள் தென்படும்படி காட்டலாகாது.

அசங்கியக் காக்ஷிகள்

கீழ்த்தரமான, அருவெறுப்பளிக்கும் அருவையை உண்டு பண்ணும் காக்ஷிகளை சித்திரிக்க வேண்டியிருக்கும் போது, அவைகளை, படம் பார்ப்பவர்களின் ரஸனைக்குப் பங்கம் ஏற்படுத்தக் கூடாது என்ற நல்லெண்ணத்துடன் தயாரிக்க வேண்டும்.

ஆபாசக் காக்ஷிகள்

பேச்சு, செய்கை, பாட்டு, ஹாஸ்யம், குறிப்பு இவை எதிலும் ஆபாசம் கலந்திருக்கக் கூடாது. இது படம் பார்ப்பவர்களில் ஒரு சிலரே புரிந்து கொள்ளக் கூடியதா யிருந்தால் கூட அநுமதிக்கப் பட மாட்டாது.

புனிதமற்ற காக்ஷிகள்

புனிதமற்ற ஆபாசக் காக்ஷிகளும், பேச்சுகளும் படங்களில் சேர்க்கப் படக் கூடாது.

ஆடைகள்

(அ) நிர்வாணம் படங்களில் அனுமதிக்கப்படவே மாட்டாது. நேரிடையாகவோ நிழல் ரூபமாகவோ, இதர நடிக, நடிகைகளை பிம்பம் மூலமாகவோ நிர்வாணமாய் காட்டக் கூடாது.

(ஆ) ஒழுங்கற்றமுறையில்ஆடைகளைக் களையும் காக்ஷிகளையும் காட்டலாகாது.

(இ) சாதாரணமாக, ஆடையால் மறைத்து வைக்கப்படும் பாகத்தை ஆடையின்றி திறப்பாயும், ஆபாசமாயும், அளவுக்கு அதிகமாகவும் காட்டுவது கூடாது.

(ஈ) அளவுக்கு அதிகமாக உடலமைப்பையும், உடலின் அங்க மேடு பள்ளங்களையும் வெளிக் காட்டுவதற்கென்றே அணியப்படும் நாட்டிய உடைகள் அநுமதிக்கப்பட மாட்டா. அதே போலவே, நடனம் ஆடும் போது, ஆபாசமான முறையில் அங்கங்களை அசைப்பதையும் அநுமதிக்க முடியாது.

(உ) ஒரு பாத்திரம் எந்த நபரைச் சித்திரிக்கிறதோ அந்த நபரையோ,அவருடைய ஜாதி, மதம், அல்லது கூட்டத்தையோ, பழிப்பதாகவோ, அவமதிப்பதாகவோ, வெறுப்பை உண்டு பண்ணுவதாகவோ, அலக்ஷியம் செய்வதாகவோ இருக்கும்படி ஆடை அலங்காரம் செய்யக் கூடாது.

(ஊ) பார்வதி, மஹாலக்ஷ்மி, ஸரஸ்வதி சீதை, திரௌபதி, மண்டோதரி, திருமூர்த்திகள், இதர கடவுள்கள், ரிஷிகள், மஹான்கள் முதலியோரைப் படத்தில் காட்டும் போது, அந்த பாத்திரத்திற்குறிய கௌரவத்தையோ, பூஜிதத்தையோ, பாதிக்கும்படியான முறையில் ஆடையலங்காரம் இருக்கக் கூடாது.

நடனங்கள்

அநாகரிகமான, அல்லது தாறுமாறுன நடனங்கள் அநுமதிக்கப்பட மாட்டா.

மதம்

(அ) எந்த ஒரு மதத்தையும் பழிப்பதான படமோ காக்ஷியோ அநுமதிக்கப்பட மாட்டா.

(ஆ) மத குருக்களை ஹாஸ்யப் பாத்திரங்களாகவோ, 'வில்லன்'களாகவோ, அல்லது பரிஹாஸத்திற்குரிய முறையிலோ காட்டக் கூடாது.

(இ) எந்த ஒரு குறிப்பிட்ட மதத்தின் சடங்குகளையும் கவனத்தோடும், மரியாதையுடனும் காட்ட வேண்டும்.

(ஊ) எந்த மதத்தையாவது, புராணத்தையாவது, பரிஹஸிப்பதாகவோ, பழிப்பதாகவோ, அவமதிப்பதாகவோ, பொது ஜனங்கள் அவற்றிடம் கொண்டுள்ள மதிப்பையும், பக்தியையும் குறைப்பதாகவோ உள்ள கதைகள், காக்ஷிகள், நடிப்பு ஆகியவை அநுமதிக்கப்பட மாட்டா.

(உ) தர்மம், நீதி, ஈகை, கற்பு போன்ற உயர்ந்த லக்ஷியங்கள் பரிஹஸிக்கப்படக் கூடாது.

காட்டக்கூடாத இடங்கள்

விபசார விடுதி, தாஸி வீடு, கஞ்சாக் கடை, சாராயக் கடை முதலியவைகளை, கதைக்கு அத்தியாவசியமாய் இருந்தாலொழிய காட்டக்கூடாது. அப்படிக் காட்டும் போதுகூட அவைகளை விரும்பக் கூடிய முறையில் சித்திரிக்கக் கூடாது.

தேசீய உணர்ச்சி

எந்த தேசத்தினுடைய, கக்ஷியினுடைய, கோஷ்டியினுடைய அல்லது மதத்தினுடைய கொடிகளும் அதற்குரிய கௌரவத்துடன் காட்டப்பட வேண்டும்.

தலைப்புகள்

காம விகாரமான, அநாகரிகமான, ஆபாசமான தலைப்புகள் (எழுத்துகள் மூலம்) காட்டப்படக் கூடாது.

வெறுக்கத்தக்க விஷயங்கள்

கீழே கொடுக்கப்பட்டுள்ள விஷயங்கள் ரஸனை கெடாத வகையில் சித்திரிக்கப்பட வேண்டும்.

(1) தூக்கிடுதல் அல்லது கொடூர தண்டனைகள்.

(2) சித்திரவதை.

(3) கொடூரம், மிருகத்தனம்.

(4) மனிதர்களுக்கோ மிருகங்களுக்கோ சூடு போடுதல்.

(5) குழந்தைகளையோ, மிருகங்களையோ ஹிம்சித்தல்.

(6) பெண்களை விற்பது, அல்லது பெண்கள் தம் கற்பை விற்பது.

(7) ரண சிகித்ஸைகள்.

பிரம்ம லோகம்

வேதாள உலகம்

ஸ்ரீ. மெய்யப்பச் செட்டியார் தம்முடைய படங்களில் புதிய புதிய அம்சங்களைப் புகுத்துவதில் பெயர் பெற்றவர். பவளக்கொடி கதையை ஒரு அருமையான இசை நாடகமாகப்புகுத்தியிருக்கிறாராம்-தாம் டைரெக்ட் செய்து தயாரித்திருக்கும் "வேதாள உலக"த்தில். வேதாளத்தின் தர்பாரில் பவளக்கொடி நாடகம் நடப்பதாக சித்திரித்திருக்கிறாராம். ராதா-கிருஷ்ணன் நாட்டியம் நடக்கிறது. ராதையிடம் கண்ணன் பவளக்கொடியின் கதையைக் கூறுகிறார். கண்ணனாக பத்மினியும், ராதையாக லலிதாவும் நடிக்கின்றனராம். குமாரி கமலா தான் பவளக்கொடியாம். இந்த இசை நாடகத்தில்,பெரிய நாயகி, பகவதி, ரத்னம், ராஜேஸ்வரி இவர்கள் பாடியிருக்கும் ஒன்பது பாட்டுகளும் ஒன்பதுமணிகளாக இருக்குமாம், வேதாள உலகம் 'மேனா' வின் முந்திய படங்களையெல்லாம்விட பல வகையில் சிறந்து விளங்குமென்றும், சீக்கிரமே திரையிடப்படுமென்றும் தெரிகிறது.

பரதன்

ஸ்ரீ. ஏவி. எம்., "பரத்மிலப்" ஹிந்திப் படத்தை தமிழ் வசனங்கள் பாடல்களுடன் தயாரித்து முடித்து விட்டார். சீக்கிரமே "பரதன்" என்ற பெயரில் இந்தப் படமும் திரையிடப்படுமாம்.

கீத காந்தி

ஒரு வயோதிகருக்கு நான்கு பையன்கள். ஒரு பையன் தீவிர காங்கிரஸ் வாதி, மற்றொருவன் கம்யூனிஸ்ட். இப்படி ஒவ்வொரு பையனும் ஒரு கக்ஷியைச் சேர்ந்தவன். இவர்களைப் பற்றியது தான் "கீத காந்தி" கதை. இப்படத்தில் பி. எஸ். சரோஜா, பி. ஏ. பெரிய நாயகி, டி. ஆர். ராமச்சந்திரன், பி. எ. குமார், டி. கே. கல்யாணம், டி. கே. கோவிந்தன், டி. எஸ். மஹாதேவன் ஆகியோர் நடிக்கின்றனர். ஸ்ரீ. கே. சுப்ரமணியம்தான் படத்தின் டைரெக்டர்.

முத்துத்தாண்டவர்

"மாவன்றா" முத்துத் தாண்டவர் கதையை நியூ டோன் ஸ்டுடியோவில் தயாரிப்பதற்காக பூஜையை சமீபத்தில் நடத்தினராம். கதை, வசனம் "இளங்கோவனு"டையதாம். டி. ஆர். மஹாலிங்கமும், ஏ. என். பெரிய நாயகியும் பிரதம பாகங்களில் நடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளார்களாம்.

கட்டபொம்மு

சேலம் ரத்னா ஸ்டுடியோவின் சொந்தப் படமாம் இந்த "கட்டபொம்மு". பிரதம பாகத்தில் நடிக்க பி. யு. சின்னப்பாவும், டைரெக்ட் செய்ய எஸ். நோடானியும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

விஜயகுமாரி

ஜூபிடர் பிக்சர்ஸின் இந்தப் படத்திற்கான (டி. ஆர். ராஜகுமாரி நடிக்கும்) பாகங்கள் இப்பொழுது கோவை ஸென்ட்ரல் ஸ்டுடியோவில் படமாக்கப் பட்டு வருகின்றனவாம். டி. ஆர். ராஜகுமாரி இப்படத்தில் இரு பாத்திரங்களில் நடிக்கிறாராம். ராம்சிங் ராஜகுமாரியை ஆட்டி வைக்கும் மந்திரவாதியாக நடிக்கிறார். படத்தில் அவரை ஒரு நொண்டியாக சித்திரிக்கப் போகிறார்களாம். இப்படத்தில் புளிமூட்டையின் சிஷ்யனாக ஹாஸ்ய நடிகர் சாயிராம் நடிக்கிறாராம்.

பவளக்கொடி

பக்ஷிராஜா பிலிம்ஸின் பவளக் கொடியில் டி. ஆர். ராஜ குமாரி சம்பந்தப்பட்ட காக்ஷிகள் இப்பொழுது படமாக்கப்பட்டுவருகின்றன. மற்றும் இப்படத்தில் டி. ஆர். மஹாலிங்கம், டி. ஈ. வரதன், எம். எஸ். சரோஜினி, கிருஷ்ணன்,மதுரம்,முதலியோர் நடிக்கின்றனர். படத்தை ஸ்ரீராமுலு நாயுடு டைரெக்ட் செய்து வருகிறார்.

ஸ்ரீ ஆண்டாள்

இப்படத்தின் ஷூட்டிங் முடிவடைந்து விட்டது. இப்பொழுது சில நகாஸ் வேலைகள் நடைபெற்று வருகின்றன. அது முடிந்ததும் படம் ஆகஸ்ட் 19-ந் தேதி திரையிடப்படுமாம். பி. எஸ். கோவிந்தன், யூ. ஆர். ஜீவரத்தினம், சௌதாமினி முதலியோர் நடிக்கும் இந்தப் படத்தை வேல்சாமிக் கவி மிகுந்த சிரத்தையுடன் டைரெக்ட் செய்துள்ளாராம்.

மின்மினி

இப்படத்தின் ஷூட்டிங் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இப்படத்தில் யோக மங்களமும் நடிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறார்.

சம்ஸார நௌகா

ஒரு சாதாரண சமூகப் படம்

ஸம்ஸாரநௌகா கதை தமிழ் நாட்டிலும், கன்னட தேசத்திலும் நாடகமாக நடிக்கப்பட்டு அதிபிரபலம் அடைந்திருக்கிறது. சில வருஷங்களுக்கு முன் இக் கதை கன்னடப் படமாகத் தயாரிக்கப்பட்டது; சுமாரான வெற்றியையும் பெற்றது. பின்னர் இதே கதை தமிழ் நாடகமாகவும் ஆக்கப்பட்டு சில ஊர்களில் நடிக்கப்பட்டது. அந்தத் தமிழ் நாடகத்தில் நடித்த சில முக்கிய நடிகர்களை வைத்துக் கொண்டே (ஸ்டார் கம்பைன்ஸ்-பிரகதி கூட்டுத் தயாரிப்பான) இந்த "சம்ஸார நௌகா" தமிழ்ப் படம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

மேடையில் பிரபலமடையும் நாடகங்களை சினிமாப் படமாகத் தயாரிக்கும் வழக்கம் மேனாட்டிலும் இருந்துவருகிறது. ஆனால் இதுமாதிரி செய்யும் போது "நாடகம் வேறு, சினிமா வேறு" என்ற விஷயத்தை மறந்துவிடக் கூடாது. நாடகத்தில் சில அம்சங்கள் பிரமாதமாய் பாராட்டப்படும். ஆனால் அவற்றையே சினிமாவில் காட்டும் போது அவை சப்பென்று வெறுக்கக் கூடியதாய் இருக்கும். நாடகக் கதையை சினிமாக் கதையாக மாற்றும் கதாசிரியர் இதையெல்லாம் மறந்துவிடக்கூடாது.

இந்தப் படத்தை பார்க்கும்போது மேற்சொன்ன பொறுப்புகளை இதன் கதாசிரியர் சரிவர உணர்ந்துகொள்ளவில்லை என்று தெரிகிறது. நாடகக்கதை அநேகமாக அப்படியே படமாக்கப்பட்டிருக்கிறது. அதன் விளைவாக சில கட்டங்கள் சப்பென்றிருக்கின்றன. வேறு சில கட்டங்களோ ஆயாஸத்தை உண்டு பண்ணுகின்றன. மொத்தத்தில் இப்படம் விறுவிறுப்பற்று விளங்குகிறது.

இந்தக் கதையை எழுதிய எச். எல். என். சிம்ஹாவே இப்படத்தை டைரெக்ட் செய்திருக்கிறார். நாடகக் கதையை அப்படியே படமாக்க முயன்றிருக்கிறாரே தவிர, அவரது டைரெக்ஷன் திறமை வேறு விதமாக வெளிப்படவில்லை. பல இடங்களில் கவனக் குறைவும், அநுபவமின்மையும் தென்படுகிறது.

கதாநாயகன் சுந்தரமாக பி. ஆர். பந்துலு நடிக்கிறார். காதல் கட்டங்களில் அவரது நடிப்பு சோபிதமாக இல்லை. அவருடைய வயது முதிர்ந்த தோற்றமே இதற்குக் காரணம். சோகக் காக்ஷிகளில் அவர் 'அநுபவித்து' நடிக்கிறார்; ஆனால் சோபிக்கவில்லை. நண்பர்களால் அவமதிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவரது நடிப்பு மிகையாகத் தோன்றுகிறது. ஆங்கிலத்தில் புலம்பாமல் இருந்திருக்கலாம்.

அசட்டு மாதுவாக டி. ஆர். ராமச்சந்திரன் தத்ரூபமாய் நடித்திருக்கிறார். பாத்திரத்தை நன்கு உணர்ந்து கொண்டு பொருத்தமாக நடித்திருக்கிறார் என்று சொல்லலாம்.

இக் கதைக்கே 'டிக்கி'யின் பாத்திரம் ஒரு ஜீவநாடி. ஆனால் இப்படத்தில் 'டிக்கி'க்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. சந்தர்ப்பம் கொடுத்தவரை கச்சிதமாகவே நடித்து முடித்திருக்கிறார் விகடம் கிருஷ்ணமூர்த்தி. ஆச்சாரிய சுகதேவாக நடிக்கும் உபேந்திராவும், தோட்டக்காரனாக வரும் கல்யாணமும் தம் பாகங்களை நன்றாக நடித்திருக்கிறார்கள்.

கதாநாயகி சரளாவாக நடிக்கும் டி. பிரேமாவதியின் நடிப்பு, சிருங்கார கட்டங்களைவிட சோக கட்டங்களில் சோபித்திருக்கிறது. உயிருக்கு மன்றாடும் தன் குழந்தையைக் காப்பாற்ற வேண்டுமென ஸ்வாமி படத்திற்கு முன்னால் கதறும் காக்ஷியிலும், வாழ்க்கையில் வெறுப்புற்று தற்கொலை செய்துகொள்ள முயற்சிக்கும் சந்தர்ப்பத்திலும் அவரது நடிப்பு பார்ப்பவர் மனம் கலங்கும்படி அவ்வளவு தத்ரூபமாயிருக்கிறது. ஆனால் தன் கணவன் தந்தையின் பங்களா வாசலில் ஹிம்சிக்கப்படும் காக்ஷியில் அவரிடம் படபடப்பையே காணோம். அவர் ஆடும் நாட்டியம் பரவாயில்லை.

சுசீலாவாக நடிக்கும் சூர்ய குமாரி "ரகுபதி ராகவ ராஜாராம்", "வைஷ்ணவ ஜனதோ" ஆகிய இரண்டு பாட்டுகளை உருக்கமாகப் பாடியிருப்பதோடு சரி. அவருடைய தோற்றமும் நடிப்பும் வெறுப்பையே உண்டு பண்ணுகின்றன.

கிரிஜாவின் பாகத்தை எம். ஜே. ஆண்டாள் நன்றாக நடித்திருக்கிறார். அவர் ஆடும் நூதன நாட்டியமும் நன்றாக

இருக்கிறது. குண்டுபாயாகத் தோன்றும் டி. கே. மதுரம் இய[illegible]யாகப் பேசி நடித்திருக்கிறு[illegible] [illegible]ளைப் பற்றி குறிப்பிட [illegible] [illegible]ல்லை.

படத்தில் அதிகமான தன[illegible] இடம் பெற்றிருக்கின்றன. உதாரண மா[illegible]ண்பர்களால் அவமதிக்கப் பட்ட தும[illegible]த்தரம் (பி. ஆர். பந்துலு) ஆங்கிலத்தில் நீண்டதோர் பிரசங்கம் செய்கிறுர். இம்மாதிரித் தனி மொழிகள் நாடக மேடையில் நல்ல ஆதரவைப் பெறும். ஆனல் படங்களில் எதிர் மாறன பலனைத் தான் உண்டு பண்ணுகின்றன. படத்தில் வரும் துஷ்யந்தன்—சகுந்தலே நடனம் ரஸிக்கும்படி இல்லை. இது அனுவசியமாகத் திணிக்கப் பட்டிருப்பதாகவே தோன்றுகிறது. பேரிச்சம் பழக்காரன் பாடிக்கொண்டே வியாபாரம் செய்வது அபத்தமாகப் படுகிறது. ஆச்சாரிய சுகதேவின் பஜனை அலுப்புத் தட்டுகிறது.

ஒளி, ஒலிப் பதிவுகள் சாதாரணமாகவே உள்ளன சில காக்ஷிகள் துல்லியமாயில்லை; அதே போல் சில இடங்களில் சம்பாஷணைகளும் சரிவரக் கேட்கவில்லை. மொத்தத்தில், ''சம்ஸார நௌகா'' ஆபாஸமற்ற ஒரு சாதாரண சமூகப் படம் என்று சொல்லலாம்.

—''ராஜஸ்ரீ''

பிடி சாமியாரை

(ஆ[illegible]யை: ஸி. ஆர். ராஜம்மா. கிடை[illegible]குமிடம்: 'பாப்பா' பதிப்ப[illegible] 38 நாகப்ப[illegible]யர் தெரு, திருவல்[illegible]க்கேணி, சென்னை. 5)

சிறுவர்களுக் கென்று சிறந்தமுறையில் எழுதப்பட்ட ஒரு சிறு கதை. குழந்தைகளுக்கென்று தனியாக இம் மாதிரியான சிறிய அளவில் புத்தகம் வந்ததில்லை. கதை மிகவும் சுவாரஸ்யமாகவும், அதிக ஆவலைத் தூண்டும்படியான வகையிலும் அமைந்திருக்கிறது. கண்ணன் என்னும் ஒரு சிறுவன் ஒரு போலிச் சாமியாரிடமிருந்து சாமர்த்தியமாக ஆபத்திலிருந்து தப்பித்துக் கொண்டதை ஆசிரியர் மிகவும் எளிய நடையில் ஹாஸ்யம் ததும்ப எழுதியிருக்கிறுர். சிறுவர்களனைவருக்கும் இது மிகவும் பிடித்திருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டிய இந்த புஸ்தகத்தின் விலை மூன்றே அணுதான்.



''சம்ஸார நௌகா''வில் பி. ஆர். பந்துலுவும், திருச்சூர் டி. பிரேமாவதியும்.

குண்டூசி டைரி

ஜூன், 1948

தேதி

2 "நவஜீவனம்" தமிழ்ப் படத்தின் பூஜை விழா ஜெமினி ஸ்டுடியோவில் நடைபெற்றது.

4. நடிகர் டி. எஸ். மஹாதேவனின் திருமணம் நடைபெற்றது.

5. "பக்த ராமதாஸ்" வெளியூர்களில் திரையிடப் பட்டது.

7. சினிமா ரஸிகர்கள் சங்கத்தின் கூட்டமொன்று நடைபெற்றது.

9. சேலத்தில் ரத்னு ஸ்டுடியோவை மந்திரி கனம் பி. கோபால் ரெட்டி ஆரம்பித்து வைத்தார்.

10. பாரகன் டாக்கீஸில் "பக்த ஜனு" வர்த்தகக் காக்ஷி நடைபெற்றது.
சேலம், செவ்வாய்ப் பேட்டையில் ஷண்முகா டாக்கீஸ் ஆரம்பமாயிற்று.

11. "பால ராஜு" தெலுங்குப் படம் சென்னை ஸாகர், ஸெலெக்ட் ஆகிய இரு தியேட்டர்களிலும் திரையிடப் பட்டது.

14. ஜெமினி "ஞான சௌந்தரி" தணிக்கைக் காக்ஷி நடந்தது.

16. ஜெமினி "ஞானசௌந்தரி" பத்திரிகைக் காக்ஷி வெல்லிங்டனில் நடைபெற்றது.
வரலக்ஷ்மி பில்ம்ஸ் "நாட்டிய ரம்பா"வின் பூஜை விழா நெப்டியூன் ஸ்டுடியோவில் நடந்தது.

17. நடிகர் டி. வி. நமசிவாயத்தின் திருமணம் திருவாரூரில் நடைபெற்றது.

18. ஜெமினி "ஞானசௌந்தரி" சென்னை ஸ்டார், கிரௌன் ஆகிய இரு தியேட்டர்களிலும், வெளியூர்களிலும் திரையிடப்பட்டது.

20. சினி டெக்னிஷியன்கள் சங்க வருஷாந்திரக் கூட்டம் நடந்தது.

22. தென்னிந்திய சினிமாத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக்கூட்டம் நடந்தது.

24. "இமயத்தில் நாம்" என்ற நாடகம் டி. கே. எஸ். சகோதரர்களால் கோவையில் ஆரம்பிக்கப் பட்டது.

25. சினிமா ரஸிகர்கள் சங்கத்தின் பொதுக்கூட்டம் நடைபெற்றது.
"மதனமாலா" சென்னை, ஸாகரில் திரையிடப்பட்டது.

26. பாரகன் டாக்கீஸுக்கு நிரந்தர லைசென்ஸ் கொடுக்க போலீஸ் கமிஷனர் மறுத்து விட்டார்.

30. எழுத்தாளரும், சினிமாக் கதை வசன கர்த்தாவுமான "புதுமைப் பித்தன்" காலமானார்.

Printed by P. Arunachalam at the Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras-1. Edited and Published by P. R. S. Gopal (Gundoosi), at 246, Thambu Chetty Street, Madras. 1.